Seba. Pushpanathan
THURKA BOOK SHOP CHUNNAKAM

பக்கங்கள்: 20 [illegible]0 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | பங்குனி 29, செவ்வாய்க்கிழமை 11.04.2017 | கதிர் 157

உங்கள் மனம் விரும்பும்
வேலைவாய்ப்பை
உடன் பெற்றுக்கொள்ள
WINSTAR
JOB BANK
106, தபாற்பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
web: www.winstarjaffna.com
Fb : winstarjob bank
021 320 2789

# தமிழருக்குத் தீர்வு தராவிட்டால் அரசை வெறுக்கும் நிலை வரும்!

## வவுனியாவில் வைத்து சம்பந்தன் எச்சரிக்கை


சம்பந்தனும், சுமந்திரனும் கைகள் பற்றி அளவளாவும் காட்சி

வவுனியா, ஏப்ரல் 11

தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டால் அரசாங்கத்தை மக்கள் வெறுக்கும் சூழ்நிலை உருவாகும். இதனை இந்த அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

பக்கம் 03 »

'லைக்கா' தலைவர் சுபாஸ்கரன் அறிவிப்பு:

## வடக்கு, கிழக்குக்கு ரூ.20 கோடியில் விசேட சுகாதாரத் திட்டம் தயார்!

### பாதிக்கப்பட்ட மக்களுக்கு மொத்தம் 600 வீடுகள்




வவுனியா, ஏப்.11

இலங்கையின் வடக்கு கிழக்கில், இருபது கோடி ரூபா பெறுமதியான பாரிய சுகாதார அபிவிருத்தித் திட்டத்தை மேற் கொள்ளத்தாங்கள் தயாரென, லைக்கா ஞானம் அறக்கட்டளையின் இணைத் தலைவர்களில் ஒருவரும், லைக்கா குழுமத்தின் தலைவருமான

பக்கம் 18 »

## கேப்பாபிலவுக் களத்துக்கு வருமாறு தமிழ் அரசியல்வாதிகளுக்கு அழைப்பு

### முடிவெடுக்க இன்று காலை கூடுமாறு வேண்டுகோள்

கேப்பாபிலவு, ஏப்.11

முல்லைத்தீவு கேப்பாபிலவு மக்களின் போராட்டம் நேற்று 40ஆவது நாளாகவும் தொடர்ந்து நடைபெற்ற நிலையில், தங்கள் பிரச்சினையில் அரசோ அரசியல்வாதிகளோ எந்தவித அக்கறையும் இன்றி அமைதியாக, மௌனமாக இருக்கின்றனர் என மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

பக்கம் 18 »

## மக்களுக்குப் பின்னால் ஒளிக்கிறது கூட்டமைப்பு

### சிவசக்தி ஆனந்தன் காட்டம்



வவுனியா, ஏப்.11

மக்களை வழிநடத்த வேண்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதற்போது மக்களுக்கு பின்னால் ஒளிந்து நிற்கின்றது. அதனால், தமிழ் மக்கள் தமது பிரச்சினைகளுக்காகத் தாமே வீதியில்

பக்கம் 18 »

## பொறுப்புக் கூறலின் அடிப்படையில் நீதியான விசாரணை நடத்துங்கள்!

### வவுனியாவில் வைத்து பிரிட்டிஷ் எம்.பி. வற்புறுத்து



வவுனியா, ஏப்.11

உள்நாட்டுப் போரில் இறந்தவர்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூறல் அடிப்படையில் நீதியான விசாரணை நடத்த வேண்டும் எனப் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் மக்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் தலைவருமான ஜேம்ஸ் பெரி தெரிவித்துள்ளார்.

வவுனியா - நெடுங்கேணிப் பிரதேச செயலகத்திற்

பக்கம் 18 »

## உலகம் முழுவதும் குண்டுச் சத்தம்; இலங்கையில் அமைதியான சூழல்!

### புதிய அத்தியாயம் என்கிறார் சபாநாயகர்



மட்டக்களப்பு, ஏப்.11

உலகம் முழுவதிலும் ஆங்காங்கே குண்டுச் சத்தங்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றன. ஆனால், இலங்கையில் மிகவும் அமைதியான அரசியல் சூழ்நிலை

பக்கம் 18 »

## மருத்துவர் சங்கம் மீது பாய்கின்றார் உயர்கல்வி அமைச்சர்

கொழும்பு, ஏப். 11

இலங்கையின் மருத்துவத் துறைக் கல்வியில் தலையிடுவதற்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினருக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

உயர்கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று ஊடகங்களுக்குக் கருத்து

பக்கம் 18 »

## நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும் என்கிறார் சுமந்திரன்!

### தீர்வுக்கு ஒரே வழி புதிய அரசமைப்புத்தான் எனவும் வலியுறுத்து



தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு புதிய அரசமைப்பு அவசியம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பி.பி.ஸியின் சிங்கள சேவையான சந்தேசயவுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்பட வேண்டும். சிறுபான்மையினர் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு நிறைவேற்று அதிகார

பக்கம் 18 »

அளப்பு அருணாசலம்



குண்டுச் சத்தம் இல்லை என்றால் அமைதி என்று அர்த்தமோ...!

## புலிகளது மின் உபகரணம் இயங்கு நிலையில் மீட்பு!

தமிழீழ விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப்பட்ட மின் உபகரணம் ஒன்று நந்திக்கடல் பகுதியில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.

அந்த மின் கட்டுப்படுத்தி உபகரணத்தை விடுதலைப் புலிகளின் இலத்திரனியல் தொழில் நுட்பப் பிரிவினர் உருவாக்கியிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

இந்த மின் கட்டுப்படுத்தி உபகரணத்தை விடுதலைப் புலிகள் தொலைத் தொடர்பு கருவிகளை இயக்குவதற்கு பயன்படுத்தி இருந்தனர் என்று கூறப்படுகின்றது.

12 வோல்ட் நேரோட்ட மின் சாரத்தை இந்த மின்கட்டுப் படுத்தியை பயன்படுத்தி 9 வோல்ட் நேரோட்ட மின்சாரமாக, துல்லியமாகக் குறைக்கும் திறன் கொண்டதாக இந்த மின்கட்டுப்படுத்தி காணப்படுகின்றது.

2009 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது இந்த மின் கட்டுப்படுத்தி உபகரணத்தை விடுதலைப் புலிகள் கைவிட்டுள்ளனர்.

இந்த நிலையில் விடுதலைப் புலிகளால் கைவிடப்பட்டு, தற்போது மீட்கப்பட்ட இந்த மின் உபகரணம் 8 ஆண்டுகள் கடந்த நிலையிலும், இயங்கும் நிலையில் உள்ளது என்று தெரிவிக்கப் படுகிறது. (ஐ)

## அராலி பெரியம்பிரான் ஆலய கும்பாபிஷேகம்

வட்டுக்கோட்டை, ஏப்.11

அராலி தெற்கு மாவத்தையம்பதி அருள்மிகு ஸ்ரீ பெரியதம்பிரான் ஆலய மஹா கும்பாபிஷேகப் பெரு விழா நாளை புதன்கிழமை காலை 9.00 மணி முதல் 10.30 மணி வரையுள்ள சுப முகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 9. மணியிலிருந்து மாலை 5 மணி வரை எண்ணெய்க் காப்புச் சாத்தும் வைபவம் இடம்பெறும். (இ)

# தீர்வு வேண்டுமென்றால் சர்வதேசத்தை விட்டுவிட்டு அரசாங்கத்துடன் நேரடியாகப் பேச முன்வாருங்கள்!

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க தமிழ்க் கூட்டமைப்புக்கு ஆலோசனை

நீண்டகால அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்றால் தமிழர் தரப்பு நேரடியாக அரசுடன் பேச்சுக்கு வரவேண்டும். அதை விடுத்து சர்வதேசத்தை வரவழைத்துத் தீர்வு காண நினைத்தால் அது ஒரு போதும் சாத்தியமற்றதாகும்.

-இவ்வாறு அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.



தேசிய பிரச்சினைக்கும், சர்வதேச அழுத்தங்களுக்கும், பொருளாதார சிக்கல்களுக்கும் தீர்வு காணும் வரையில் நல்லாட்சி அரசு கலைக்கப்படாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் தேர்தல்களின் பின்னர் நல்லாட்சி அரசு பிளவுபடும் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட சிலர் கருத்து தெரிவித்துள்ளமை மற்றும் சர்வதேச பொறுப்புக் கூறல் விடயம் தொடர்பில் - அரசின் நிலைப்பாடு தொடர்பில் ஊடகவியலாளர்களது கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு மாத்திரம் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற் கொண்டு அதன் மூலம் அரசியல் செய்யும் யுகம் கடந்த ஜனாதிபதி தேர்தலுடன் முடிவுக்கு வந்துள்ளது.

இந்த அரசு நாட்டின் சகல பகுதியிலும் அனைவருக்கும் சென்றடையும் வகையில் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

சுகாதார ரீதியிலும், கல்வி மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் சகல பகுதிகளுக்கு சமமான வகையில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இலங்கையை பொருளாதார மத்திய நிலையமாக மாற்றி, அதன் மூலம் நாட்டின் வறுமை மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் அரசு சகல முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது.

### ஆட்சி மாறும் கனவு

ஒரு சிலர் போயா தினங்களைக் கணக்கில் கொண்டு அதன் மூலம் ஆட்சியை மாற்றுவதாகக் கூறி வருகின்றனர். இரண்டு வெசாக் போயாவில் ஆட்சி மாறும் எனக் கனவு கண்டு வருகின்றனர். எனினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் நல்லாட்சி அரசு இந்த நாட்டுக்கு வேறு ஓர் அரசியல் பாதையை வெளிப்படுத்தியுள்ளது.

அடுத்த தேர்தலின் போதும் தனித் தனியாக நாம் தேர்தலில் போட்டியிடலாம். எனினும், உள்ளூராட்சி தேர்தலின் பின்னும் பொதுத் தேர்தலின் பின்னும் அதேபோல் ஜனாதிபதி தேர்தலின் பின்னரும் பிரதான இரண்டு கட்சிகளும் இணைத்து ஆட்சியை முன்னெடுத்துச் செல்லும் என நாம் உறுதிப்படுத்துகின்றோம்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படும், அதன் மூலம் ஆட்சி கவிழும் என்று கனவு காணும் அனைவருக்கும் நாம் ஒன்று சொல்ல விரும்புகின்றோம்.

### நல்லாட்சி நதி வற்றாத நதி

இந்த நல்லாட்சி நதி மீண்டும் திரும்பாது. சிறு சிறு ஏற்றம் இறக்கத்துடன் நதி வளைந்து சென்றாலும் ஒரு போதும் வற்றப்போவதில்லை என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

இந்த நாட்டின் அபிவிருத்தி மற்றும் தேசிய பிரச்சினைகள் மற்றும் சர்வதேசப் பிரச்சினைகள் அனைத்தையும் வெற்றிகொண்டு அதன் மூலம் நாட்டில் மறு மலர்ச்சி ஒன்றை உருவாக்கும் வரையில் நல்லாட்சி அரசின் பயணம் தொடரும்.

அதேபோல இன்று வடக்கு, கிழக்கில் இனவாதம் பேசிக் கொண்டு அதன் மூலம் மீண்டும் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையிலும் வடக்கு, கிழக்கின் அரசியல் பயணத்தைக் காரணமாக வைத்துக் கொண்டு அதன் மூலம் ஆட்சியைக் கவிழ்க்கலாம் என முயற்சிக்கும் நபர்களுக்கு எமது அரசின் மூலம் எந்தவித வாய்ப்புகளும் ஏற்படுத்திக்கொடுக்க முடியாது.

### இனவாதத்துக்கு இடமில்லை

புதிய அரசமைப்பின் மூலம் இனவாதம் பரவுவதையோ அல்லது நாட்டை இரண்டாக பிளவு படுத்துவதையோ நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வதேச தரப்புடன் இணைந்து நாட்டைப் பிரிக்க எந்த நடவடிக்கை எடுத்தாலும் அதற்கு நல்லாட்சி அரசே தடையாகச் செயற்படும் என்பதை மறந்துவிடக் கூடாது. நாட்டின் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்றால் தமிழர் தரப்பு அரசுடன் பேச்சுக்கு வரவேண்டும். அதை விடுத்து, சர்வதேச தரப்பை வரவழைத் துத தீர்வு காண நினைப்பது ஒரு போதும் வெற்றியளிக்காது.

பொறுப்புக் கூறல் விடயத்தில் அரசு சரியான முறைமையைக் கையாண்டு வருகின்றது. நாம் எமது உள்ளக பொறிமுறை மூலமாகப் பிரச்சினைகளைத் தீர்க்க செயற்பட்டு வருகின் றோம். -என்றார். (ஐ)

## ஒஸ்மானியாவில் நாளை இலவச கண் பரிசோதனை

யாழ்ப்பாணம், ஏப்.11

கண் பார்வையில் பாதிப்புள்ளவர்கள், தமது கண்களை பரிசோதனை செய்ய வாய்ப்பாக, இலவசமாகத் தமது கண்களைப் பரிசோதனை செய்வதற்கு யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியை நாடுங்கள். நாளை புதன்கிழமை காலை 10 மணி முதல் கண்ணில் வெண்படலம் படந்தோருக்கு அங்கு இலவசமாக கண்வில்லை வைப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சமூகங்கள் இடையே நல்லெண்ணம் மற்றும் நல்லுறவை ஏற்படுத்தும் நோக்குடன், இலவச கண்பரிசோதனை நடத்தப்பட உள்ளதாக. யாழ்.மக்கள் பணிமனை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை முஸ்லிம் வாலிபர் அமைப்பின் அனுசரணையுடன் கண் பரிசோதனை நடத்தப்படும் என்றுமக்கள் பணிமனை தெரிவித்துள்ளது. (அ)

## முல்லை. நாயாற்றுப் பகுதியில் சட்டவிரோத வாடிகள் அகற்றல்

முல்லைத்தீவு, ஏப்.11

முல்லைத்தீவு, நாயாற்றுப் பகுதியில் சட்டவிரோதமாக வாடியமைத்து மீன் பிடித் தொழிலில் ஈடுபட்ட வெளி மாவட்ட மீனவர்களின் ஆறு வாடிகளும் அகற்றப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு, நாயாற்றுப் பகுதியில் சிங்கள மீனவர்கள் அத்துமீறி நுழைந்து சட்டவிரோத மீன்பிடித் தொழில்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தவிடயம் தொடர்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் நேரடியாக சென்றுநிலைமைகளை பார்வையிட்டதுடன் அங்கு தங்கியிருந்த சிங்களமீனவர்களிடம் கலந்துரையாடியுள்ளார்.

நாயாறு கடலுடன் இணையும் பகுதியில் இருபத்து மூன்று மீன்பிடிப் படகுகளை நிறுத்தி வைப்பதற்கு கடந்த பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி மத்திய கடற்றொழில் அமைச்சு அனுமதிகளை வழங்கியிருந்தது.

இந்த அனுமதி உடனடியாக நிறுத்தப்பட்ட போதும் சிங்கள மீனவர்கள் அந்தப் பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்தனர். இந்த நிலையில் அங்கு தமிழ் மக்கள் அவர்களுக்குச் சொந்தமான எட்டுவாடிகளை அமைத்து தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

இது தொடர்பாக உரியதரப்புக்களின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதை அடுத்து நேற்று சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட வெளிமாவட்ட மீனவர்களின் வாடிகளில் ஆறுவாடிகள் உடனடியாக அகற்றப்பட்டன. (ஐ)

# தமிழ்க் கைதிகளது விடுதலை கோரி மே மாதம் தொடக்கம் போராட்டம்

## தமிழ் அரசியல் தலைவர்களது ஆதரவைக் கோரும் கைதிகளது குடும்பங்கள்

கொழும்பு, ஏப்.11

தமிழ் அரசியல் கைதிகளது விடுதலையை வலியுறுத்தி முன்னெடுக்கப்படவுள்ள வெகுஜனப் போராட்டங்களுக்கு அனைத்துத் தமிழ் அரசியல் தலைவர்களது ஆதரவையும் கைதிகளது குடும்பங்கள் நேரில் சந்தித்துக் கோரி வருகின்றன.

எதிர்வரும் மே மாதம் முதல் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளது விடுவிப்புப் போராட்டத்துக்கு ஆதரவு கோரி இந்தச் சந்திப்புக்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

வடக்கு, கிழக்கு, மலையகம் உள்ளிட்ட பகுதிகளில் கைது செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் பல வருடங்களாக உரிய குற்றச்சாட்டுகளின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் உணவு தவிர்ப்புப் போராட்டங்களை நடத்தியுள்ளனர். ஆனால் அரசு அந்தப் போராட்டங்களைக் கண்டுகொள்ளவே இல்லை.

அவர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளன.

இந்த நிலையில், போராட்டங்கள் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்று கைதிகளது குடும்பங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, தமிழ்-சிங்கள புத்தாண்டை முன்னிட்டுத் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தீர்மானத்தை ஜனாதிபதியும் பிரதமரும் எடுக்க வேண்டும் என்று அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. தேரேறி வந்த காளித் தாயை பக்தர்கள் ஒன்றுகூடி வணங்கி அருள்பெறும் காட்சி.

# இன்புளுவென்சா நோய் அதிகரிப்பு அவதானமாக இருக்க அறிவுறுத்தல்

## மத்திய சுகாதார அமைச்சு தீவிர கரிசனை

நாடளாவிய ரீதியில் இன்புளுவென்சா நோய்த் தாக்கம் அதிகரித்து வருவதால் பொது மக்கள் மிக அவதானத்துடன் இருக்க வேண்டும் எனச் சுகாதார சேவைகள் பணியகம் தெரிவித்துள்ளது.

காய்ச்சல், தலைவலி, உடல் வலி, தடிமன் உள்ளிட்ட நோய் தாக்கங்கள் முன்னறிகுறியாக தென்படும். பின்னர் நோய் தாக்கம் படிப்படியாக அதிகரிக்கும் எனவும் இதிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான வைத்திய ஆலோசனைகளை உரிய விதத்தில்பின்பற்றுமாறும்சுகாதார அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த நோய்த் தொற்று உள்ளவர்கள் என இனங்காணப்பட்டவர்கள் அதிக சன நடமாட்டம் உள்ள பகுதிகளுக்குச் சென்று நிற்பதைத் தவிர்க்க வேண்டும். தடிமன் அல்லது தும்மல் ஏற்படும்போது மூக்கை துவாய் ஒன்றினால்மூடிக்கொள்ளவேண்டும். அவர்கள் தரமான ஒரு வைத்தியரை உடனடியாக நாடி உரிய சிகிச்சைகளை பெற்றுக்கொள்ள வேண்டும்என சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (ம)

# அறநெறிப் பாலர் முன்பள்ளி குதூகல விளையாட்டு விழா





யாழ்ப்பாணம், ஏப். 11

ஏழாலை மேற்கு சைவசன் மார்க்க அறநெறிப் பாலர் முன்பள்ளியின் விளையாட்டுவிழா நேற்று திங்கட்கிழமை காலை 8 மணி முதல் முன்பள்ளி மைதானத்தில் திருமதி மல்லிகா ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதமவிருந்தினராக சைவசன்மார்க்க வித்தியாசாலையின்அதிபர் கந்தசாமி கெங்காதரகீர்த்தியும், சிறப்பு விருந்தினர்களாக உடுவில் கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் திருமதி ஜெ.வடிவாம்பிகை, J/202 கிராம சேவகர் இருதயப் பிரகாசம் எயுயீன்மசனட், அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பி.சுபாஜினியும் கலந்து சிறப்பித்தனர்.

மேலும், இந்நிகழ்வில் பழைய மாணவர்கள், பெற்றோர் மற்றும் நலன்விரும்பிகள் கலந்து இந்நிகழ்வைச் சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

# ஊழியர் சேமலாப நிதியை பெறுவதில் புதிய சிக்கல்

## உரிய வயதை அடைந்தாலும் இல்லை

ஊழியர் சேமலாப நிதியத்திலுள்ள பணத்தை மீளப் பெறுவதற்கு உரிய வயதெல்லையை அடைந்திருந்த போதிலும், சம்பந்தப்பட்ட நபர் வேறு தொழிலில் இணைந்திருந்தால் நிதியைப் பெற்றுக்கொள்ள முடியாது என ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம் அறிவித்துள்ளது.

வழமையான நடைமுறையின்படி, ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தின் கீழ் ஆண் ஊழியர் 55 வயது நிறைவடைந்த பின்னரும் பெண் ஊழியர் 50 வயது நிறைவடைந்த பின்னரும் தமது முழுமையான நிதியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இது இவ்வாறிருக்கையில், ஊழியர் திணைக்கள அதிகாரிகள் தாம் நினைத்தவாறு சட்டங்களை மாற்றுவது கண்டிக்கத்தக்கது என அரச சேவை அதிகாரிகளின் சங்கம் தெரிவித்துள்ளது. (ம)

# சடலம் மீட்பு

பிள்ளைகள் வெளிநாட்டில் வசித்த நிலையில், வீட்டில் தனித்திருந்த முதியவர் ஒருவர் குளியல் அறையில் சடலமாக மீட்கப்பட்டார். இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் கிழக்கில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்தவரான தம்பு சிவபாதசிங்கம் (வயது 81) என்பவரே உயிரிழந்தார். இவரது இரண்டு பிள்ளைகள் வெளிநாட்டில் வசிக்கின்ற நிலையில், இவர் தனிமையாக கொக்குவிலில்வசித்தார்என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# தமிழருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா, நெடுங்கேணி பிரதேச செயலகத்திற்குட்பட்ட சின்ன அடம்பன் பகுதியில் 150 வீடுகளைப் பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றபோது அதில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் –

இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழ்ந்து வந்த 150 குடும்பங்களுக்கு ஞானம் அறக்கட்டளை நிறுவனம் வீடுகளைக் கட்டிக் கொடுத்திருக்கின்றது.

நாட்டிலுள்ள தேசியப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்பட்டு, ஒரு புதிய அரசியல் சாசனம் உருவாக்கப்பட்டு, அந்த அரசியல் சாசனத்தினூடாக நாங்களும் சமமாக, ஒற்றுமையாக, சுயமரியாதையுடன்வாழவேண்டுமென்று இந்த நாடு சுதந்திரம் அடைந்த காலம் தொட்டுக் கோரிக்கையை முன்வைத்து வருகின்றோம்.

கடந்த 80 வருடங்களாக மக்கள் ஜனநாயக ரீதியாக தேர்தல்களின் மூலமாக அந்த முடிவைத் தெரிவித்துவருகிறார்கள். ஆனால், அந்த முடிவு இன்னும் நிறைவேற்றப்படவில்லை. ஆனாலும், தொடர்ந்தும் அந்தக் கோரிக்கையை முன்வைத்து மக் கள் போராடிக்கொண்டிருக் கிறார்கள். அதனுடன் வேறு பல கோரிக்கைகளையும் முன் வைத்துப் போராடுகின்றனர்.

குறிப்பாகக் காணாமற் போனோர் தொடர்பான பிரச்சினைகள், காணிகள் சம்பந்தமான பிரச்சினைகள், மக்களின் மீள்குடியேற்றம், அரசியல் கைதிகள் சம்பந்தமான பிரச்சினைகள், புனர்வாழ்வு, தொழில் வாய்ப்பு போன்ற பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும். அத்துடன் இப்பிரச்சினைத் தீர்வில் பெரும் முன்னேற்றம் ஏற்பட வேண்டிய தேவையிருக்கின்றது.

புதிய அரசாங்கத்தை உருவாக்குவதற்கு தமிழ் மக்கள் ஒரு பெரும் பங்களிப்பைச் செய்தார்கள். தமிழ் பேசும் முஸ்லிம் மக்களின் பங்களிப்பும் பாரியதாக இருந்தது. ஆனால், பழைய அரசாங்கத்திற்கும் புதிய அரசாங்கத்திற்கும் இடையில், அவர்களுடைய கொள்கைகளைப் பொறுத்தவரையில், அவர்களுடைய பேச்சைப்பொறுத்த வரையில் ஒரு மாற்றத்தை காண்கின்றோம்.

இருந்தாலும், எமது மக்களுடையபிரச்சினைகள்தீர்க்கப்பட வேண்டும், காணாமற்போனோர் சம்பந்தமாக ஒருமுடிவு விரைவில் கிடைக்கவேண்டும். அரசாங்கம் துரிதமாகச் செயற்படவேண்டும் என்பது அத்தியாவசியமாக இருக்கிறது. அது அவர்களின் கடமை. அரசாங்கம் பதவி ஏற்று இரண்டு வருட காலமாகி விட்டது.

மக்களுடைய காணிகள் மக்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படவேண்டும். இராணுவம் மக்களுடைய காணியில் விவசாயம் செய்து, அதில் வியாபாரம் செய்து, தொழில்செய்து உழைத்துக் கொண்டிருக்கின்றது. எமது மக்கள் நலன்புரி நிலையங்களிலும், முகாம்களிலும், மற்றையவர்களின் வீடுகளிலும், அவர்களின் தயவில் தங்கி வாழ முடியாமல் தவிக்கின்றார்கள்.

எமது மக்கள் தங்களுடைய காணிகளுக்கு திரும்பவேண்டும். ஓரளவுதான் அரசு மக்களின் காணிகளை விடுவித்திருக்கிறது. மன்னாரில், வவுனியாவில், கிளிநொச்சியில், திருகோணமலையில், மட்டக்களப்பில், அம்பாறையில் கூட காணிகள் விடுவிக்கப்பட வேண்டியிருக்கிறது. ஆனபடியால் இனியும் தாமதிக்காமல் அரசாங்கம் மக்களின் காணிகளை விடுவிக்க வேண்டும்.

அத்துடன் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்டால் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் எனச் சொல்லப்படுகின்றது. அச்சட்டமும் நீக்கப்படவில்லை. அவர்கள் விடுவிக்கப்படவில்லை. இந்த நிலமை தொடர முடியாது. புதிய அரசாங்கம் இரண்டு வருடமாக ஆட்சியில் இருக்கின்றது. எமது மக்கள் இன்னும் பொறுமையாக இருக்க முடியாது.

நீதியைக் கேட்டு, காணாமற் போனோர் சம்பந்தமாக முடிவைக் கேட்டு, காணிகள் மற்றும் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும் எனக் கேட்டு மக்கள் போராடுகின்றனர். ஆயிரக்கணக்கான பட்டதாரிகள் வேலைவாய்ப்புக் கோரி போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் எமது இளைஞர்களுக்குப் போதிய அளவுக்கு வேலைவாய்ப்பு இருக்கவில்லை. இப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். இவ்விதமான புறக்கணிப்புக்கள் தொடர முடியாது.

இந்நிலமைகள் தொடருமாக இருந்தால் இந்தஅரசாங்கத்தை மக்கள் வெறுக்க வேண்டிய நிலமை ஏற்படும். இதனை அரசு புரிந்துகொள்ள வேண்டும். – எனக் குறிப்பிட்டார். (உ-100)

# நீர்ப் பற்றாக்குறைப் பிரச்சினை விஸ்வரூபம் எடுக்கும் ஆபத்து!

அடுத்துவரும் மாதங்களில் வடக்கு மாகாணம் பாரிய நீர்ப் பிரச்சனையை எதிர்கொள்ள நேரிடும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நா. பிரதீபராஜா எச்சரித்துள்ளார்.

சித்திரை சிறுமாரி சிலவேளை பெய்யாவிட்டால் அல்லது தீவுப் பகுதிக்கு முதலாவது இடைநிலைப்பருவகாலமழைகிடைக்காவிட்டால், மே ஆரம்பப்பகுதியில் நீர்ப் பிரச்சினையை எதிர்கொள்ளநேரிடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மாத காலப் பகுதியில் சூரியன் வானில் உச்சம் கொடுப்பது வழமையான விடயம்.

கடந்த காலத்துடன் ஒப்பிடும் போது, இம்முறை வெயிலின் வெப்பத்தின் தாக்கம் அதிகமாகக்காணப்படுகின்றமைக்குமழை வீழ்ச்சி குறைவாக இருந்தமையே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் மார்ச் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர், பெருமளவு மேற்பரப்பு நீர் ஆவியாகிவிட்டது.

மேலும் அதிகரித்த கட்டுமானத்தால் கட்டடங்கள் உறிஞ்சி வெளிவிடும் வெப்பத்தின் அளவு கூடவாகவுள்ளதால் வளிமண்டலத்தில் ஈரப்பதன் அளவு குறைவடைகின்றது. இதனால் இம்முறை வெப்பத்தை அதிகளவில் உணரமுடிகிறது.

இதற்கிடையில் கடந்த மார்ச் பிற்பகுதியில் இந்தியாவின் ஆந்திரா மற்றும் கர்நாடகாவில் கதிர்வீச்சு அதிகரித்ததன் காரணமாக கடுமையான அனல் காற்று வீசியது.

இதனால் உடலில் நீர் இழப்பு ஏற்பட்டு, இரத்தக் குழாய்களில் ஏற்படும் அடைப்புக்காரணமாக மரணங்கள் பல ஏற்பட்டன. கடந்த வருடம் இவ்வாறு மூவர் வடக்கில் உயிரிழந்துள்ளனர் எனப் பதிவாகியுள்ளது.

தற்போதுள்ள வளிமண்டல நிலையைப்பொறுத்தவரைமழை பொழிவு கிடைப்பதற்கான வாய்ப்பு அதிகமான உள்ளது.

இந்த இடியுடன் கூடிய மழையாகவும் பிற்பகல் இரண்டு முதல் இரவு ஏழு மணிவரையும் அல்லது காலை ஏழு மணிக்கு முன்னர் காணப்படும் மழையாகவும் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீர் ஆவியாவதைத் தவிர்க்க விவசாயிகள் மற்றும் கட்டடம் அமைப்போர் முற்பகல் 10 மணி முதல் நான்கு மணி வரை நீரை பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளுவது நல்லது என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# தெற்கு அதிவேகப் பாதையில் எஸ்.ரி.எவ்ப் விசேட பாதுகாப்பு

தமிழ் – சிங்கள புதுவருடக் கொண்டாட்டதினங்களில் தெற்கு அதிவேகப் பாதையில் பயணிக்கும் வாகனங்களுக்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அதிவேக பாதையின் முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது.

அதிவேகப் பாதையில் பிரவேசிப்பதற்கு முன்னர் அந்த வாகனத்தின் தொழில்நுட்பப் பிரச்சினைகள் குறித்தும் கவனம் செலுத்தப்படவுள்ளது என அதிவேக பாதையின் முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் எஸ்.ஓபநாயக்க தெரிவித்துள்ளார். (ம)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## அவமாகும் சர்வதேச முயற்சி

"இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், அடிப்படை மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை இலகுவில் மூடிமறைத்து விட முடியாது. அவற்றை நீர்த்துப் போக வைத்துப் புறமொதுக்கி விடவும் இயலாது. என்றோ ஒருநாள் அவற்றுக்கு நீதி கிட்டியே தீரும்.

"இந்த விடயங்கள் மறைந்து போய் விடா. என்றோ ஒருநாள் அதற்கு நீதி வழங்க வேண்டிய தேவை இருக்கும். அது தவிர்க்க முடியாத கட்டாயமாகும்."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் கொழும்பு தனியார் தொலைக்காட்சி விவாதம் ஒன்றில் வெளிப் படையாகவும், உறுதியாகவும் கூறியிருக்கின்றார்.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் அப்பாவித் தமிழர்களுக்கு எதிராக பெருத்த எடுப்பில் யுத்தக் குற்றங்கள் இழைக்கப்பட்டிருக்கின்றன. தென்னிலங்கையும், அரசும், படைத்தரப்பும், தெற்கு அரசியல்வாதிகளும் என்ன சொன்னாலும் யுத்தக் குற்றங்கள் பெருத்த எடுப்பில் இடம்பெற்றன என்பது கண்கூடு. அது சர்வதேசத்துக்கும் நன்கு தெரியும்; புரியும்.

அத்தகைய மிகப் பெரிய கொடூர பேரழிவின் மூலமே இலங்கைத் தமிழர்களின் வீரம்மிகு விடுதலைப் போராட்டத்தை இலங்கைப் படையால் அடக்க முடிந்தது என்பதும் எல்லோருக்கும் தெரிந்த விடயம்தான்.

தமிழரின் போராட்டத்தை அழிப்பதற்குத் தென்னிலங்கை அரசு அநீதியைக் கையில் எடுத்தது. இப்போது அந்த அநீதிச் செயற்பாட்டை மூடி மறைத்து, அதனை நீதி முறையானதாகக் காட்டுவதற்கு அது முயற்சிக்கின்றது; அப்படித்தான் அது செய்யும். அதன் கடமையும் பொறுப்பும்கூட அதுதான்.

உண்மையை வெளிக்கொணர்ந்து, பகிரங்கப்படுத்தி, குற்றவாளிகளை அம்பலப்படுத்தி, இழைக்கப்பட்ட கொடூரங்களுக்குக் காரணமானவர்களை அதற்குப் பொறுப்புக் கூற வைத்து, உரிய தண்டனை வாங்கிக் கொடுப்பதுதான் தமிழர் தரப்பின் கடமையாகவிருக்கின்றது; விலக முடியாத வரலாற்றுப் பொறுப்பாகவிருக்கின்றது.

இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்களுக்கு என்றோ ஒரு நாள் நீதி கிட்டும்; குற்றம் இழைத்த தரப்புகள் பொறுப்புக் கூறியேயாக வேண்டும் என்று சுமந்திரன் கூறுகின்றமை சரிதான்.

ஆனால், பாதிக்கப்பட்ட தமிழர் தரப்புக்கு அத்தகைய நீதி கிடைக்கப்பண்ணுவதற்கான அந்த முயற்சியை சரியான தடத்தில் - உரிய பாதையில் - இராஜதந்திரத் தந்திரோபாயங்களுடன் - நாம் முன்னெடுக்க வேண்டும்; முன்நகர்த்த வேண்டும். அதுதான் இன்றைய வரலாற்றுப் பொறுப்பு.

இதனையே நாம் பொறுப்புடன் - கட்டுக்கோப்புடன் - ஒரே ஐக்கியப் பாதையில் - முன்னெடுக்க வேண்டும் என்பதையும் கோடி காட்டியிருக்கின்றார் சுமந்திரன்.

தமிழருக்கு நீதி செய்யப்பட வேண்டிய இந்த விடயத்தில் கள நிலைவரம் எத்தகையதாக இருக்கின்றது என்பதை ஜெனீவாவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியிருக்கின்றது.

"குற்றமிழைத்த படையினரைப் பாதுகாப்பது போல நடந்து கொள்கின்றது இலங்கை அரசு. குற்றம் இழைத்தவர்களுக்கு இந்த ஆட்சி முறைமையின் கீழ் நீதி கிடைப்பதற்கான வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை." - என்று அந்த அமைப்பு தனது அறிவிப்பில் தற்போது சுட்டிக்காட்டியிருக்கின்றது.

மனித உரிமை மீறல்கள் உட்பட இராணுவத்துக்கு எதிராகச் சுமத்தப்படக் கூடிய குற்றச்சாட்டுகளில் இருந்து இராணுவத்தைக் காப்பாற்றுவதில், தாம் அர்ப்பணிப்புடன் இருக்கிறார் என இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் குறிப்பிட்டிருக்கின்றமையை அந்த அமைப்பு தனது சந்தேகத்துக்கு ஆதாரமாக - அடிப்படையாக - முன்வைத்துள்ளது.

காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தை அமைக்கின்றமை சம்பந்தமாகக் கூட்டு எதிரணியின் பிரமுகர்கள் சிலர் நாட்டின் அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து அது விடயத்தில் தங்களின் கருத்தையும், ஆட்சேபத்தையும், எதிர்ப்பையும் தெரியப்படுத்தி இருக்கின்றனர்.

அப்போது, பாதுகாப்புப் படையினரைக் காட்டிக் கொடுக்கும் எந்த நடவடிக்கையும் காணாமல் போனோர் அலுவலகத்தின் ஊடாக எடுக்கப்பட மாட்டாது என, அவர்களுக்கு நாட்டின் தலைவர் உறுதியளித்தார் எனத் தெரியவருகிறது.

இந்தப் பதிலை - உறுதியை - நோக்கும் போது, நீதிமன்றம் அமைக்க முன்னரே தீர்ப்பையே கூறிவிட்டமை போன்ற நிலைமைதான் இங்கு உள்ளது என்பது மிக வெளிச்சமாகத் தெரிய வருகின்றது.

பாதுகாப்புப் படைகளைப் பாதுகாப்போம், விட்டுக் கொடுக்க மாட்டோம், காட்டிக் கொடுக்க இடமளியோம், அவர்களுக்கு எதிராக எதுவும் நடக்க இடமளிக்கமாட்டோம் - என்றெல்லாம் அரசுத் தரப்பும், அரசுத் தலைமையும் வெளிப்படையாகவும், பகிரங்கமாகவும் அறிவித்து வருகின்ற நிலையில் -

அந்தத் தரப்பின் மூலமே நீதி முறையான விசாரணைகளை நடத்தி, நியாயத்தை நிலைநாட்டலாம் என்று எத்தனிக்கும் சர்வதேசத்தின் முயற்சி பலனளிக்கப் போவதில்லை. அது, விடயத்தை இழுத்தடித்து, காலத்தைக் கடத்தி, வெறுமனே இந்த விசாரணை நடவடிக்கைகளை அவமாக்கும் செயற்பாடேஅன்றி, வேறு எதுவுமாக இருக்கப் போவதில்லை.

# வீரவன்ஸவுக்குப் பிணை வழங்கியமையில் ஐ.தே.கவுக்கு எந்தத் தொடர்பும் இல்லை

## பிரதி அமைச்சர் அஜித் பெரேரா கூறுகிறார்



கொழும்பு, ஏப்.11

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவுக்குப் பிணை வழங்கப்பட்டமைக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்று பிரதி அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரச வாகனங்களை முறையற்ற வகையில் பயன்படுத்தியதன் மூலம் இலங்கை அரசுக்கு 9 கோடி ரூபா நட்டம் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் விமல் வீரவன்ஸ விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

அவருக்கு அண்மையில் பிணை வழங்கப்பட்டது. கொள்ளையடித்தாலும் ஒருவருக்கு 3 மாதங்களின் பின்னர் நிபந்தனைகளின் அடிப்படையில் பிணை வழங்கப்படும். எனவே விமல்வீரவன்ஸ பிணை வழங்கியதன் மூலம் நிரபராதியாக மாட்டார்.

அடுத்த வழக்கு விசாரணை வரை தப்பிச்செல்ல முடியாது என்ற நிபந்தனையின் கீழ் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

விமல் வீரவன்ஸ மீதான குற்றச்சாட்டை விரைவில் விசாரித்து நிறைவு செய்யுமாறு, பிரதமர் ஆலோசனை வழங்கியதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இந்தநிலையில் விமல் வீரவன்ஸ ஐக்கிய தேசியக் கட்சியுடன்நட்புறவை பேணுவதாகக் கூறுகின்றனர்.

எனினும் நான் ஒரு விடயத்தைக் கூற விரும்புகின்றேன். வீரவன்ஸ போன்றதிருடர்களை ஐக்கிய தேசியக் கட்சியில் இணைத்து கொள்ளும் அளவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி வங்குரோத்து நிலையை அடையவில்லை.-என்றார். (எ)

# அதிருப்தி தரும் வகையில் அரசின் நடவடிக்கைகள்!

## அமைச்சர் தயாகமகே கூறுகிறார்



அரசின் சில நடவடிக்கைகள் அதிருப்தி அடையும் வகையில் அமைந்துள்ளன என்று அமைச்சர் தயா கமகே தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர் காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போதைய அரசின் சில நடவடிக்கைகள் என்னைக் கடுமையாக அதிருப்தி அடையச் செய்துள்ளன.

உள்நாட்டு வர்த்தகர்கள் இருக்கும்போது அவர்களிடம் எந்தவிதமான ஆலோசனையும் நடத்தாது உள்நாட்டுக் கைத்தொழில்கள் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

செவனகல, ஹிங்குரான சீனி உற்பத்திச்சாலைகளை அரசு பொறுப்பேற்று அவற்றை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வது உள்நாட்டு முயற்சியாண்மையாளர்களைப் பல வீனமடையச் செய்யும்.

கடந்த அரசு உள்நாட்டு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கவில்லை. இந்த அரசு மஹிந்த ராஜபக்‌ஷவின் வழியைப் பின்பற்றுகின்றது.

மஹிந்த ராஜபக்‌ஷவுடன் இருந்த சிலர் இந்த அரசிலும் அங்கம் வகிக்கின்றார்கள். அவ்வாறானவர்களுக்கு முக்கிய அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதனால் இந்த அரசை ஆட்சிப்பீடம் ஏற்ற முயற்சித்தவர்கள்கடும் அதிருப்தி அடைந்துள்ளனர். அவர்கள் தமக்கு விருப்பமானவர்களுக்கு மட்டும் சலுகை வழங்குகின்றார்கள்.-என்றார்.

# கேடு விளைவிக்கும் சுவையூட்டிகள்: மக்கள் எச்சரிக்கையாக இருங்கள்

### சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கம் வேண்டுகோள்

கொழும்பு, ஏப்.11

புத்தாண்டு காலப்பகுதியில், மனித உடலுக்குக் கேடு விளைவிக்கும் ஒரு வகை சுவையூட்டி, நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள சந்தைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. எனவே கோழி இறைச்சிச் சுவையுடைய இந்தப் புதிய சுவையூட்டி தொடர்பில், பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடனும் விழிப்புடனும் இருக்க வேண்டும் என்றும், அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பில் அந்தச் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் அசேல சம்பத் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இந்த வகைச் சுவையூட்டியைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் உணவு வகைகளை உண்டதன் பின்னர் அதிகம் தாகம் ஏற்படுகின்றது. இதனால் மனித உடலுக்குக் கேடு விளைவதாகத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்தநிலையில், இது தொடர்பில் சுகாதார அமைச்சின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.-என்றார். (எ)

# ஆசிரிய உதவியாளருக்கான அதிகரித்த கொடுப்பனவு மே முதல் வழங்கப்படும்

கொழும்பு, ஏப்.11

அதிகரிக்கப்பட்ட ஆசிரிய உதவியாளர்களின் கொடுப்பனவை மே மாதம் முதல் பெற்றுக்கொடுக்க அரசு தீர்மானித்துள்ளது.

பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரிய உதவியாளர்களுக்கு வழங்கப்பட்ட 6 ஆயிரம்ரூபா கொடுப்பனவு 4 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டு வழங்கப்படவுள்ளது. அதிகரிக்கப்பட்ட 4 ஆயிரம் ரூபா கொடுப்பனவுடன் சேர்த்து 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவு மே மாதம் முதல் வழங்கப்படும் என்று அரசு தெரிவித்துள்ளது. (எ)



வீதி விபத்துக்களைத் தவிர்ப்போம்!

வாகனங்களில் பயணிக்கும் போது, ஆசனப்பட்டியை அணிவது உங்கள் பாதுகாப்பிற்கே. பொலிஸாருக்காக அல்ல.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை/ மாநகரசபை, யாழ்ப்பாணம்.

## நாளை

12.04.2017
புதன்கிழமை

நட்சத்திரம்: சுவாதி முழுவதும்
திதி: பிரதமை பி.ப. 12.51 வரை

சுபநேரம் : 4.36 - 6.06 வரை
இராகுகாலம் : 12.06 - 1.36 வரை

# ஜனாதிபதியின் அதிகாரங்களுக்கு மேலாகச் செயற்படுகிறார் பிரதமர்

## சிவப்பு எச்சரிக்கை விடுக்கக் கோருகிறார் டிலான்

கொழும்பு, ஏப்.11

ஊழல் மோசடிக்காரர்களைத் தண்டிக்க வேண்டிய கட்டத்தில் ஜனாதிபதி உள்ளார். குற்றவாளிகளைத் தண்டிப்பதாக கூறுகின்றாரே தவிர குற்றவாளிகளைத் தண்டிக்க எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கவில்லை. ஜனாதிபதியின் அதிகாரங்களுக்கு மேலாக செயற்படும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு முதலில் ஜனாதிபதி சிவப்பு எச்சரிக்கை விட வேண்டும்.

-இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஊடகப்பேச்சாளர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

பளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

நாட்டில் இடம்பெறும் ஊழல் மோசடிகள் தொடர்பில் குற்றவாளிகளைத் தண்டிப்பதில் ஜனாதிபதி மிகவும் அமைதியாகச் செயற்பட்டு வருகின்றார். குற்றவாளிகளைத் தண்டிப்பதாக கூறுகின்றாரே தவிர குற்றவாளிகளைத் தண்டிக்க எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கவில்லை.

மத்திய வங்கி ஊழல் விடயத்திலும், அம்பாந்தோட்டைத் துறைமுக விவகாரங்களிலும் ஜனாதிபதி சிவப்பு எச்சரிக்கை விடுக்க வேண்டிய நேரம் வந்துள்ளது.

இப்போது அவர் தனது அதிகாரங்களை கையாண்டு நாட்டில் நடக்கும் ஊழல் மோசடிகள் அனைத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

அதேபோல் சிவப்பு எச்சரிக்கை விடுக்க வேண்டியது வேறு யாருக்கும் அல்ல. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கே தற்போது ஜனாதிபதி சிவப்பு எச்சரிக்கை விடுக்க வேண்டும்.

அரசு கொள்ளையடித்தாலும் பரவாயில்லை. ஆனால் மக்களுக்கான வேலைத் திட்டங்களைச் சரியாக மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஆனால், வேலைத்திட்டங்



களை முன்னெடுக்காது மக்களின் சொத்துக்களைச் சூறையாடி வருவதே இன்று நாட்டில் மிகப்பெரிய பிரச்சினையாக அமைந்துள்ளது.

இன்று ஜனாதிபதி ஒரு கட்டளை பிறப்பிக்கும் போது அதற்கு மேலாக பிரதமர் ஒரு கட்டளையை விடுகின்றார். ஜனாதிபதி அதிகாரங்களை தாண்டிய வகையில் பிரதமர் தனது அதிகாரங்களை பயன்படுத்தி வருகின்றார். ஆகவே இந்தச் செயற்பாடு நிறைவேற்று ஜனாதிபதி முறைமைக்கு பெரியதொரு அவமானமாக அமைந்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பசில் ராஜபக்ஷவுக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று உள்ளது என்பதை நான் ஆரம்பத்தில் இருந்தே தெரிவித்து வருகின்றேன். இப்போதும் அது உறுதியாக வெளிப்பட்டு வருகின்றது.

பொது எதிரணியின் மேதின கூட்டம் காலிமுகத்திடலில் இடம்பெற வேண்டும் என்பது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தேவையே. அதற்காக பசில் ராஜபக்ஷவைச் சரியாகப் பயன்படுத்தி வருகின்றார். அவர்களின் மேதினக் கூட்டத்துக்குச் சகல வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுத்து அதன் மூலம் ரணில் விக்கிரமசிங்க சுயநல அரசியலை மேற்கொண்டு வருகின்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை இரண்டாகப் பிளவுபடுத்துவதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சியைப் பலப்படுத்தவே இவர்கள் முயற்சித்து வருகின்றனர். இதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒற்றுமையே கட்சியின் பலமாகும். அதை பொது எதிரணியினர் விளங்கிக்கொள்ள வேண்டும். அதேபோல் தனித்து பயணித்தாலும் இறுதியில் நாம் இருவரும் ஒரு இலக்கையே அடைய வேண்டும் என்பதை உணர்ந்து பொது எதிரணியினர் செயற்பட வேண்டும்.

தேசிய அரசில் நாம் இப்போது அங்கம் வகித்த போதிலும் அதன் மூலம் நாட்டைப் பலப்படுத்த வேண்டும் என்ற ஒரு நோக்கம் மட்டுமே உள்ளது. அதை விடுத்துத் தொடர்ந்தும் தேசிய அரசாகச் செயற்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இல்லை. வெகு விரைவில் நாம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தனித்த ஆட்சியை அமைப்போம்.-என்றார். (ஐ)

# ஐ.தே.க.மேதினக் கூட்டம் பொரளை கெம்பல் பார்க்கில்

கொழும்பு, ஏப்.11

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின பிரதானக் கூட்டத்தை பொரளை கெம்பல் பார்க் மைதானத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மே தினக் கூட்டத்துக்கு ஏனைய கூட்டங்களை விட லட்சக் கணக்கான மக்களைக் கொழும்புக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கட்சி பிரதிநிதிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின பிரதான கூட்டத்தை இந்த முறையும் கெம்பல் மைதானத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினத்தின் பிரதான பேரணி மாளிகாவத்தை பி.டி. சிறிசேன மைதானத்தில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது. பின்னர் மருதானை, புஞ்சி பொரளை ஊடாக பொரளை கெம்பல் பார்க் மைதானத்தை வந்தடையும் வகையில் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. பாதுகாப்பும் பலப்படுத்தப்படும்.

இதில் சிறிய மற்றும் சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் கலந்து கொள்ள வுள்ளனர்.

கூட்டு எதிரணியின் மே தின கூட்டம் காலி முகத்திடலில் நடத்தப்படவுள்ளது. இந்த நிலையில் ஐ.தே.க கூட்டத்தில் பெரும் சனத் திரளைக் காண்பிக்க வேண்டும் என்ற முயற்சியில் ஐ.தே.க. பிரதிநிதிகள் செயற்பட்டு வருகின்றனர். (ஐ)

# சர்வதேச தரச் சான்றிதழை இழக்கிறது கட்டுநாயக்கா!

## பல இலட்சம் ரூபா கொட்டியும் உரிய பலன் இல்லை

கொழும்பு, ஏப்.11

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், சுமார் மூன்று மாதங்கள் தற்காலிகமாக மூடப்பட்டு, பல விமானப் பயணங்களை இரத்து செய்து, நஷ்டத்தை ஏற்படுத்தி, பல இலட்சம் ரூபா செலவழித்து விமான ஓடுபாதையை புனர்நிர்மாணம் செய்தது.

எனினும், சர்வதேச தரத்துக்கு எதிர்பார்க்கப்படும் 'எவ்' தரம் வரை ஓடுபாதை நிர்மாணிக்கப்படவில்லை என்பதால், முதன்மைத்தரம் வாய்ந்த ஓடுபாதைக்கான சான்றிதழ் கிடைக்காமல் போகும் அபாயம் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு ஏற்பட்டுள்ளது.

விமான நிலையத்தின் புனர்நிர்மாணப் பணிகளில், ஓடு பாதையின் இரு புறங்களும் மாத்திரமே விரிவாக்கப்பட்டுள்ளன. ஏ380 ரக விமானங்கள் தரை இறங்குவதற்கு வசதியாக ஓடுபாதையின் மத்திய பகுதி நிர்மாணம் செய்யப்படவில்லை.

அதேவேளை, சர்வதேச தரத்துக்கு ஏற்ப 'எவ்' வகைக்கு விண்ணப்பிக்க, ஓடுபாதையின் இருபுறமும் ஒளி அலாரம் அமைப்புகள் சர்வதேச தரத்தில் நிர்மாணிக்கப்பட வேண்டும். என்றாலும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான ஓடுபாதையில் அந்தத் தரங்கள் பேணப்படவில்லை என்று தெரியவந்துள்ளது.

சர்வதேச சிவில் விமான போக்குவரத்து அமைப்பின் ''எவ்' தர வரிசை விமான ஓடுபாதையாக மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கிலேயே, 1986 ஆம் ஆண்டு, அதாவது 30 வருடங்களுக்குப் பின்னர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய ஓடுபாதை விரிவாக்கம் காரணமாக ஜனவரி மாதம் 6 ஆம் திகதி முதல், ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி வரை, விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டு, விமான பயண நேரங்கள் மாற்றப்பட்டு, புனர்நிர்மாண நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

சிவில் விமான சேவைகள் அமைச்சின் தகவல்களுக்கு அமைய, இந்தப் புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்காக 7இலட்சம் ரூபா செலவாகியுள்ளது என்று தெரியவந்துள்ளது. அதேவேளை, புனர்நிர்மாண பணிகளின் காரணமாகப் பகல் நேரங்களில் விமான நிலையம் மூடப்பட்டதால் பெரிய நஷ்டம் ஏற்பட்டது என்று ஏற்கனவே தகவல்கள் வெளியாகியுள்ளன.

சரியான திட்டமிடல்கள் இல்லாமல் இந்த புனர்நிர்மாண நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதால், அதற்குச் செலவழித்த பணத்துக்குச் சமமான நன்மைகள் கிடைக்கப்பெறவில்லை என சிரேஷ்ட விமான ஓடுபாதை பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர். 30 வருடங்களின் பின்னர் இடம்பெற்ற இந்த புனர்நிர்மாண நடவடிக்கையைச் சரியான முறையில் பயன்படுத்தத் தவறியமை, ஒரு நாடாக இலங்கை அடைந்த பெரிய தோல்வி எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ஐ)

# 25 ஆயிரம் இலங்கையர் புகைத்தலால் உயிரிழப்பு

கொழும்பு, ஏப்.11

புகைத்தலால் வருடாந்தம் 25 ஆயிரம் இலங்கையர்கள் உயிரிழக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன இதனை தெரிவித்துள்ளார்.

புகைப்பவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக புகையிலை உற்பத்தியாளர்களுக்கு வேறு உற்பத்திப் பொருள்களை அறிமுகப்படுத்துமாறு உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

அதற்கமைய திட்டங்களை வகுப்பதற்கு சுகாதார அமைச்சும், விவசாய அமைச்சும் ஒன்றிணைந்து வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளன என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

வடமத்திய, வடக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் அதிகளவு புகையிலை உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது.

அவர்களுக்கு வேறு உற்பத்திப் பொருள்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய புகையிலைச் செய்கைக்கு பதிலாக சோயா, மிளகு போன்ற உற்பத்திப் பொருள்களை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஐ)

# பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட ரஷ்ய பெண்கள் மிரிஹானா தடுப்பு முகாமில்

இலங்கைக்கு சுற்றுலா விசாவில் வருகைதந்து பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட ரஷ்ய பெண்கள் சிலர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் அதிகாரியால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த ரஷ்ய பெண்களின் வெளிநாட்டு கடவுச் சீட்டுகளை ஆராய்ந்தபோது இவர்கள் அனைவரும் சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் கிருலப்பனையில் ஆடம்பர வீடொன்றை வாடகைக்கு அமர்த்தி பாலியல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இந்த 5 ரஷ்ய பெண்களும் தற்போது மிரிஹானவில் உள்ள விசேட தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

விசாரணை நிறைவடைந்த பின்னர் அவர்கள் இலங்கையில் இருந்து நாடு கடத்தப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# புனர்வாழ்வு பெற்ற அங்கவீனமுற்ற போராளிகளுக்காக அரசு எந்தத் திட்டங்களையும் முன்வைக்கவில்லை!

## வியாழேந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டு



புனர்வாழ்வு பெற்ற அங்க வீனமுற்ற முன்னாள் போரா ளிகளின் வாழ்வாதாரத்துக்காக நல்லாட்சி அரசு எந்தவிதத் திட்டங்களையும் முன்வைக்க வில்லை.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

அங்கவீனமுற்ற முன்னாள் போராளிகளின் குடும்பங்க ளுக்கு சுயதொழில் நடவடிக் கைக்கு உதவி வழங்கும் நிகழ்வு முறக்கொட்டாஞ்சேனை யில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் மேற்கண் டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு-

கடந்த 3 தசாப்தகால யுத் தம் காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல உயிரி ழப்புக்கள், உடைமை இழப்புக் கள் என்பன ஏற்பட்டுள்ளன. இவற்றால் தமிழ் மக்க ளுக்கு அழிவுகளே எஞ்சி நிற்கின் றன.

2009 ஆம் ஆண்டு முள்ளி வாய்க்காலில் யுத்தம் முடிவுக் குக் கொண்டுவரப்பட்ட பின்னர் 11 ஆயிரத்து 900 இற்கு மேற்பட்ட முன்னாள் போரா ளிகள் அரசால் புனர்வாழ் வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். இவ் வாறு புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட வர்களில் 3 ஆயிரத்து 200 பெண் போராளிகளும் அடங் குகின்றனர். முன்னாள் போரா ளிகளான புனர்வாழ்வு பெற்ற பெண்களின் நிலைமை மிக வும் வேதனையானது.

புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்டு இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிய இவர்கள், தங்களின் நாளாந்த ஜீவனோபாயத்துக் காக மிகவும் சிரமப்படுகின் றார்கள். புனர்வாழ்வளிக்கப் பட்ட முன்னாள் போராளிகள் ஒதுங்கி தனிமைப்பட்டு இருக்காது, சமூகத்துக்கு முன் மாதிரியாக வாழ்ந்து காட்ட வேண்டும் -என்றார். (ச)

## கந்தூரி உணவு ஒவ்வாமை: இருவர் கைது!

அம்பாறை இறக்காமம் பிரதேசத்தில் உணவு ஒவ் வாமை காரணமாக 4 பேர் உயி ரிழந்த சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறிய லில் வைக்கப்பட்டுள்ளனர்.

-இவ்வாறு கைது செய்யப் பட்டவர்கள் சமையல்காரர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறக்காமம் பிரதேசத் திலுள்ள வாங்காமம் பள்ளி வாசலில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற கந்தூரி நிகழ் வின்போது போது வழங்கப் பட்ட இலவச உணவை உட் கொண்டதில் ஒவ்வாமை காரணமாக நால்வர் உயிரிழந் தனர். குழந்தைகள், கர்ப்பிணி கள் உட்பட ஆயிரத்து ஐந்து பேர் வரை தற்போது வைத்தி யசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ச)

## திருமலை மாவட்டத்தில் இதுவரை 3,438 டெங்கு நோயாளர்கள்!

### கிண்ணியாவில் மட்டும் 1,344 பேர்!!

திருகோணமலை,ஏப்.11

திருகோணமலை மாவட் டத்தில் கடந்த ஜனவரி முதல் இதுவரையான காலப்பகுதியில் 3 ஆயிரத்து 438 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். டெங்குக் காய்ச்சல் காரணமாக 15 பேர் உயிரிழந்துள்ளனர் என திரு கோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், டொக் டர் பீ.கயல்விழி தெரிவித்தார்.

திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி அலுவல கத்தில் நேற்று திங்கட்கிழமை காலை நடைபெற்ற ஊடகவி யலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

'இங்கு 12 சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவு கள் காணப்படுகின்றன. இருப் பினும், 5 சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவுகளிலேயே டெங்கு அபா யம் காணப்படுகின்றன. அதில் கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவி லேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கிண்ணி யாவில் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 344 பேர் அடையாளம் காணப்பட் டுள்ளனர். 9 உயிரிழப்புகளும் ஏற்பட்டுள்ளன' என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையை மீண்டும் திறக்குமாறு வேண்டுகோள்!

மட்டக்களப்பு,ஏப்.11

மூடப்பட்டுக் காணப்படும் வாழைச்சேனை கடதாசித் தொழிற்சாலையைத் திறப்பதற்கு நல்லாட்சி அரசு முன்வர வேண்டும் என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஞானமுத்து கிருஷ்ணபிள்ளை நேற்றுத் திங்கட்கிழமை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'இந்த அரசு மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு நல்லது செய்வதாக இருந்தால் இந்தக் கடதாசித் தொழிற்சாலையை நவீன வசதிகளுடன் புனரமைத்து, இங்குள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்க வேண்டும். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள், அரச காணிகள் மற்றும் நீர் வளம் போன்றன இருந்தும் அங்கு எந்தவித தொழிற்சாலைகள் அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப் படவில்லை.சிறுபான்மையின மக்களால் ஏற்படுத்தப்பட்ட இந்த அரசு இதனைக் கருத்திற்கொண்டு செயற்பட வேண்டும்' என அவர் மேலும் தெரிவித்தார். (ச)


## சுமுகமான அரசியல் சூழ்நிலை காணப்படுகிறது எமது நாட்டில்!

காத்தான்குடி,ஏப்.11

தற்போது முழு உலகிலும் ஆங்காங்கே மோதல்கள் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றன. குண்டுச் சத்தங்களும் கேட்ட வண்ணமே உள்ளன. ஆனால், தற்போது எமது நாட்டில் மிக வும் சுமுகமான அரசியல் சூழ் நிலை காணப்படுகிறது.

-இவ்வாறு சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் வின் 25 வருடகால அரசியல் வாழ்வைச் சித்திரிக்கும் 'கிழக்கு வாசல்' நூல் வெளியீட்டு விழா காத்தான்குடி ஹிஸ்புல் லாஹ் மண்டபத்தில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற் றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.




அங்கு அவர் மேலும் தெரி வித்தவை வருமாறு:-

எல்லோரும் மனிதர்களே. அவர்களைத் தமிழர்கள், சிங்கள வர்கள், முஸ்லிம்கள் என்ற பிரிவினையுடன் ஒருபோதும் நோக்கக் கூடாது. 1948ஆம் ஆண்டில் இலங்கைக்கான சுதந்திரத்தைத் தமிழர்களும் முஸ்லிம்களும் சிங்களவர் களும் இணைந்தே பெற்றுக் கொடுத்தனர்

தற்போது இந்த நாட்டில் புதியதோர் அரசியல் கலாசாரம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. சுயாதீன ஆணைக்குழுக் கள் உருவாக்கப்பட்டுள்ளன. தேர் தல்களில் மக்கள் மனச் சாட்சியுடன் வாக்களிக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

இந்த நாடு எதிர்காலத்தில் சிங்கப்பூரைப் போலவும், டுபாயைப் போலவும் அபிவி ருத்தியில் முன்னோக்கிச் செல்ல வேண்டும். அதற்காக அனைத்து மக்களும் ஒற்று மையாக உழைக்க வேண் டும்.- என்றார். (ச)

## காய்ச்சலால் பீடிக்கப்பட்ட சிறுமி சாவு!

வாழைச்சேனைப் பிரதே சத்தில் கடந்த 6 நாள்களாகக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த சிறுமி ஒருவர் நேற்றுத் திங்கட்கிழமை உயிரிழந்தார்.

வாழைச்சேனை ஹைராத் வீதியைச் சேர்ந்த கலந்தர் பாவா பாத்திமா ஷிபா (வயது - 8) என்ற சிறுமியே உயிரிழந் தவர் ஆவார். வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த பிரஸ்தாப சிறுமி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## 10 கசிப்பு உற்பத்தி நிலையங்கள் சம்பூரில் முற்றுகை; இருவர் கைது!

சம்பூர்,ஏப்.11

திருகோணமலை சம்பூர் பிர தேசத்தில் சித்திரைப் புத் தாண்டை முன்னிட்டு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பு நடவடிக்கையின் போது, 10 கசிப்பு உற்பத்தி நிலையங்கள் முற்றுகையிடப் பட்டுள்ளன. இதன் போது 24 மற்றும் 26 வயதுகளையுடைய 2 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி கசிப்பு உற்பத்தி நிலையங்களிலிருந்து கசிப்புக் காய்ச்சுவதற்கு பயன்படுத்தப் படும் 5 லட்சம் மில்லி லீற்றர் கோடா மற்றும் 75 ஆயிரம் மில்லி லீற்றர் வடிசாராயம் என் பன கைப்பற்றப்பட்டுள்ளன.

முற்றுகையிடப்பட்டுள்ள 10 கசிப்பு உற்பத்தி நிலையங் களும் கைது செய்யப்பட்ட பிரஸ்தாப சந்தேக நபர்கள் இருவருக்கும் சொந்தமானவை என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## மு.காவின் கட்டமைப்பை மறுசீரமைப்புச் செய்ய வேண்டும்!

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கட்டமைப்பை மறுசீரமைப்புச் செய்ய வேண்டும். அத்துடன், கட் சியின் மேல் மற்றும் கீழ்மட்டத் தொண் டர்களுக்கு இடையில் காணப்படும் இடைவெளியைக் களைய வேண்டும் என்பனவே தற்போது கட்சி எதிர்நோக் கும் மிகப்பெரிய சவால் ஆகும்

-இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர அபிவிருத்தி மற்றும் நீர்வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கட்டமைப்பை மறுசீரமைப்புச் செய்தல் மற்றும் சம்மாந்துறைப் பிரதேசத் துக்கான அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் என்பன சம்மாந்துறை அப்துல் மஜீத் நகர மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்தகால கசப்புணர்வை மறந்து எதிர்காலத்தில் புதிய யுகம் நோக்கி அனைவரும் ஒன்றாகப் பயணிப்பதற் கான உற்சாகத்தை கட்சிப் போராளிகள் ஏற்படுத்த வேண்டும்.தற்போதைய நிலைவரப்படி அரசியல் அதிகாரங்களில் முஸ்லிம் காங்கிரஸ் அல்லாதவர்கள் அம்பாறை மாவட்டத்தில் கிடையாது. மாவட்டத்தின் அரசியல் அதிகாரத்தை முஸ்லிம் காங்கிரஸ் தனது கைகளில் வைத்துக்கொண்டிருக்கின்றது.ஆனால், முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் பலவீனப்பட்டுவிட்டது எனப் பரவ லாகப் பேசுகிறார்கள். எமது கட்சியை எவராலும் ஒருபோதும் பலவீனப் படுத்த முடியாது.

எமக்கு எதிராக இருக்கின்ற எதிர ணிக்கு அரசியல் அதிகாரம் கிடையாது. மேலும், அபிவிருத்திகளை முழுக்க முழுக்க முஸ்லிம் காங்கிரஸே செய்ய வேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பாகும். நாம் என்ன செய்தாலும் அதனை எதிர்க்கும் எதிரணியினர் இருக்கின்றார்கள். அது பற்றி நாம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. எமது கட்சியைப் பலவீனப்படுத்தும் முயற்சியில் தற்போது பல்வேறு சக் திகள் களம் இறங்கியுள்ளன. இவ் வாறான சக்திகளுக்கு முஸ்லிம் காங்கிரஸ் போராளிகள் இடங்கொடுக்கக் கூடாது.- என்றார். (ச)

# அம்பாந்தோட்டை இழுபறிக்கு அரசுத் தரப்பே காரணம்!


## அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 11

சீனாவுடனான அம்பாந்தோட்டைத் துறைமுக உடன்பாட்டில் ஏற்பட்டுள்ள இழுபறிக்கு இலங்கை அரசதரப்பே காரணம் என்று சர்வதேச வர்த்தக மற்றும் அபிவிருத்தி மூலோபாய அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பாக சீனாவுடனான உடன்பாட்டை இந்த மாத இறுதிக்குள் செய்வதற்கு இலங்கை அரசாங்கம் விரும்புகிறது.



எமது தரப்பில் தான்தாமதம் ஏற்பட்டுள்ளது. எமது பக்கத்தில் தான் பந்து இருக்கிறது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் எடுத்துக் கொள்வதற்காக சீனாவிடம் இருந்து அழுத்தங்கள் கொடுக்கப்படவில்லை.

இதுபற்றி இலங்கை அரசுடன் சீனா பேச்சு நடத்தக் கூட இல்லை. எமது பதிலுக்காக அவர்கள் காத்திருக்கிறார்கள்.

பெரும்பாலும் ஏப்ரல் மாத இறுதிக்குள் இந்த உடன்பாட்டில் இலங்கை அரசு கையெழுத்திடும்.

எதிர்வரும் 16ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜப்பானில் இருந்து நாடு திரும்பிய பின்னர், எந்தளவு குத்தகைக் காலத்துக்கு இணங்கலாம் என்று நாம் முடிவு செய்ய வேண்டும். என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ரத்துச் செய்ய இது உசிதமான காலமில்லை!

## கருத்துக் கணிப்பில் மக்கள் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 11

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ரத்துச் செய்ய இது உசிதமான காலமில்லை என அண்மையில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கானகேந்திரநிலையத்தினால் நாடு முழுவதிலும் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ரத்துச் செய்வதை விடவும் நாட்டில் ஏற்பட்டுள்ள முக்கிய பிரச்சினைகளுக்கு அரசு முதலில் தீர்வு வழங்க வேண்டுமென 66.2 வீதமான மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

வாழ்க்கைச் செலவை குறைத்தல், உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்தல், பொருளாதாரவளர்ச்சி, தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல், ஊழல் மோசடிகளை இல்லாதொழித்தல் உள்ளிட்டவை குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்படவேண்டுமெனக் கருத்துக் கணிப்பில் பங்கேற்ற மக்கள் கோரியுள்ளனர்.

திருத்தங்களுடன் தற்போதைய அரசமைப்பை பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென 39.9 வீதமானவர்கள் கோரியுள்ளனர்.

மேலும் புதிய அரசு ஒன்று தேவை என 16.5 வீதமானவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைப்படியே 3 மாகாண சபைகளுக்கான தேர்தல்!

## அமைச்சர் பைசர் முஸ்தபா கூறுகிறார்



கொழும்பு, ஏப். 11

இலங்கையில் விரைவில் நடக்கவுள்ள மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைப்படியே நடத்தப்படும் என்று உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

வட மத்திய, கிழக்கு, சப்ரகமுவ மாகாணசபைகளின் பதவிக்காலம் எதிர்வரும் செப்ரெம்பருடன் முடிவடையவுள்ளது.

இந்தநிலையிலேயே, இந்த மூன்று மாகாணசபைகளுக்குமான தேர்தல் தற்போது நடைமுறையில் உள்ள விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைப்படியே இடம்பெறும் என்று அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

இந்த மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தலை நாடாளுமன்ற வரவுசெலவுத் திட்டத்துக்கு முன்னர் நடத்துவதற்கு இலங்கை அரசு எண்ணியிருக்கிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

# நன்னீர் மீன் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை!

## 8 கோடி குஞ்சுகளை விடுவதற்கு முடிவு

### அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 11

2019 ஆம் ஆண்டளவில் நாட்டின் நன்னீர் மீன் உற்பத்தி ஒரு லட்சத்து 50 ஆயிரம் மெற்றிக்தொன் வரை அதிகரிக்கப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

முறுத்தவெல நீர்வாழ் உயிரின உற்பத்தி மத்திய நிலையத்தை அமைச்சர் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதற்காக இந்த வருடத்தில் 8 கோடி மீன் குஞ்சுகள் நீர்த்தேக்கங்களில் விடப்படுமெனக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில், அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நன்னீர் மீன் உற்பத்திக்காக 40கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. அம்பாந்தோட்டை உள்ளிட்ட தெற்கு பிரதேச நீர்த்தேக்கங்களுக்கு இந்த உற்பத்தி நிலையத்தின் ஊடாக மீன் குஞ்சுகள் வழங்கப்படும்.

நீரியல்வளங்களின் அபிவிருத்திக்காக இம்முறை வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் 280 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த வருடம் இந்தத் தொகையை மேலும் அதிகரிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மேஜர் ஜெனரல் உதய பெரேரா வீட்டில் இராணுவ கோப்ரல் மர்ம மரணம்!

## விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஏப். 11

இலங்கை இராணுவத்தின் மூத்த அதிகாரிகளில் ஒருவரான மேஜர் ஜெனரல் உதய பெரேராவின் வீட்டில் பணியில் இருந்த இராணுவ கோப்ரல் ஒருவர் மர்மமான முறையில் மரணமான சம்பவம் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கந்தானையில் உள்ள மேஜர் ஜெனரல் உதய பெரேராவின் வீட்டில் சமையல்காரராக பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த கோப்ரல் செனிவிரத்ன மர்மமான முறையில் மரணமாகியுள்ளார்.

கடந்த 6 ஆம் திகதி, கெக்கிராவவில் உள்ள கோப்ரலின் வீட்டுக்குச் சென்ற இராணுவத்தினர் சிலர், அவர் வாகன விபத்தில் காயமடைந்து ராகம மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று கூறி அவரது தந்தை மற்றும் இருவரை அழைத்துச் சென்றுள்ளனர்.



எனினும், அவர்களை ராகம மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லாமல், ராகம பகுதியில் உள்ள இராணுவ முகாமுக்கு கொண்டு சென்று, கோப்ரல் செனிவிரத்ன தற்கொலை செய்து கொண்டார் என்று கூறி சடலத்தை ஒப்படைத்துள்ளனர்.

இதனை ஒரு விவகாரம் ஆக்காமல் சடலத்தை வீட்டுக்கு கொண்டு செல்லுமாறு மேஜர் ஜெனரல் உதய பெரேரா கூறியிருக்கிறார்.

இந்த மரணத்தில் சந்தேகம் இருப்பதாக உயிரிழந்த கோப்ரலின் சகோதரர் கந்தானை பொலிஸ் நிலையத்தில் முறையிட்ட போதும், அந்த முறைப்பாடு பதிவு செய்யப்படவில்லை. ராகம மருத்துவமனையில் தாம் மிரட்டப்பட்டதாகவும் சகோதரர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, சடலத்தை கெக்கிராவவுக்கு கொண்டு வந்த உறவினர்கள், கெக்கிராவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

அதை அடுத்து, நீதிவான் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சடலம் தற்போது அனுராதபுர மருத்துவமனையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனை எதிர்வரும் 20 ஆம் திகதி நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாக இலங்கை இராணுவமும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

# இலங்கைக்கு வறட்சி நிவாரணம் அனுப்பியது இந்தியா!


கொழும்பு, ஏப். 11

மோசமான வறட்சியைச் சந்தித்துள்ள இலங்கைக்கு, குடிதண்ணீர் விநியோகத்துக்கான நீர்த்தாங்கிகளையும், அரிசியையும் இந்தியா வழங்கியுள்ளது என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் தெரிவித்துள்ளார்.

இந்திய நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அளித்துள்ள பதிலிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வறட்சி நிவாரண உதவிகளை வழங்குமாறு இலங்கை அரசுவிடுத்தவேண்டுகோளை



அடுத்து, எட்டு குடிதண்ணீர் விநியோக நீர்த்தாங்கிகளையும், 100 மெற்றிக் தொன் அரிசியையும் வழங்க இந்தியா முடிவெடுத்தது.

பாரஊர்திகளில் பொருத்தப்பட்ட எட்டு நீர்த்தாங்கிகள் கடந்த மார்ச் மாதம் 21ஆம் திகதி இலங்கை அரசிடம் இந்தியாவால் கையளிக்கப்பட்டன. அயல்நாடுகள் நெருக்கடியில் சிக்கும் வேளைகளில் உதவுகின்ற முதல் நாடு என்ற வகையில் இந்த அவசர உதவியை இந்தியா அனுப்பி வைத்தது.

100 மெற்றிக் தொன் அரிசி விரைவில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் சுஷ்மா ஸ்வராஜ் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கைக்கு வறட்சி நிவாரணமாக 10 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை பாகிஸ்தான் அனுப்பி வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# குருநாகல் பகுதி வீதி விபத்தில் குழந்தை உட்பட மூவர் உயிரிழப்பு!



கொழும்பு, ஏப். 11

கொழும்பு-குருநாகல் வீதியில் பொத்துஹெர - போயகனே பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் குழந்தை உட்பட மூவர் உயிரிழந்தனர்.

டிப்பர் வாகனம் ஒன்றும் ஓட்டோ ஒன்றும் நேருக்கு நேர் மோதி இந்த விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில், ஓட்டோவைச் செலுத்திச்சென்ற ஹர்ஷ மதுசங்க (வயது 26) மற்றும் ஓட்டோவில் பயணித்த, அவரது ஒன்றரை வயது மகள் மற்றும் பெண் ஒருவர் உள்ளிட்ட மூவர் உயிரிழந்தனர்.

இதன்போது ஓட்டோவில் பயணித்த மற்றுமொரு பெண் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நால்வரும் குருநாகல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், மூவர் உயிரிழந்தனர்.

விபத்து தொடர்பில், டிப்பர் வாகனச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொத்துஹெர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## தினசரி ராசி பலன் 11.04.2017

துர்முகி வருஷம் 2017 ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் 29 ஆம் நாள் பூரணைத்திதி. பகல் 11.38 மணி வரை. பின்னர் பிரதமை. நட்சத்திரம்: சித்திரை பி.இ. 5.41 மணி வரை. பின்னர் சுவாதி. சித்தயோகம் முழுவதும். ராகு காலம்: மாலை 3.15 மணிமுதல் 4.47 மணி வரை. சுபநேரம்: பகல் 10.33 மணிமுதல் 12.03 மணி வரை. திவசம் செய்யவேண்டிய திதி: பங்குனிமாத தேய்பிறை பிரதமை. பிறந்த நட்சத்திர வழிபாடு: சித்திரை.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். புதிய தொழில் வாய்ப்புக்களைத் தள்ளிப் போடுவது நல்லது.

**ரிஷபம்:** ஆக்கபூர்வமான நாள். எடுக்கும் முயற்சிகள் வெற்றியடையும். செய்யும் தொழில் முன்னேற்றமடையும். உத்தியோகத்தர்களின் திறமைகள் வெளிப்படும்.

**மிதுனம்:** யோகமான பலன்கள் காணப்படுகின்றன. தொழில் விஷயமாய் சிலருக்கு வெளிநாடு செல்ல நேரும். அசையாச் சொத்துக்களை வாங்கும் யோகம் உண்டாகும்.

**கடகம்:** கவலையான நாள். எடுக்கும் முயற்சிகள் தோல்வியடையும். குடும்பத்தில் அமைதி குன்றும். வீண் அலைச்சல்களால் உடலில் அசதி, சோர்வு உண்டாகும்.

**சிம்மம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. தொழிலில் பிரயாசை அதிகரிக்கும். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை.

**கன்னி:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் மேன்மை அடையும். உத்தியோக உயர்ச்சிகள் கிடைக்கும்.

**துலாம்:** சுபீட்சமான நாள். சகோதர உறவு பலப்படும். இதுவரை பிரிந்திருந்தவர்கள் மீண்டும் ஒன்று சேர்வார்கள்.

**விருச்சிகம்:** சலனம் மிகுந்த நாள். மனதில் ஒருவித கவலை உண்டாகும். எதையும் சரிவர முடிவு எடுக்க முடியாமல் தடுமாற்றம் உண்டாகும்.

**தனுசு:** நன்மையான நாள். ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் அதிக வருமானம் தரும். அரசாங்கத்தினால் நல்ல சலுகைகள் வழங்கப்படும்.

**மகரம்:** விருத்தியான நாள். செய்யும் தொழிலில் நண்பர்களின் உதவியும், வாடிக்கையாளர்களின் ஆதரவும் நன்மையைத் தரும்.

**கும்பம்:** மேன்மையான நாள். வருமானம் அதிகரிக்கும். கொடுக்கல், வாங்கல் சிறப்பாக அமையும். பெண்கள் சுயதொழிலில் மேன்மை அடைவார்கள்.

**மீனம்:** அலைச்சல் மிகுந்த நாள். சிலர் சுயதொழிலில் தம் பொருள்களை விரைவாக விற்பனை செய்து முடிக்க வீதி வீதியாக அலைந்து திரிவார்கள்.

சந்திராட்டமநாள்: அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் அவசியம் சுபகருமங்கள் மேற்கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

# நல்லிணக்கப் பணியில் ஆன்மீகத் தலைவர்களும்!

## உண்மையான தூதுவர்கள் அவர்களே என்கிறார் ஜனாதிபதி மைத்திரி



கொழும்பு, ஏப். 11

நல்லிணக்கத்தைப் பலப்படுத்தி அனைத்து சமய தத்துவங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மக்களின் மனங்களை இணைக்கும்பணியின்உண்மையான தூதுவர்களாக இருப்பவர்கள் ஆன்மீகத் தலைவர்கள் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை தங்கொட்டுவை சிங்கக்குளியில் நடைபெற்ற 'எரபது வசந்தய' தேசிய மற்றும் சமய நல்லிணக்கம் தொடர்பான கலாசார நிகழ்வு மற்றும் கலாசூரி மார்சலின் ஜயகொடி திருத்தந்தைக்குக் கௌரவமளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

திரிபீடகம், விவிலியம், அல்குர்ஆன் மற்றும் பகவத் கீதையில் நாம் எதிர்பார்க்கும் நல்லிணக்கத்துக்கு வழிகாட்டப்பட்டுள்ளது. பௌத்த பிக்குகள், இந்து, இஸ்லாமிய மற்றும் கத்தோலிக்க சமயத் தலைவர்களுக்கு இதனைச் சமூகத்தில் நடைமுறைப்படுத்தும்பொறுப்பு உள்ளது.

அனைத்து இனங்களுக்கும் மத்தியிலான சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திலேயே வரலாற்று காலம் தொட்டு எமது நாடு கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இன்றும் அனைத்து மக்கள் மத்தியிலும் சமாதானத்தையும்நல்லிணக்கத்தையும்உறுதிப்படுத்திபலமான மக்கள் சமூகமாக நாம் முன்னேறிச் செல்ல வேண்டும்.-என்றார். (எ)

# இலங்கையில் தமது பணியாளர்களுக்கு பாதுகாப்பைக் கோருகிறது சீன நிறுவனம்

கொழும்பு, ஏப்.11

இலங்கையில் தமது பணியாளர்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று மாத்தறை பெலியத்தைப் பகுதி ரயில்வே பணிகளில் ஈடுபட்டுள்ள சீன நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பில் அந்த நிறுவனம் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த சனிக்கிழமை பணியாளர் அறையில் புகுந்த ஒருவர் அங்கிருந்த பணியாளர்களைத் தாக்கியுள்ளார். ஏற்கனவே கிராம மக்களால் சீனப் பணியாளர்கள் தாக்கப்பட்ட சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

இந்த வேலைத் திட்டத்தில் 2 ஆயிரத்து 300 பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். அவர்களில் 380 பேர் சீனர்கள்.

கிராமவாசிகள், சீனப் பணியாளர்களிடம் எரிபொருள்களைத் தருமாறு கோரினர். அதனை வழங்க மறுக்கவே அவர்களைத் தாக்கினர் என்று சீனாவின் தேசிய பொறியியல் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம் ஏற்கனவே பொலிஸில் முறையிட்டுள்ளது.

இந்நிலையில், கடந்தசனிக்கிழமை அதிகாலை 4 மணிக்கு தமது பணியாளரான 31 வயதான சாங் 'பெய் என்பவரின் அறையில் புகுந்த போது அவருக்கு உதவிக்கு வந்த மற்றும் ஒரு சீனப் பணியாளர் மீது கிராமவாசிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதனையடுத்து அவர் மாத்தறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பரீட்சை திணைக்கள பணிகள் விரைவில் 'டிஜிற்றல்' மயம்

கொழும்பு, ஏப். 11

பரீட்சைகள் திணைக்களத்தின் அனைத்து நடவடிக்கைகளும் விரைவில் டிஜிற்றல் மயப்படுத்தப்படவுள்ளன.

இதுதொடர்பாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஜயந்த புஷ்பகுமார தெரிவித்தவை வருமாறு:-

இதற்குத் தேவையான 6 மாடிகளைக் கொண்ட புதிய கட்டடம் ஒன்று திணைக்கள வளவில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இதற்காக 50 கோடி ரூபா செலவிடப்படுகின்றது. இந்தப் புதிய கட்டடம் நவீன தொழில் நுட்பத்தை உள்ளடக்கியுள்ளது.

பரீட்சை நடத்துதல், விடைத்தாள் பரீட்சித்தல், பெறுபேறுகளை வெளியிடல், வினாத்தாள் தயாரிப்பு போன்ற நடவடிக்கைகளை விரைவாகவும் நம்பத்தகுந்த முறையிலும் மேற்கொள்வதற்கு இது துணைபுரியும்.

அதனைத் தொடர்ந்து விடைத்தாள் திருத்துவதற்காகப் பாடசாலைகளைப் பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்படாது. பரீட்சைகளுக்காக இணையத்தளத்தின் மூலம் விண்ணப்பிக்க முடியும். பரீட்சை சான்றிதழை வழங்கும் வேலைத்திட்டம் செயற்றிறனாக்கப்படும். -என்றார். (எ)

# பண்டிகைக் காலத்தில் அதிக கட்டணம் அறவிட்டால் முறையிடுமாறு அறிவுறுத்து

## போக்குவரத்து ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, ஏப். 11

பண்டிகை காலங்களில் பயணிகளிடம் அதிக கட்டணங்களை அறவிடும் பஸ்களின் போக்குவரத்து அனுமதிப்பத்திரம் 3 மாதங்களுக்குத் தடை செய்யப்படும் என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் அதிக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று வருகின்றன என்று ஆணைக்குழுவின் தலைவர் எம்.ஏ.ஜே.ஹேமசந்திர தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அதிக கட்டணங்களை அறவிடும் பஸ்கள் தொடர்பாக 1955 என்ற இலக்கத்துக்கு முறையிட முடியும்.

இதேவேளை, பயணிகளிடம் அதிக கட்டணம் அறவிடும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் தொடர்பில் 0117555555 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு முறையிட முடியும்.-என்றார். (எ)

காலைக்கதிர்



# இடைவெளி... விரியுமா சுருங்குமா?

## அரசின் 'செல்வாக்கு' மூலம் கூட்டமைப்பு நன்மை செய்யும் என்பது தமிழர் எதிர்பார்ப்பு!

செல்வரட்ணம் சிறிதரன்

இலங்கை அரசின் மீது வாள் போல் தொங்கிக் கொண்டிருப்பதாகக் கூறப்பட்ட ஐ. நா. மனித உரிமைப் பேரவையின் 2015 ஆம் ஆண்டுதீர்மானம். நிறைவேற்றப்படாத நிலையில் அரசுக்கு மேலும் இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள இரண்டு வருட காலம் என்பது, அரசுக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் என்று குறிப்பிடுவது சரியான சொற்பிரயோகமல்ல என்பது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளராகிய நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் வாதமாகும்.

இலங்கைக்கு எதிராக 2015 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட மனித உரிமைப் பேரவையின் 30/1 தீர்மானத்தை அரசு நிறைவேற்றுவதை ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் மேற்பார்வை செய்வது அல்லது கண்காணிப்பதற்கான சந்தர்ப்பம் என்றே இதற்குப் பொருள் கொள்ள வேண்டும் என்று அவர் வியாக்கியானம் செய்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு, ஆட்சிப் பொறுப்பை ஏற்றதன் பின்னர் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் அமர்வில் நிறைவேற்றப்பட்ட முதலாவது தீர்மானத்துக்கு அரசு அனுசரணை வழங்கி அதனை முழுமையாக நிறைவேற்றுவதாக உறுதியளித்திருந்தது. அவ்வாறு நிறைவேற்றுவதற்கான ஒரு கால அவகாசமும் ஐ.நா. மனித உரிமைப் பேரவையால் வழங்கப்பட்டிருந்தது. அந்தக் காலப் பகுதியில் ஏற்படும் முன்னேற்றத்தைக் கண்காணிக்கும் பொறுப்பு ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்துக்கு வழங்கப்பட்டிருந்தது.

ஆனால், குறிப்பிட்டு கூறத்தக்க வகையில், ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்றுவதில் முன்னேற்றங்கள் காணப்படவில்லை. இந்த நிலையிலேயே நல்லாட்சி அரசுக்கு எதிராக, மீண்டும் அதன் இணை அனுசரணையுடன் இரண்டாவது பிரேரணை நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

முதலாவது பிரேரணையில் கூறப்பட்டுள்ள அனைத்து விடயங்களையும் அரசு முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்பதே இந்தப் பிரேரணையின் வலியுறுத்தலாகும். இரண்டாம் முறையாக அரசுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ள போதிலும், பிரேரணையை நிறைவேற்றாமல், கடந்த முறையைப் போல் காலத்தை இழுத்தடித்தால் என்ன நடக்கும் என்பது குறித்து எந்த விதமான நிபந்தனையும் இதில் விதிக்கப்படவில்லை.

இலங்கை அரசைச் செயற்படுத்துவதற்குத் தூண்டும் வகையில் நிபந்தனையைப் போன்று எந்தவிதமான வலியுறுத்தலுமின்றி இரண்டாவது பிரேரணை நிறைவேற்றப்பட்டிருக்கின்றது என்பது முதலாவது விடயம்.

இரண்டாவது விடயம் முதல் பிரேரணையில் கூறப்பட்டுள்ளவாறு கலப்பு நீதிவிசாரணைப் பொறிமுறையை ஏற்படுத்த மாட்டோம் என்று அரசு தெளிவான ஒரு நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில், அத்தகைய பொறிமுறையொன்றை உருவாக்கி உண்மையைக் கண்டறியவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவும், ஏற்கனவே நிகழ்ந்ததைப் போன்ற மனித உரிமை மீறல்களோ அல்லது, சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல் சம்பவங்களோ இடம்பெற மாட்டா என்பதை உறுதி செய்யவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட விடயங்களைக் கொண்ட பிரேரணை நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இது மிகவும் வேடிக்கையானது. பாதிக்கப்பட்டு - நீதிக்காக ஏங்கும் மக்களைப் பொறுத்தமட்டில், இது விபரீதமானதும்கூட.

பிரேரணை நிறைவேற்றப்பட்ட சூட்டோடு சூடாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வடக்கே பலாலியிலும், தெற்கே குருநாகலையிலும் இரண்டு நிகழ்வுகளில் கலந்து கெண்டு உரையாற்றுகையில், யுத்தத்தை வெற்றி கொண்ட படையினருக்கு எதிராகப் போர்க் குற்றங்கள் சுமத்தப்படமாட்டா. அவர்களுக்கு எதிராக விசாரணைகள் நடத்தப்படமாட்டா என்பதை ஆணித்தரமாகத் தெரிவித்துள்ளார்.

அரச படையினர் போர்க் குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை என்பது முன்னைய அரசின் நிலைப்பாடாகும். அதே நிலைப்பாட்டையே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தலைமையிலான இந்த நல்லாட்சி அரசும் கொண்டிருக்கின்றது. போர்க் குற்றச் செயல்களில் ஈடுபடாத படையினர் மீது ஏன் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பது அமைச்சர் ராஜித சேனாரத்னவின் கேள்வியாகும். குற்றச் செயல்களில் ஈடுபடாத படையினருக்கு எதிராக விசாரணைகள் நடத்தப்படமாட்டா. அது அவசியமில்லை என்பது ராஜிதவின் கூற்று.

குற்றச்செயல்களில் ஈடுபடவில்லை என்றால் யுத்த மோதல்களின்போது பொது மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பல்வேறு குற்றச் செயல்கள் இடம்பெற்றிருக்கின்றன. ஆள்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள். எனவே, அங்கு என்ன நடந்தது, உண்மையான நிலைமைகள் என்ன என்பதைக் கண்டறிவதற்காக விசாரணைகள் நடத்தப்பட வேண்டிய அவசியம் எழுந்திருக்கின்றது. உண்மையைக் கண்டறிந்தால்தான், இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடக்காமல் தடுக்க முடியும் என்பது ஐ.நாவினதும் சர்வதேசத்தினதும் நிலைப்பாடாகும். எனவே, அதற்காகத்தான் விசாரணைகள் அவசியம் என்று வலியுறுத்தப்படுகின்றது.

இந்த நிலையில் ஒரு விசாரணையை எதிர்கொள்வதற்கு அரசு அஞ்ச வேண்டியதில்லை. அத்தகைய விசாரணையை எதிர்கொள்வதற்கு முதுகெலும்பு இல்லையா என்று சுமந்திரன் கேள்வி எழுப்பியிருந்தார். இந்த முதுகெலும்பு விவகாரம் அரசியல் விமர்சகர்கள் மத்தியில் பெரும் தாக்கத்தைச் செலுத்தியிருந்தமையை ஊடகங்களில் காணக்கூடியதாக இருந்தது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் இந்த நல்லாட்சி அரசு உருவாக்கத்தின் பிதாமகர்களில் ஒருவராகக் கருதப்படும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க மற்றும் அமைச்சர் ராஜித சேனாரத்ன போன்றோர் ''சர்வதேச நீதிபதிகளுக்கோ அல்லது விசாரணையாளர்களுக்கோ அவசியமில்லை.

உள்ளக விசாரணைகளே நடத்தப்படும். விசேடமாக அரச படையினர் எந்தக் காரணத்தைக் கொண்டும் போர்க் குற்ற விசாரணைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள்'' என்று அறுத்து உறுத்து தெளிவாகக் கூறியிருக்கின்றார்கள்.

கலப்பு நீதி விசாரணைப் பொறிமுறையின் ஊடாகவே பொறுப்புகூறுதலுக்கான விசாரணைகள் நடத்தப்படவேண்டும்என்றநிலைப்பாட்டில் இருந்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் விலகவில்லை. அவர் தொடர்ந்தும்அதேநிலைப்பாட்டிலேயே இருந்து வருகின்றார். ஆனால், அதற்கு எதிர் மாறான நிலைப்பாட்டையே அரசு கொண்டிருக்கின்றது. இருந்தும் அரசுக்கு மேலும் இரண்டு வருட கால அவகாசம் மனித உரிமைகள் பேரவையால் வழங்கப்பட்டிருக்கின்றது. இந்தக் காலப் பகுதியில் அரசு தனது கடமைகளையும் பொறுப்புக்களையும் உரிய முறையில் நிறைவேற்றுமா என்பது பாதிக்கப்பட்ட மக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்புக்களிலும் சந்தேகத்திற்கு உரியதாகவே இருக்கின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை என்பது உலக நாடுகள் பலவற்றை உறுப்பினர்களாகக் கொண்டதோர் உயரிய சபையாகும். ஆனாலும், அங்கு கொண்டு வரப்படும் தீர்மானங்களைச் சம்பந்தப்பட்ட நாடுகள் முறையாகக் கடைப்பிடித்து நிறைவேற்ற வேண்டும் என்ற அழுத்தத்தைக் கொடுப்பதற்கு உரிய செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான அதிகார வலுவை அது கொண்டிருக்கவில்லை.

ஒரு தீர்மானத்தின் ஊடாகச் சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கலாமே தவிர அவற்றை நிறைவேற்ற வேண்டும் எனக் கூறி, அவற்றைச் செயற்படுத்துவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கைகளின் மூலம் நிர்ப்பந்திப்பதற்கான செயலுரிமை அதனிடம் இல்லை. இந்த நிலையில் அடுத்து வரும் இரண்டு வருடங்களில் அரசை ஐ.நா. எவ்வாறு செயற்படச் செய்யப் போகின்றது என்பது தெரியவில்லை.

கூட்டமைப்பின் தலைமை முன்வைத்துள்ள கோரிக்கையின்படி, இலங்கையில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளருடைய அலுவலகம் ஒன்றை நிறுவி, அதன் ஊடாக ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் தீர் மானத்தை நிறைவேற்றுவதற்கு ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் நடவடிக்கை எடுக்குமா என்பது தெரியவில்லை. அத்துடன், அத்தகைய அலுவலகம் ஒன்றை இலங்கையில் நிறுவிச் செயற்படுத்துவதற்கு அரசு உடன்படும் என்று கூறுவதற்கில்லை.

எனவே, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் ஊடாக இலங்கைக்கு அழுத்தத்தைக் கொடுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமையின் நகர்வு வெற்றியளிக்குமா என்பது சந்தேகமாகவே தோன்றுகின்றது.

யுத்தத்தால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்கள். அந்த மக்களின் ஏகோபித்த அரசியல் தலைமையாகத்தமிழ்த்தேசியகூட்டமைப்பே திகழ்கின்றது. எனவே, அந்த மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், அவற்றுக்குரிய செயற்பாடுகளையும், அரசியல் நகர்வுகளையும் முன்னெடுக்க வேண்டியது கூட்டமைப்பின் தலையாய கடமையாகும். அந்தக் கடமையைக் கடந்த எட்டு வருடங்களில் அது எந்த அளவுக்கு முன்னேற்றகரமான முறையில் முன்னெடுத்திருக்கின்றது என்பது கேள்விக்குரிய விடயமே.

அரசுடன் நேரடியான செயற்பாடுகளின் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது என்பது சாத்தியமற்றது என்ற காரணத்துக்காக சர்வதேசத்தின் துணையுடன் - சர்வதேசத்துடன் இணைந்து காய் நகர்த்தல்களை மேற்கொண்டு அரசை வழிக்குக் கொண்டு வருவதற்கான இராஜதந்திரச் செயற்பாடுகளைக் கூட்டமைப்பின் தலைமை முன்னெடுத்திருப்பதாகக் கூறப்படுகின்றது. இது கிட்டத்தட்ட ஓர் அரசியல் பிரசாரமாகவே முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது என்றுகூடக் குறிப்பிடலாம்.

முன்னைய அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் இத்தகையதொரு நடவடிக்கை சரியானதாகத் தோற்றலாம். ஆனால், நல்லாட்சிக்கான அரசை உருவாக்குவதில் பெரும் பங்கைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையே ஆற்றியிருந்தது என்றும் பெருமையாகப் பேசப்படுகின்றது.

புதிய அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், அந்த ஆதரவின் ஊடான அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைப்பதற்கும், அவர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் உரிய பலன் தரத்தக்க வகையிலான அரசியல் நகர்வுகளை மேற்கொள்ளவில்லை. அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்க வேண்டும் என்ற கரிசனை மேலோங்கியிருக்கின்றதே தவிர, பாதிக்கப்பட்ட தமது மக்களுடைய பிரச்சினைகளுக்குப், படிப்படியாகவாவது தீர்வு காண வேண்டும் என்பதற்கான அழுத்தத்தை கொடுத்திருப்பதாகத் தெரியவில்லை.

பாதிக்கப்பட்ட மக்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும், அவர்களுக்கு ஆதரவளித்து, வழிநடத்துவதிலும் கூட்டமைப்பின் தலைமை தவறியிருக்கின்றமையே காண முடிகின்றது. இதனால் கூட்டமைப்பின் தலைமைக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இடையிலான இடைவெளிவிரிவடைந்து செல்லும் தன்மையும் காணப்படுகின்றது.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் 2015 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தீர்மானத்தில் அமெரிக்காவுடன் இணைந்து கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தினார் எனப் பெருமையாகச் சொல்லப்படுகின்றது. அத்தகைய செல்வாக்கு மிக்க நிலையில், தமிழ் மக்களுடைய காணி விவகாரத்திற்கும், அது போன்ற ஏனைய பிரச்சினைகளுக்கும், தீர்வு காணலாம் தானே என்ற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியாதிருக்கின்றது. அரசுடன் உள்ள நெருக்கத்தைப் பயன்படுத்தியோ அல்லது அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளுடன் கொண்டுள்ள தொடர்புகளையோ பயன்படுத்தி, இராஜதந்திர நகர்வொன்றை மேற்கொள்ளலாம்தானே? அதன் ஊடாக அரசாங்கத்திற்கு அழுத்தத்தைப் பிரயோகித்து பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம் அல்லவா?.




# “ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?” 146

பொன்.வேணு கிருஷ்ணா

சோவியத்தையும் வலுவிழக்கச் செய்ய முடியும் என நினைத்து, ‘பாக்கு’ நகரை நோக்கி ஜேர்மன் படைகள் திரும்பின. எண்ணெய் வளமிக்க பாக்குவை எக்காரணம் கொண்டும் விட்டுக் கொடுத்து விடக்கூடாது என்பதற்காக சோவியத் மிகக் கடுமையாகப் போரிட்டது. ஒட்டுமொத்த இரண்டாம் உலகப் போரில் அமெரிக்காவும், பிரிட்டனும், இழந்த படைவீரர்களின் எண்ணிக்கையை விட, அதிக அளவில் பாக்குவில் மட்டுமே பறிகொடுத்தது சோவியத். 5 லட்சத்திற்கும் மேற்பட்ட சோவியத் படைகளும் 2 லட்சம் மிகச் சிறந்த ஜேர்மனியப் படைகளும், எண்ணில் அடங்கா அப்பாவி மக்களும் உயிரிழந்தனர். மீதமுள்ள ஜேர்மன் படைகள் அனைத்தும் சோவியத்திடம் சரணடைந்தது. பாக்கு, ஸ்டாலின்கிராட், குர்ஸ்க் என ஒவ்வொன்றாக போர்ச் சூழலிலிருந்து மீண்டு அமைதிக்கு திரும்பத் துவங்கின. உலகை ஆக்கிரமிக்கிற எண்ணத்தோடு வெகு விரைவாக முன்னேறிக் கொண்டிருந்த ஜேர்மன் போர் பூதத்தின்பயணம்தடுக்கப்பட்டது.

ஜேர்மனியை நேருக்கு நேராக எதிர்க்க வேண்டிய நிலையில் இருந்த பிரிட்டன் சோவியத்துடன் நேரடியாக கைகோக்க விரும்பவில்லை. அமெரிக்காவும், பிரிட்டனும். ஜேர்மனியின் ஆதிக்கம் குறைவாக இருந்த தெற்கு இத்தாலியிலும், ஆபிரிக்காவிலும், மெடிட்டரேனியன் பகுதிகளிலும், மத்திய கிழக்கு நாடுகளிலுமே கவனம் செலுத்தி ஜேர்மனியுடனான நேரடிப் போரில் இருந்து தப்பித்துக் கொண்டது. இந்தியாவின் மீதான ஆதிக்கத்தையும் வியாபாரத்தையும் தடையின்றி தொடரவும்இந்தப் பாதையினைபயன்படுத்திக் கொண்டது பிரிட்டன். இதனால் பிரிட்டன் மற்றும் அமெரிக்காவை நம்பி மட்டுமே இப்போரில் வெல்வதென்பது கடினமான காரியம் என்பதனை ஸ்டாலின் நன்கு உணர்ந்து வைத்திருந்தார். சுயபலத்தோடு போரிடுவது மட்டுமே அப்போதைய ஒரே வாய்ப்பாக இருந்தது சோவியத்திற்கு. ஜப்பானும் சீனாவை ஆக்கிரமிப்பதில் தீவிரம் காட்டியதால், ஸ்டாலின் தன்னுடைய முக்கியமான படைத்தளபதி மார்ஷல் சுகோவை படைகளுடன் மாஸ்கோவுக்கு வருமாறு பணித்தார். சுகோவின் படைகளின் வீரத்தால் 4 லட்சம் ஜேர்மனியப் படைகள் வீழ்த்தப்பட்டன. அதே வேளையில் 900 நாள்களாக நடைபெறும் கடுமையான சண்டையின் காரணமாக 10 லட்சம் மக்களை இழந்த பின்னும், ஜேர்மனிக்கு ஸ்டாலின்கிராட் என்னும் பகுதியினை விட்டுத்தராமல் போராடின சோவியத் படைகள்.

திணிக்கப்பட்ட போரினை எதிர் கொள்கிற வேளையில், வளர்ந்து வரும் சோவியத்தின் பொருளாதாரமும் சீரழியாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்தை உணர்ந்தது சோவியத். மிகப்பெரிய பொருளாதார மற்றும் தொழில் நகரமான மாஸ்கோவைச் சுற்றி போர்ச்சூழல் நிலவியதால், ஒரு கோடி மக்களை மிக விரைவாக சோவியத்தின் கிழக்குப் பகுதிக்கு இடம் பெயரவைத்து, அங்கே இரண்டாவது பெரிய தொழில் நகரை உருவாக்கி, பொருளாதாரத்தை வீழாமல் பார்த்துக் கொள்ள முடிவு செய்தது சோவியத் அரசு. 2000 தொழிற்சாலைகள் அங்கே புதிதாக உருவாக்கப்பட்டன. ஏராளமான வீடுகள் கட்டப்பட்டன. இதனால் விரைவிலேயே உற்பத்தியில் ஜேர்மனியையும் மிஞ்சியது சோவியத். ஜேர்மனியை சமாளிக்க 40,000 T - 34 வகை போர் டாங்கிகளும், 50,000 போர் விமானங்களும், ஜேர்மன் தரத்தை விடவும் சிறந்ததாகத் தயாரிக்கப்பட்டன. இவையனைத்தும் நிகழ்ந்து இரண்டே ஆண்டுகளில். அம்மக்களின் அர்ப்பணிப்பும், தேசப்பற்றும் மிகப் பெரிய பங்காற்றின.

**40 லட்சம் முதல் 80 லட்சம் வரையிலான உக்ரேனியர்களும், 25 லட்சம் பெலேரசிய மக்களும் ஜேர்மன் படையினரால் கொல்லப்பட்டனர்.200இற்கும்மேற்பட்ட நகரங்களும், 9000 இற்கும் மேற்பட்ட கிராமங்களும் ஒட்டுமொத்தமாக அழிக்கப்பட்டன**




ஸ்டாலினின் படத்தை அட்டையில் தாங்கி வந்த ரைம் பத்திரிகை

கிழக்கே தொழிற்சாலைகளை உருவாக்கி பொருளாதாரத்தைமேம்படுத்திக் கொண்டே மேற்கே ஜேர்மனியுடனான போரிலும் போராடிக் கொண்டிருந்தது சோவியத். பயிற்சி பெற்ற போர் படைகள் தவிர சாதாரண மக்களும் தங்களால் இயன்ற அளவிற்கு ஜேர்மன் படைகளுடன் போராடினர். அவர்களில் மட்டும்.

*40 லட்சம் முதல் 80 லட்சம் வரையிலான உக்ரேனியர்களும், 25 லட்சம் பெலேரசிய மக்களும் ஜேர்மன் படையினரால் கொல்லப்பட்டனர். 200இற்கும் மேற்பட்ட நகரங்களும், 9000இற்கும் மேற்பட்ட கிராமங்களும் ஒட்டுமொத்தமாக அழிக்கப்பட்டன.*

இப்படியாக லட்சக்கணக்கான மக்களை கொன்று குவித்தாலும், அம்மக்களின் போராட்ட குணம் காரணமாக ஹிட்லரின் ஜேர்மன் படையினரால் சோவியத்திற்குள் மேலும் முன்னேற முடியவில்லை. அதே இடத்திலே பல மாதங்களாக சண்டையிட்டுக் கொண்டிருந்தனர்.எப்படியாவது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த மாஸ்கோவைக் கைப்பற்றிவிட வேண்டு மென்பதே நாஜிப்படைகளின் குறிக்கோளாக இருந்தது. தெற்கு சோவியத்தில் பாக்கு பகுதிகளைச் சுற்றி இருக்கும் எண்ணெய் வளத்தை ஆக்கிரமிப்பு செய்துவிட்டால், எண்ணெய் வளமும் கிடைக்கும், சோவியத்தையும் வலுவிழக்கச் செய்ய முடியும் என நினைத்து, ‘பாக்கு’ நகரை நோக்கி ஜேர்மன் படைகள் திரும்பின. எண்ணெய் வளமிக்க பாக்குவை எக்காரணம் கொண்டும் விட்டுக் கொடுத்து விடக்கூடாது என்பதற்காகச் சோவியத் மிகக் கடுமையாகப் போரிட்டது. ஒட்டுமொத்த இரண்டாம் உலகப் போரில் அமெரிக்காவும், பிரிட்டனும், இழந்த படைவீரர்களின் எண்ணிக்கையை விட, அதிக அளவில் பாக்குவில் மட்டுமே பறிகொடுத்தது சோவியத். 5 லட்சத்திற்கும் மேற்பட்ட சோவியத் படைகளும் 2 லட்சம் மிகச்சிறந்த ஜேர்மனியப்படைகளும், எண்ணில் அடங்கா அப்பாவி மக்களும் உயிரிழந்தனர். மீதமுள்ள ஜேர்மன் படைகள் அனைத்தும் சோவியத்திடம் சரணடைந்தது. பாக்கு, ஸ்டாலின்கிராட், குர்ஸ்க் என ஒவ்வொன்றாக போர்ச் சூழலிலிருந்து மீண்டு அமைதிக்கு திரும்பத் துவங்கின. உலகை ஆக்கிரமிக்கிற எண்ணத்தோடு வெகு விரைவாக முன்னேறிக் கொண்டிருந்த ஜேர்மன் போர் பூதத்தின் பயணம் தடுக்கப்பட்டது.

போரின் மிக முக்கியமான ஆண்டுகளில் எப்போதும் குறைந்தது 200 ஜேர்மன் படைகுழுக்களுடனாவது போரிட வேண்டிய கட்டாயத்தில் இருந்தது சோவியத். ஆனால் அமெரிக்காவும், பிரிட்டனும், இணைந்தே வெறும் 10 ஜேர்மன் படைகுழுக்களுடன் தான் போரிட்டுக் கொண்டிருந்தன. அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகள் அனைத்தும் இணைந்து, ஒட்டுமொத்தப் போரிலும் 10 லட்சம் ஜேர்மன் படையினரையே வீழ்த்தினர். மாறாக சோவியத் மட்டும் தனியாக 60 லட்சம் ஜேர்மன் படைகளை வீழ்த்தியது.

இரண்டாம் உலகப்போரை வென்றதே அமெரிக்கா தான் என்கிற மிகப் பெரிய பரப்புரை இன்று வரை செய்யப்பட்டு வந்தாலும், உண்மையில் சோவியத்தும் அத்தேசத்தின் மக்களும் தங்களுடைய வீரத்தினால் பெற்றுத்தந்த வெற்றியே அது என்பதை தீவிர வரலாற்று ஆய்வாளர்கள் அனைவரும் ஒப்புக்கொள்வார்கள்.

## மறைக்கப்பட்ட அமெரிக்க வரலாறு அமெரிக்காவிலும் ஸ்டாலின் புகழ்:

சோவியத்தின் ஸ்டாலின் கிராடில் ஜேர்மனியை சரணடைய வைத்த பின்பு, ஸ்டாலினிற்கு உலக அளவில் ஆதரவு பெருகியது. அது அமெரிக்காவிலும் எதிரொலித்தது. சோவியத்தைத் தொழில் மயமாக்கியதிலும், புதுமையான யுத்திகளால் பொருளாதார முன்னேற்றத்தை சாத்தியமாக்கியதிலும் ஸ்டாலினின்பங்கைப்பாராட்டியெழுதின அமெரிக்கப் பத்திரிகைகள். 1942 -இன் சிறந்த மனிதராக ஸ்டாலினை ‘ரைம்ஸ்’ அறிவித்தது. மற்றுமொரு பத்திரிக்கையான ‘லைப்’ கூட அவரை வெகுவாகப் பாராட்டியது. சோவியத்தின் மீது பெரிய அளவில் நம்பிக்கை வைத்திராத அமெரிக்க அரசுகூடத்தன்னுடைய படைகளை அனுப்பி சோவியத்திற்கு உதவப்போவதாக அறிவித்தது. ஆனால் அது வெறும் அறிவிப்பாகவே பல ஆண்டுகள் நீடித்தது வேறு கதை.

சோவியத்திற்குள்ளும், மேற்கு ஐரோப்பா முழுவதிலும் நுழைந்து ஆக்கிரமிப்பு நடத்திய ஜேர்மனியை சோவியத்தில் சரணடைய வைத்தால் மட்டும் போதாது, ஜேர்மனியிலேயே வீழ்த்தி ஹிட்லரை சரணடைய வைத்தால்தான் உண்மையான வெற்றி என்பதை ஸ்டாலின் நன்கு அறிந்து வைத்திருந்தார். ஆனால் இதனைக் கண்டும் காணாமல் அமெரிக்காவும், பிரிட்டனும், ஆபிரிக்காவின் வடக்கே இத்தாலியின் சிசிலி தீவை ஆக்கிரமிக்கப் புறப்பட்டன. மேலும் தெற்காசியாவிலுள்ள காலனி நாடுகளைத் தனது வசம் வைத்துக்கொண்டிருக்க, அக்கடல் வழிப்பாதை பிரிட்டனிற்கு அவசியமாக இருந்தது. சிசிலியில் இத்தாலி தோற்றிருந்தாலும், அது அவர்களுக்கு மிகப்பெரிய இழப்பாகவோ தோல்வியாகவோ இருக்கவில்லை.

மறுபுறம் சோவியத்தோ, பலம் பொருந்திய ஜேர்மனியை எதிர்த்துப் போலந்தில் கடுமையாகப் போரிட்டுக் கொண்டிருந்தது. போலந்து வழியாகத் தான் இரண்டுமுறையும் சோவியத்திற்குள் ஜேர்மனியப்படைகள் நுழைந்தன. ஆகையால் என்ன விலை கொடுத்தேனும் போலந்தை வென்று அங்கு ஒரு நட்பரசு அமைக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தது சோவியத். ஒட்டுமொத்த இரண்டாம் உலகப்போரிலும், போலந்து மக்களைப் போல் பாதிக்கப்பட்டவர்கள் இல்லை என்கிற அளவிற்கு அந்தத் தேசம் முழுவதும் சேதத்திற்குள்ளாகியது. 30 லட்சம் யூதர்கள் உட்பட மொத்தம் 60 லட்சம் மக்கள் கொல்லப்பட்டனர். அங்கு ஜேர்மன் படைகளால் தோற்றுவிக்கப்பட்ட கொடூரமான கொலைகாரக் கேம்ப்புகள் சோவியத் படைகளால் உலகுக்கு வெளிக்கொண்டுவரப்பட்டன. பின்னர் ரொமேனியா, பல்கேரியா, ஹங்கேரி, செக்கோஸ்லோவோக்கியா, யுகோஸ்லாவியா என ஜேர்மனியின் தோல்வியும் சோவியத்தின் வெற்றியும் ஒன்று சேரத் தொடர்ந்தது. ஜேர்மனியும் அவ்வளவு எளிதில் தோற்றுவிடாமல் மிகக்கடினமாகப் போராடியது. பார்சா, பூடாபெஸ்ட், வியன்னா போன்ற பல நகரங்களை ஜேர்மனியிடமிருந்து மீட்டு விடுதலைசெய்ய 10 லட்சம் படைவீரர்களை சோவியத் இழக்கவேண்டியிருந்தது.

ஏறத்தாழ வெற்றியை சோவியத் நெருங்கி உறுதியாகிவிட்ட சமயத்தில் தான் பல ஆண்டுகளாக தன்னுடைய படைகளை அனுப்புவதாக அறிவித்துக் கொண்டிருந்த அமெரிக்காவும் பிரிட்டனும்தங்களின்படைகளைஅனுப்பின. சோவியத்தின் கரம் உலக அரங்கில் உயர்ந்து கொண்டிருக்கையில், அமெரிக்க உள்நாட்டு ஜனநாயகத்தில் பெரியளவில் குழப்பங்களும் மாற்றங்களும் நிகழ்ந்தன.

(கேள்வி தொடரும்...)

# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




113

## யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த சமாதானப் பேச்சுகள்

### விடுதலைப் புலிகள் விடுத்த காலக்கெடு

வசந்தராஜாவை எனக்கு ஏற்கனவே நன்கு தெரியும். இவர் யாழ்ப்பாணம் வந்த போது என்னையும் தமிழ்ச்செல்வனையும் சந்தித்து நீண்ட நேரம் கலந்துரையாடினார். யாழ்ப்பாணத்தில் தொலைக்காட்சிக் கலைக்கூடம் ஒன்றை அமைக்கும் திட்டத்துடன் இவர் அப்பொழுது வந்திருந்தார். வடக்கில் நடந்தேறும் சமூக, அரசியல், பண்பாட்டு நிகழ்வுகளைத் தென்னிலங்கைச் சிங்கள மக்களுக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டுமென்றும் அதேபோன்று சிங்கள மக்களின் வாழ்நிலையை தமிழ் மக்களுக்கு அறியச் செய்ய வேண்டுமெனவும் விரும்பினார். வடக்கில் வாழும் தமிழர்களுக்கும் தெற்கில் வாழும் சிங்களவர்களுக்கும் மத்தியில் பரஸ்பர நல்லெண்ணத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்துவதே இவரது இலட்சியமாக இருந்தது. இவரது திட்டத்தை நாம் வரவேற்று ஏற்றுக்கொண்டோம். ஆனால், சந்திரிகா அம்மையார் இவரது திட்டத்தை ஏற்க மறுத்துவிட்டார் எனப்பின்பு அறிந்தோம்.

விக்டர் ஐவன் ஒரு முற்போக்கான பத்திரிகையாளர். புரட்சிகர அரசியல் சிந்தனையாளர். விடுதலைப் புலிகள் வட்டாரத்தில் இவருக்கு நல்ல மதிப்புண்டு. எழுத்தாளர்கள் குழுவுடன் இவர் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அப்பொழுது பேச்சுகள் முன்னேற்றமின்றி முடங்கிப் போயிருந்த காலகட்டம். யாழ்ப்பாணத்தில் என்னைச் சந்தித்த விக்டர், சமாதானப்பேச்சுகள் பற்றிக் கலந்துரையாடினார். விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு பற்றி வினவினார். எமது கோரிக்கைகள் சிலவற்றை விட்டுக் கொடுத்து அரசுடன் சமரசம் காணமுடியுமா எனக் கேட்டார். நாங்கள் கோரிக்கைகள், நிபந்தனைகள் எதையும் முன்வைக்கவில்லை, எமது மக்களின் நாளாந்த ஜீவாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்குமாறே அரசை வேண்டி நிற்கிறோம் என விளங்கப்படுத்தினேன். தமிழர் தேசம் மீது திணிக்கப்பட்ட அநீதியான பொருளாதார முற்றுகைகள், தடைகள், கட்டுப்பாடுகள் காரணமாக எமது மக்களின் சமூகப் பொருளாதார வாழ்வியக்கம் பாரதூரமான பாதிப்பை அடைந்துள்ளதாக எடுத்துக் கூறிய நான், சந்திரிகாவின் அரசு இராணுவ நலனுக்கே முன்னுரிமை கொடுத்து வருவதாகக் கூறினேன். யாழ். குடாநாடு மீது படையெடுக்கும் அந்தரங்க தந்திரோபாயத்துடன் அரசு செயற்படுகிறது என்ற எனது குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள மறுத்தார் விக்டர் ஐவன். சந்திரிகாவை ஒரு முற்போக்கான சோசலிசவாதியாகக் கருதி, அவருக்கு ஆரம்பத்தில் ஆதரவு தெரிவித்த எழுத்தாளர்களில் விக்டர் ஐவனும் ஒருவர். காலப்போக்கிலே சந்திரிகாவின் உண்மை முகத்தை, அவரது சர்வாதிகார இராணுவ வாதப் போக்கைக் கண்டுகொண்ட ஐவன், ஏமாற்றமடைந்து அரசுக்கு எதிராகத் திரும்பினார்.

அன்று (24 மார்ச் 1995) காலை, சந்திரிகாவின் இரண்டாவது கடிதமும் எமக்குக் கிடைத்தது. அதிகாரத் தோரணையில் எழுதப்பட்ட அந்தக் கடிதத்தில் விடுதலைப் புலிகளால் விடுக்கப்பட்ட 'இறுதி எச்சரிக்கையை' அரசு ஏற்றுக்கொள்ளாது என சந்திரிகா வலியுறுத்தினார். இப்படி எச்சரிக்கை விடுவது ஒரு பகைமையான செயல் என்றும், சமாதான முயற்சியை இது பாழடித்து விடும் என்றும் எச்சரித்த அவர், ஆயுதங்களைக் களைய வேண்டும் என்ற முன்நிபந்தனை எதுவுமின்றி ஓர் ஆயுதம் தரித்த புரட்சி இயக்கத்துடன் பேசுவதற்கு இணக்கம் தெரிவித்ததே விடுதலைப் புலிகளுக்கு அரசு வழங்கிய சிறப்புரிமை எனக் குறிப்பிட்டார். இப்படியாகக் கடும் வார்த்தைகளைப் பிரயோகித்து, தனது வெறுப்பை வெளிக்காட்டிய சந்திரிகா, எரிபொருள்கள் மீதான தடையையும் மீன்பிடி மீதான கட்டுப்பாடுகளையும் நீக்கிவிடும் ஆக்கபூர்வமான முடிவுகளை அரசு எடுத்துள்ளதாகவும் சிங்கள - தமிழ் புத்தாண்டுக்கு (14 ஏப்ரல் 1995) முன்னராக இந்தத் தீர்மானங்கள் நடைமுறைப் படுத்தப்படும் எனவும் உறுதியளித்தார். சந்திரிகாவின் கடிதத்தைக் கீழே பிரசுரிக்கிறோம்.

*24 மார்ச் 1995*

*திரு. வே. பிரபாகரன்*
*தலைவர்*
*தமிழீழ விடுதலைப் புலிகள்*
*தலைமைச் செயலகம்*
*யாழ்ப்பாணம்*

*அன்பின் திரு. பிரபாகரன் அவர்கட்கு,*

*1995 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16, மார்ச் மாதம் 22 ஆம் நாள்களில் நீங்கள் எழுதிய கடிதங்கள் கிடைக்கப் பெற்றேன். நன்றி.*

*உங்களது கடிதங்களில் எழுதப்பட்ட பிரச்சினைகளுக்குப் பதில் அளிப்பதற்கு முன்னராக, கடந்த சனியன்று 16 கைதிகளை விடுதலை செய்தமைக்குத் தனிப்பட்ட முறையில் உங்களுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் எனதும், எனது அரசினதும் நன்றியை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எமது அரசுடன் பேச்சுகளைத் தொடர விரும்பும் உங்களது ஆவலின் வெளிப்பாடான உங்கள் முடிவை நாம் பாராட்டுகிறோம்.*

*நீங்கள் எழுப்பியுள்ள பிரச்சினைகளைப் பொறுத்தவரை, முதலில் நான் எடுத்துக்கூற விரும்புவது என்னவென்றால், விடுதலைப் புலிகள் இயக்கத்தால் விடுக்கப்படும் இறுதி எச்சரிக்கைகளை எமது அரசு ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்பதுதான். சமாதான வழிமுறைக்குப் பங்கம் விளைவிக்கும் பகைமையான நடவடிக்கையாகவே இதனை நாம் கருதுகிறோம் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.*

*இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணவேண்டும் என்ற இலட்சியத்துக்காக, சமாதான முயற்சியின் ஓர் அங்கமாக, வேறு எந்த அரசும் எடுக்கத் துணியாத பல நடவடிக்கைகளை எமது மக்கள் கூட்டணி அரசு எடுத்துள்ளது என்பதை நீங்கள் நன்கறிவீர்கள்.*

*1) ஜனநாயக முறைமையில் நிறுவப்பட்ட அரசுகள், ஆயுதம் தரித்த இயக்கங்களுடன் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு முன்னராக, குறைந்தது குறியீட்டு அடையாளமாக ஆயுதக் களைவைக் கோருவது வழமையான மரபு. உலகம் முழுவதிலும் இந்த மரபைக் காணலாம். எமது அரசு இப்படியான பிரச்சினையை எழுப்பாதது மட்டுமன்றி, யாழ்ப்பாணத்தில் உங்களது தலைமைச் செயலகத்துக்கு வருவதற்கும் இணங்கியது.*

*2) பகை நிறுத்தக் காலத்தில், கிழக்கு மாகாணத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் உங்களது போராளிகள் ஆயுதங்களுடன் நடமாடுவதற்கு நாம் இணக்கம் தெரிவித்தோம். இதுவும் உங்களுக்கு அரசால் வழங்கப்பட்ட இன்னொரு சிறப்புரிமையாகும்.*

*இத்துடன் மேலதிகமாக நாம்,*

*3) பல பொருள்கள் மீதான தடையை நீக்கினோம்.*

*4) பகை நிறுத்த உடன்பாட்டை நடைமுறைப்படுத்தினோம்.*

*5) மீன்பிடித் தடையைப் பகுதியாக நீக்கினோம்.*

*6) யாழ்ப்பாணத்துக்கு மாற்றுப்பாதைகளைத் திறந்துவிடத் தீர்மானித்தோம்.*

*நிர்வாக மற்றும் முட்டுக்கட்டைகள் காரணமாகத் தடை நீக்கம் செய்யப்பட்ட பொருள்கள் போதுமான அளவுக்கு வடக்கை வந்தடையவில்லை என்பது குறித்து வருந்துகிறோம். இந்த நிலைமை எமக்குத் தெரிய வந்ததும் பூநகரியென்னுமிடத்தில் ஒரு புதிய சோதனைச் சாவடியை நிறுவி, வடக்குக்குப் பொருள்கள் சென்றடையும் தடைகளை நீக்கினோம். பொருள்களைத் தடையின்றி விநியோகம் செய்யும் நோக்குடனேயே ஆனையிறவு, சங்குப்பிட்டிப் பாதைகளைத் திறந்துவிட விரும்பினோம் என்பதையும் நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.*

*இவை எல்லாம் எமது அரசு சிந்தித்து எடுத்த முடிவுகள், கடந்த காலங்களில், குறிப்பாகக் கடந்த யு.என்.பி. ஆட்சிக் காலத்தில் சிதைக்கப்பட்ட உறவுகளை மீண்டும் கட்டி எழுப்பி, தமிழ் மக்களுக்கும் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் பரஸ்பர நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் சகோதரத்துவ மனப்பான்மையையும் வளர்ப்பதையே நாம் உண்மையாக விரும்புகிறோம்.*

*நாம் முன்பு கூறியதுபோல, நீங்கள் விடுத்த இறுதி எச்சரிக்கையை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. எனினும், நீங்கள் மார்ச் மாதம் 16 ஆம் நாள் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்ட மூன்று பிரச்சினைகள் எமது தொடர்ச்சியான பரிசீலனையில் இருந்து வந்தன. இந்தப் பிரச்சினைகள் குறித்து நாம் ஆக்கபூர்வமான முடிவுகளை எடுத்துள்ளோம். ஆயினும், இந்த முடிவுகளை நடைமுறைப் படுத்துவது சம்பந்தமாக மேலும் விவரமாகக் கலந்துரையாட வேண்டும்.*

*சிங்கள - தமிழ்ப் புத்தாண்டுடன் இந்த முடிவுகளை அறிவிப்பதே உகந்ததென எண்ணியிருந்தோம். ஏப்ரல் மாதம் 2 - 7 ஆம் திகதி வரையில் அரசியல் பேச்சுகள் ஆரம்பிப்பதற்கு முன்னராக, இந்த வாரம் இந்த முடிவுகள் பற்றி நேரடியாக உங்களுடன் பேசுவதற்கு விரும்பினோம். ஆயினும் நீங்கள் பேச்சுகளை விரும்பவில்லை.*

*மார்ச் மாதம் 16 ஆம் நாள், நீங்கள் எழுதிய கடிதத்தின் மூன்றாம் பக்கத்தில் குறிப்பிடப்பட்ட மூன்று விடயங்கள் குறித்து நாம் கீழ்க்கண்ட முடிவுகளை எடுத்துள்ளோம்.*

*அ) மீன்பிடித் தடையை நீக்குதல்.*

*கரையோரமாகவுள்ள பாதுகாப்புப் படைகளின் முகாம்களிலிருந்து இரண்டு மைல் தூரக் கடற்பரப்பைத் தவிர்த்த ஏனைய கடற் பிரதேசங்களில் மீன்பிடிப்பதற்குத் தடை இராது.*

*ஆ) அத்தியாவசியப் பொருள்கள் மீதான தடை நீக்கம்.*

*எரிபொருள்கள் மீதான தடை நீக்கப்படும். ஏனைய அத்தியாவசியப் பொருள்கள் மீதான தடைகள் ஏற்கனவே அகற்றப்பட்டுள்ளன.*

*இ) பூநகரி முகாமை அகற்றுதல்.*

*வீதியிலிருந்து 600 மீற்றர் வரைக்கும் முகாம் அகற்றப்பட்டிருக்கிறது. 1993 ஆம் ஆண்டு அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனம் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி அரசிடம் நீங்கள் முன்வைத்த கோரிக்கைக்கு இது இசைவானது.*

*1995 ஆம் ஆண்டு சிங்கள - தமிழ்ப் புத்தாண்டுக்கு முன்னராக இந்த முடிவுகளை நடைமுறைப் படுத்த நாம் விரும்புகிறோம். இரு தரப்பும் கூடிக் கலந்தாலோசனை நடத்தினால் நடைமுறைப்படுத்தல் சீராக அமையும் என்பதே எமது கருத்தாகும்.*

*"போர் நிறுத்தத்துக்கும் நிபந்தனையற்ற பேச்சுகளுக்கும் நாங்கள் தயார் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்." என நீங்கள் 1994 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 2 ஆம் நாள் எனக்கு எழுதிய முதற் கடிதத்தில் தெரிவித்த உற்சாகமூட்டும் வாசகத்தைக் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். "இனப்பிரச்சினைக்கு மூலமான அடிப்படை அரசியல் பிரச்சினைகள்" (மார்ச் 16 இல் எழுதிய கடிதத்தைப் பார்க்கவும்) உட்பட சமாதானப் பேச்சுகள் தொடர்ந்து நடத்துவதற்குத் தேவையான கால அட்டவணை, நிகழ்ச்சி முறை குறித்து நாம் இணக்கப்பாடு காண்பது அதிமுக்கியமானது என்பதையும் நாம் வலியுறுத்த விரும்புகின்றோம்.*

*எமது நல்லாசிகள்*
*உங்கள் நேர்மையுள்ள*
*சந்திரிகா பண்டாரநாயக்கா*
*குமாரதுங்கா*

(தொடரும்...)

வேலணை பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான தொற்றா நோய்கள் தொடர்பான இலவச மருத்துவ பரிசோதனையும் கருத்தரங்கும் வேலணை ஆயுர்வேத மத்திய மருந்தகத்தால் வேலணை பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

வேலணை ஆயுர்வேத மத்திய மருந்தக வைத்திய பொறுப்பதிகாரி கே.நடராசா மற்றும் ஆயுர்வேத வைத்திய அதிகாரிகள் திருமதி.கே.எழிலினி, திருமதி என்.வாரணி ஆகியோரும் பங்குபற்றி வைத்திய பரிசோதனைகளை நடத்தினார்கள். தொடர்ந்து ஆயுர்வேத வைத்திய அதிகாரி திருமதி கே.எழிலினியால் தொற்றா நோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் நடாத்தப்பட்டது. (ஐ)











சர்வதேச லயன்ஸ் கழகத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தால் சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் நடத்திய நிகழ்வில் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 91 மாணவர்களுக்கு கேடயம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக லயன்ஸ் கழகத்தின் நூற்றாண்டு கால ஆளுநர் லயன் வைத்தியர் வை. தியாகராஜா கலந்து கொண்டார். அத்துடன், நிகழ்வில் வைத்தியர் எஸ்.அருளானந்தம், சாவகச்சேரி வணிகர் கழகத் தலைவர் ந.சிவபாலன் சாவகச்சேரி இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன முகாமையாளர் ந.பிரதீபன்,சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் சுரேஷ் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ-10-21)










கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் அன்னை முன்பள்ளியின் வருடாந்த சிறுவர் விளையாட்டு விழா கடந்த சனிக்கிழமை மழலைகளின் பல்வேறு நிகழ்வுகளுடன் சிறப்பாக இடம்பெற்றது. இதில் முதன்மை விருந்தினராகக் கரைச்சிப் பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன் மற்றும் அருட்தந்தையர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-70)





புத்தாக்க அரங்க இயக்கத்தினரால் சாந்தை சிற்றம்பலம் வித்தியாசாலையில் சிறுவர் அரங்க திறன் விருத்தி பயிற்சிப் பட்டறை நிகழ்வு இடம்பெற்றது. மாணவர்களது கற்றல் விருத்திக்கு அரங்கத் திறன்களைப் பயன்படுத்தும் வகையில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

வளவாளர்களாக எஸ்.ரி.குமரன், இரா. இதயராஸ், எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோர் கலந்துகொண்டு பயிற்சிகளை வழங்கினர். தரம் 5 மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு திறன்களை வெளிப்படுத்தி மகிழ்ச்சிகரமாகச் செயற்பட்டனர். இந்தச் செயற்பாடுகளுக்கான ஒழுங்கமைப்பை வித்தியாசாலையின் அதிபர் த.ஸ்ரீகமலநாதன் மற்றும் ஆசிரியர்கள் மேற்கொண்டிருந்தனர். (ஐ-54)









மன்னார் மறைமாவட்டத்தின் பேசாலை புனித வெற்றிநாயகி ஆலய பங்கு மக்களால் பேசாலையில் பாரம்பரிய உடக்கு பாஸ் கடந்த வியாழன், வெள்ளி ஆகிய இரு தினங்கள் காண்பிக்கப்பட்டன. நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஆண்டகை கிங்ஸிலி சுவாம்பிள்ளை ஆண்டகை மற்றும் குரு முதல்வர் அருட்பணி விக்ரர் சோசை அடிகளார் ஆகியோர் அழைத்து வரப்படுகின்றமையையும் நிகழ்வை செப வழிபாட்டுடன் ஆரம்பித்து வைக்கின்றமையையும் காட்சியின் ஒரு பகுதியையும் படங்களில் காணலாம்.(ஐ-112)

# இந்தியா சிங்கள அரசுடன் சேர்ந்து ஈழத் தமிழரைக் கொன்று குவித்தது!

## நடிகர் ராஜ்கிரன் வேதனை

இந்தியாவும் சிங்கள அரசும் சேர்ந்து ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்களை அழித்துள்ளன. இந்த இன அழிப்பு மிகக் கொடூரமான ஒன்று. பல்லாயிரக்கணக்கான போராளிகளை சிங்கள அரசு சித்திரவதை செய்துள்ளது.

அவர்கள் எங்கு இருக்கிறார்கள்? என்ன நடந்தது என்பது குறித்து இதுவரை தெரியவில்லை. உலகத்திலேயே நடக்கக் கூடாத ஒரு கொடூரம் நடந்துள்ளது.

இவற்றையெல்லாம் பார்த்து நம்முடைய கருத்துக்களையும், ஆதங்கத்தையும் பகிர்ந்து கொள்ள முடியுமே தவிர, எதையும் செய்ய முடியாது.

இவ்வாறு தென்னிந்திய நடிகர் ராஜ்கிரன் வேதனை தெரிவித்துள்ளார்.


ஈழத் தமிழர்கள் விவகாரம் குறித்து வழங்கிய செவ்வி ஒன்றில் இந்த விடயத்தை அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஈழத்தமிழர்கள் பிரச்சினை என்பது 5 அல்லது 10 நிமிடங்களில் பேசி முடிக்கும் பிரச்சினை அல்ல. இது ஒரு உலக அரசியல்.

ஈழத் தமிழர்கள் பிரச்சினை குறித்து சில இந்தியக் கட்சிகள் பேசுவது எல்லாம் மிகப் பெரிய நாடகம்.

அவர்களுக்கே தெரியும் நம்மால் ஒன்றும் செய்ய இயலாது. ஏனெனில் ஈழத் தமிழர்கள் விவகாரம் என்பது மிகப்பெரிய உலக அரசியல்.



தங்களுடைய கட்சியைப் பலப்படுத்திக்கொள்வதற்காக ஈழத் தமிழர்கள் மற்றும் பிரபாகரன்பெயரைச்சிலர்பயன்படுத்திக் கொள்கிறார்கள்.- என்றார். (ஐ)

# இறந்த நிலையில் சிறுத்தைக் குட்டி மீட்பு!



கிளிநொச்சி, ஏப்.11

கிளிநொச்சி நகரில் இறந்த நிலையில் சிறுத்தைக் குட்டி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்துக்குப் பின்புறமாக உள்ள தனியார் காணிக்குள் இருந்து இது மீட்கப்பட்டுள்ளது.

இரவுவேளை, இந்த சிறுத்தை உள்நுழைந்த போது நாயால் கடிக்கப்பட்டு இறந்திருக்கலாம் என்று வன ஜீவராசி அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழமையான சிறுத்தைகள் மஞ்சள் புள்ளிகளுடன் காணப்படும் எனவும் ஆனால், இந்தச் சிறுத்தைக் குட்டி வெள்ளை நிறப் புள்ளிகளுடன் காணப்படுகிறது எனவும் வன ஜீவராசி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ-70)

# வவுனியாவில் ரயில் தடம் புரண்டு விபத்து!





வவுனியா ரயில் நிலையத்தில் இருந்து நேற்றுக் காலை புறப்பட்ட ரயில் தடம் புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

வவுனியா ரயில் நிலையத்தில் தரித்து நின்ற எரிபொருள் ஏற்றிச் செல்லும் ரயிலே இவ்வாறு தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்துத் தொடர்பில் தெரியவந்துள்ளதாவது:-

நேற்றுக் காலை 9.15 மணியளவில் திருத்த வேலைகளுக்காக ரயில் பாதையை மாற்றுவதற்காக பயணித்த எரிபொருள் ஏற்றும் ரயில், கட்டுப்பாட்டை இழந்து தடம்மாறி அருகில் இருந்த அரச விடுதியுடன் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா ரயில் நிலையப் பொலிஸார் மேற்கொள்கின்றனர்.இந்த விபத்தால் எந்தவோர் உயிர் சேதமும் ஏற்படவில்லை. இருப்பினும் அரச விடுதி கட்டடங்கள் சேதமாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தள்ளனர். (ஐ-100)

# நாட்டின் நிரந்தர சமாதானத்துக்கு இரத்த வங்கியே சிறந்த உதாரணம்



## சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜெயசுந்தர பண்டார தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.11

இன, மத வேறுபாடில்லாத இரத்தவங்கி, இந்த நாட்டில் நிரந்தர சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு ஓர் அற்புதமான உதாரணமாகும்.

சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜெயசுந்தர பண்டார இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் வைத்தியசாலைப் பணிப்பாளர் எம்.எஸ். இப்றாலெப்பை தலைமையில் இடம்பெற்ற மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து மேலும் கருத்துத் தெரிவித்துள்ளவை வருமாறு:-

துரதிஷ்டவசமாக எமது நாட்டில் இடம்பெற்ற ஆயுத முரண்பாடுகள் மனிதர்களைப் பிரித்து வைத்துப் பராமரிக்கும் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.

ஆனால், எமது இரத்த வங்கியில் குருதிக்கொடையாளர்களால் வழங்கப்பட்டு சேமித்து வைக்கப்பட்டிருக்கும் இரத்தத்தை எந்த நிபுணரும் பிரித்தறிந்து அது தமிழர்களுடையது, முஸ்லிம்களுடையது, சிங்களவர்களுடையது என்று அடையாளப்படுத்தி விட முடியாது.

தேவை ஏற்படும் போது யாருடைய இரத்தத்தை யாருக்கு ஏற்ற வேண்டும் என்று பாகுபாடுகாட்டப்படுவதில்லை.

தமிழர் ஒருவருடைய இரத்தம் சிங்களவர் ஒருவருக்கும் முஸ்லிம் ஒருவருடைய இரத்தம் தமிழர் ஒருவருக்கும் உயிர் காக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கும்.

இந்த நிலையை வைத்துப் பார்க்கும் போது இந்த வங்கியை ஒற்றுமைக்குச் சிறந்த உதாரணமாகக் காட்டலாம்.-என்றார். (ஐ)

# பனை சார்ந்த உற்பத்தி பயனாளிகளுக்கு வாழ்வாதார உபகரணங்கள் கையளிப்பு

## மத்திய கல்லூரியில் நாளை நிகழ்வு

மீள்குடியேற்றம், இந்துமத அலுவல்கள் அமைச்சின் வாழ்வாதார நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பனை அபிவிருத்திச் சபையால் பனைசார்ந்த உற்பத்திப் பயனாளிகளுக்கான வாழ்வாதார உபகரணங்கள் கையளிப்பும்,நூல் வெளியீட்டு விழாவும் நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், கௌரவ விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். அரச அதிபர் நா. வேதநாயகன், வடமாகாண பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் நா. கணேசன் ஆகியோர் கலந்துகொள்வர்.

# காந்தி நிலையம் நிறுவுநர் தின நிகழ்வு

உருத்திரபுரம் காந்தி நிலையத்தின் ஸ்தாபகரும் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் முன்னாள் தலைவருமான 'காந்தியதீபம்' சி.க.வேலாயுதபிள்ளையின் 24 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு காந்தி நிலைய சிறுவர் இல்லத் தலைவர் கா.கார்த்திகேசு தலைமையில் கிளிநொச்சி காந்தி நிலையத்தில் இடம்பெறவுள்ளன.

பிரதம விருந்தினராக மகாதேவ ஆச்சிரம சைவச் சிறுவர் இல்ல பொதுச் செயலாளர் பொன். நித்தியானந்தனும் சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி இந்துக் கல்லூரி அதிபர் கி. விக்னராசா, செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சிக் கிளைத் தலைவர் செ. சிவகுருநாதன், ஓய்வு நிலை ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பொ. தில்லைநாதன், பிரசித்த நொத்தாரிசு தா.அரியரட்ணம், ஓய்வு நிலை, விவசாய போதனாசிரியர் சி.துரைராசா ஆகியோரும் கலந்து கொள்வர்.

நிகழ்வின் சிறப்புரைகளை ஓய்வு நிலை அதிபர் கா. நாகலிங்கம், அகில இலங்கை காந்தி சேவா சங்கப் பொதுச் செயலாளரும் காந்தீயம் ஆசிரியருமான எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி, சங்கத்தின் பொருளாளர் மா.லீலாவிநோதன், நிர்வாக சபை உறுப்பினர் க. பிரமதீஸ்வரி, காந்தி நிலையச் செயலாளர் திருமதி செ.சோமசேகரம் பிள்ளை ஆகியோர் ஆற்றுவர்.

இந்நிகழ்வில் வெளியிடப்படவிருக்கும் நினைவு மலரின் முதற் பிரதியை முழங்காவில் வர்த்தகச சங்கத் தலைவர் மு.நவரெட்ணம் பெற்றுக் கொள்வார். (ஐ)

# கேள்விக் குறியாகியுள்ள நிலையில் மீனவர் படகு விடுவிப்பு விவகாரம்

## தமிழக ஊடகங்கள் பரபரப்புச் செய்தி வெளியீடு

மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் இந்திய அரசு இலங்கையிடம் நடத்திய பேச்சு தோல்வியில் முடிந்ததால், தமிழகப் படகுகள் விடுவிப்பு கேள்விக் குறியாகி உள்ளது என்று தமிழக ஊடகச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

மார்ச் மாதம் 6 இல் இராமேஸ்வரம் மீனவர் பிரிட்ஜோ சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம், தமிழக மீனவர்களிடம் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் கடந்த 7 ஆம் திகதி இந்திய வெளியுறவுச் செயலாளர் ஜெய்சங்கர், வேளாண்மை அமைச்சக செயலாளர்கள், மாநில மீன்துறை செயலாளர் ககன்தீப் சிங் பேடி ஆகியோர் இலங்கை வெளியுறவுச்செயலாளர், மீன்துறை அமைச்சரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இந்தப் பேச்சு தோல்வியடைந்ததால், தமிழக மீனவர்களின் படகுகளை இலங்கை விடுவிப்பது கேள்விக்குறியாகி உள்ளது என்று தமிழக ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, மார்ச் 6 இல் மீனவர் பிரிட்ஜோ சுட்டுக் கொல்லப்பட்ட இடத்தின் ஜி.பி.எஸ்., கருவி பதிவுகளை, இலங்கை அமைச்சரிடம் இந்திய அதிகாரிகள் ஒப்படைத்துள்ளனர் என்றும் அந்தச் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

## வாக்காளர்களுக்குப் பணம் வழங்கியமையின் எதிரொலி:

# ஆர்.கே. நகர் இடைத்தேர்தல் ரத்து: தேர்தல் ஆணையம் அதிரடி உத்தரவு!

சென்னை,ஏப்.11

சென்னை ஆர்.கே.நகரில் நாளை புதன்கிழமை நடைபெறவிருந்தஇடைத் தேர்தலை ரத்துச் செய்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு தலைமைத் தேர்தல் ஆணையம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

தலைமைத் தேர்தல் ஆணையர் நசிம் ஜைதி, தேர்தல் ஆணையர்கள் ஓ.பி.ராவத், ஏ.கே.ஜோதி ஆகியோர் தேர்தல் ரத்து உத்தரவில் கையெழுத்திட்டனர்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைவைத் தொடர்ந்து ஆர்.கே. நகரில் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. இதில், அ.தி.மு.க. அம்மா அணியின் டி.டி.வி தினகரன், அ.தி.மு.க. புரட்சித் தலைவி அம்மா அணியின் மதுசூதனன், தி.மு.க மருதுகணேஷ் உள்ளிட்ட 62 பேர் வேட்பாளர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டனர்.

ஆர்.கே.நகரில் வாக்காளர்களுக்கு அதிக அளவில் பணம் வழங்கப்படுவதாக முறைப்பாடுகள் எழுந்ததை அடுத்து, முறைகேடுகளைத் தடுப்பதற்காக அதிகாரிகள் மாற்றம், அதிக அளவிலான பார்வையாளர்கள் நியமனம் எனபல்வேறு நடவடிக்கைகளைத் தேர்தல் ஆணையம் மேற்கொண்டது. ஆனால், இவற்றை எல்லாம் மீறி வாக்காளர்களுக்குதலா 4 ஆயிரம் ரூபா வரை வழங்கப்பட்டது என தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் ஆதாரத்துடன் தேர்தல் அதிகாரியிடம் முறைப்பாடுகளை அளித்தன. இதையடுத்து, தேர்தல் ஆணைய செலவின பிரிவு இயக்குநர் விக்ரம் பத்ரா, ஆர்.கே. நகர் தேர்தலுக்கான சிறப்பு தலைமைத் தேர்தல் அதிகாரியாக நியமிக்கப்பட்டார். அவர், கடந்த 6 ஆம் திகதி சென்னை வந்து தேர்தல் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

### வருமானவரித்துறை சோதனை

இதற்கிடையில், அமைச்சர் விஜயபாஸ்கர், சமத்துவம் மக்கள் கட்சித் தலைவர் நடிகர் சரத்குமார் உள்ளிட்டோர் வீடுகளில் கடந்த 7 ஆம் திகதி வருமான வரித்துறையினர் சோதனை நடத்தினர்.இதில்,பல்வேறு முக்கிய ஆவணங்கள், பணம் என்பன கைப்பற்றப்பட்டனஎனத்தெரிவிக்கப்பட்டது.இந்நிலையில்,

ஆர்.கே.நகரில் வாக்காளர்களுக்கு அ.தி.மு.க. அம்மா கட்சி சார்பில் 89 கோடி ரூபா பணம் வழங்கப்பட்டதற்கான ஆதாரங்கள் ஊடகங்களில் வெளியாகின.

தமிழக சுகாதார அமைச்சர் விஜயபாஸ்கர் வீட்டில் வருமானவரித் துறையினர் நடத்திய சோதனையில் கண்டெடுக்கப்பட்ட ஆவணங்களில் இடைத்தேர்தல் பணக் கொடுக்கல்கள் தொடர்பான தகவல்கள் கிடைக்கப்பெற்றமையை ஆணையம்சுட்டிக்காட்டியுள்ளது.

### டில்லி பயணம்

பணம் வழங்கியமை, வருமான வரித்துறை சோதனை தொடர்பான அறிக்கைகளை தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி ராஜேஷ் லக்கானி, சிறப்பு தலைமைத் தேர்தல் அதிகாரி விக்ரம் பத்ரா ஆகியோர் தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பினர். இருவரையும் நேரில் வந்து விளக்கம் அளிக்கும்படி தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியது. இதைடுத்து விக்ரம் பத்ரா டில்லி சென்றார். அவரைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை தமிழக தலைமை தேர்தல் அதிகாரி ராஜேஷ் லக்கானியும் டில்லி சென்றார். இவர்கள் இருவரும் தலைமைத் தேர்தல் ஆணையர் நசிம் ஜைதியுடன் ஆலோசனை நடத்தினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆலோசனையின் அடிப்படையிலேயே ஆர்.கே.நகர் இடைத் தேர்தலை ரத்துச் செய்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

### தலைவர்களின் அதிரடியான கருத்துக்கள்

ப.சிதம்பரம்: ஆர்.கே. நகரில்வழங்கப்பட்ட பணம் கறுப்பா- வெள்ளையா?

டி.டி.வி.தினகரன் (அ.தி.மு.க. அம்மாகட்சி): ஆர்.கே.நகர் இடைத்தேர்தலை ரத்து செய்யப்பட்டிருப்பது ஜனநாயகப்படுகொலை.

துரைமுருகன் (தி.மு.க. (முதன்மை செயலர்): ஆர்.கே.நகர் இடைத் தேர்தல் ரத்து செய்யப்பட்டதால் தேசிய அளவில் தமிழகத்திற்கு ஏற்பட்ட தலைகுனிவுக்கு ஆளுங் கட்சியே காரணம். மானமுள்ள அரசு என்றால் ராஜிநாமா செய்ய வேண்டும் .

தமிழிசை சௌந்தரராஜன்: தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பு வரவேற்கதக்கது. குறிப்பாக நேர்மையாக தேர்தல் நடத்தும் சூழ்நிலைவரும்போது தேர்தல் நடத்தப்படும் என அறிவித்திருப்பது, மீண்டும் தேர்தல் நடந்தால் பணம் கொடுக்கும் செயற்பாடுகள் நடக்கும் எனகூறியவர்களுக் குப் பதிலடி.


தீபா: தேர்தலில் ரத்து செய்து பயன் இல்லை, பணத்தால் தேர்தலில் வெற்றி பெற நினைக்கும் வேட்பாளரைத் தகுதி நீக்கம் செய்ய வேண்டும்.

முத்தரசன்: தமிழகத்தில் பா.ஜ.க. காலூன்றவே இடைத்தேர்தல் ரத்து செய்யப்பட்டுள்ளது .

திருமாவளவன்: தேர்தல் ரத்தால் எந்த பிரயோசனமும் இல்லை. தேர்தல் நடைமுறையில் மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும். தேர்தல் ஆணையம் கடைசி நேரத்தில் பணம் வழங்கியமையைக் கண்டு பிடித்ததைப் போல், ரத்துச் செய்ததும் வேதனை அளிக்கிறது. -எனத் தெரிவித்தனர். (ச)

---

## ஜெ. கைரேகை பெற பணம் எதுவும் வாங்கவில்லை: அரச மருத்துவமனை வைத்தியர் பாலாஜி விளக்கம்!




ஜெயலலிதாவிடம் கைரேகை பெற்றதற்கு பணம் எதையும் பெறவில்லை. அமைச்சர் கொடுத்தனுப்பிய 5 லட்சம் ரூபா, லண்டன் டாக்டர் ரிச்சர்ட் பீலே தங்கிய ஹோட்டல் கட்டணம் தான் என்று சென்னை அரச பொது மருத்துவமனையின் மருத்துவர் பி.பாலாஜி தெரி வித்தார்.

வருமான வரிச் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட ஆவணம் ஒன்றில் 2016 ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் ஆம் திகதி சென்னை அரச பொது மருத்துவமனை மருத்துவர் பாலாஜிக்கு ரூ.5 லட்சம் வழங்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதை வைத்து, ஜெயலலிதாவின் பெருவிரல் ரேகையை பதிவு செய்தவர் டாக்டர் பாலாஜி. அதற்காக அவருக்கு 5 லட்சம் ரூபா கொடுக்கப்பட்டுள்ளது என்ற தகவல் சமூக வலைதளங்களில் வேகமாகப் பரவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜெயலலிதாவுக்கு சிகிச்சை அளிக்க லண்டன் வைத்தியர் ரிச்சர்ட் பீலே, 4 முறை சென்னை வந்தார். முதல் 3 முறை வந்தபோது, தாஜ் கோரமண்டல் ஹோட்டலில் தங்கினார். 4 ஆவது முறையாக வந்தபோது, அவரை ரெயின்ட்ரீ ஹோட்டலில் தங்குமாறு அப்பலோ மருத்துவமனை நிர்வாகம் கூறியிருந்தது. ஆனால், அவர் தாஜ் கோரமண்டல் ஹோட்டலிலேயே தங்கினார். அதனால் அப்பலோ மருத்துவமனை நிர்வாகத்தினர், அவர் தங்கியதற்கான கட்டணத்தை செலுத்த முடியாது என்றனர்.

இதுபற்றி சுகாதாரத் துறை அமைச்சர் விஜயபாஸ்கர் கவனத்துக்கு கொண்டு சென்றேன். அமைச்சர் உடனடியாகத் தனது உதவியாளரிடம் 5 லட்சம் ரூபாவை கொடுத்து அனுப்பினார். ஜெயலலிதாவிடம் ரேகை பதிவு செய்ததற்காக, நான் பணம் வாங்கியதாக தேவையில்லாமல் வதந்திகளை பரப்பி வருகின்றனர். - என்றார்.

மறைந்த முதல்வர் ஜெயலலிதா சென்னை அப்பலோ மருத்துவமனையில் தங்கி இருந்தபோது தஞ்சாவூர், அரவக்குறிச்சி மற்றும் திருப்பரங்குன்றம் தொகுதிகளுக்கு தேர்தல் நடந்தது. அ.தி.மு.க. வேட்பாளர் படிவங்களில் கட்சியின் பொதுச் செயலாளர் ஜெயலலிதாவின் கையெழுத்து இல்லை. அதற்குப் பதிலாக அவருடைய பெருவிரல் ரேகை பதிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

---

## நிர்வாணமாகப் போராடிய விவசாயிகள் கைது!

பிரதமர் அலுவலகத்திற்கு முன்பாக நேற்றுத் திங்கட்கிழமை நிர்வாணப் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழக விவசாயிகளை டில்லிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 28 நாள்களாகத் தமிழக விவசாயிகள் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

---

## சசிகலாவை 15 நாள்களுக்கு ஒருமுறைதான் சந்திக்கலாம்!

பெங்களூர் சிறையில் உள்ள சசிகலாவை சிறைத் துறை விதிகளின்படி இனி 15 நாள்களுக்கு ஒரு முறைதான் பார்வையாளர்கள் சந்திக்க முடியும் என்று சிறை நிர்வாகம் அறிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரி 16 ஆம் திகதியில் இருந்து மார்ச் 18 ஆம் திகதி வரை 31 நாள்களில் 28 பார்வையாளர்கள் சசிகலாவை சந்தித்துப் பேசியது தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் தெரிய வந்துள்ளது. இதனை அடுத்து, சசிகலாவுக்காக சிறை விதிகள் மீறப்படுகின்றன எனஎழுந்த முறைப்பாடுகளை அடுத்தே மேற்படி அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ச)

---

### ஆர்.கே.நகர் தேர்தல் ரத்து :

## தேர்தல் ஆணையத்தின் 21 பக்க அறிக்கை சொல்லும் மிக முக்கியமான காரணங்கள்!

சென்னை ஆர்.கே. நகர் இடைத்தேர்தலை ரத்துச் செய்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. அதற்கான 21 பக்க அறிக்கையில் முக்கியமான காரணங்களையும் வெளியிட்டுள்ளது.

முக்கிய காரணங்கள் வருமாறு:

- ஆர்.கே.நகர் தொகுதியில் வாக்காளர்களுக்கு பணம் வழங்கப்படுகிறது எனத் தேர்தல் ஆணையத்துக்குஏராளமானமுறைப்பாடுகள் கிடைத்துள்ளன.
- தமிழக சுகாதாரத் துறை அமைச்சர் விஜயபாஸ்கரின் வீடு உள்ளிட்ட இடங்களில் வருமான வரித்துறையினர் கடந்த வெள்ளிக்கிழமை அதிரடிச் சோதனை நடத்தினர்.
- விஜயபாஸ்கர் மற்றும் அவரது உறவினர்கள் வீடுகளில் 5 கோடி ரூபா ரொக்கப் பணம் சிக்கியது.
- டி.டி.வி. தினகரனுக்கு ஆதரவு தெரிவித்திருந்த நடிகர் சரத்குமார், அ.தி.மு.க. முன்னாள் எம்.பி.சிட்லபாக்கம் ராஜேந்திரன் மற்றும் எம்.ஜி.ஆர். பல்கலைக்கழக துணை வேந்தர் கீதாலட்சுமி ஆகியோரின் வீடு, அலுவலகம் உள்ளிட்ட 35 இடங்களில் வருமான வரிச் சோதனை நடைபெற்றது.
- அமைச்சர் விஜயபாஸ்கரின் உதவியாளர்களிடமிருந்து ரூ.3 கோடிக்கும் மேல் ரொக்கப் பணம் கைப்பற்றப்பட்டது.
- அமைச்சர்கள் விடுதியில் விஜயபாஸ்கருக்கு ஒதுக்கப்பட்ட அறையில் பணக் கொடுக்கல்களை எப்படி எல்லாம் நடத்த வேண்டும் என்ற விவரங்கள் அடங்கிய ஆவணங்களும் அங்கு கைப்பற்றப்பட்டுள்ளன.
- அ.தி.மு.க. சசிகலா அணி வேட்பாளர், அ.தி.மு.க. அம்மா அணியின் சார்பில் போட்டியிட்ட டி.டி.வி. தினகரனுக்கு ஆதரவு திரட்டுவதற்காக 89 கோடி ரூபா வரை செலவிடப்பட்டது எனச் சோதனையில் தெரியவந்தது.
- மொத்தம் உள்ள 2.6 லட்சம் வாக்காளர்களில் 85 சதவீதம் பேருக்கு தலா ரூ. 4 ஆயிரம் வீதம் 89 கோடி ரூபா ஒதுக்கப்பட்டதும் தெரிய வந்தது.
- கட்சியின் சில அமைச்சர்கள், மூத்த தலைவர்களிடம் வாக்காளர்களுக்கு கொடுப்பதற்காக பணம் பிரித்துத் தரப்பட்டிருந்ததும் வருமான வரி கைப்பற்றிய ஆவணங்கள் மூலம் தெரிய வந்துள்ளது. - என்றுள்ளது (ச)

## அசாத் பதவியில் இருக்கும் வரை சமாதானம் இல்லை

சிரியாவில் பசர் அல் அசாத் பதவியில் நீடிக்கும் வரையில் அங்கு சமாதானத்துக்கு இடம் கிடையாது என்று ஐக்கிய நாடுகள் அமைப்புக்கான அமெரிக்கப் பிரதிநிதி நிக்கி ஹலே தெரிவித்துள்ளார்.

சிரியாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதனை அமெரிக்க நிர்வாகம் விரும்புகின்றது என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

சீ.என்.என். செய்திச் சேவைக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும், ஐ.எஸ். தீவிரவாதிகளை இல்லாதொழிப்பதையே அமெரிக்கா முதன்மை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. சிரியாவில் ஆட்சி மாற்றம் விரைவில் ஏற்படும் என்றே எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டார். (எ)

# ஐ.எஸ். வசம் இருந்த விமானத் தளத்தை மீளக் கைப்பற்றியது சிரியக் கூட்டுப்படை



டமாஸ்கஸ், ஏப்.11

ஐ.எஸ் தீவிரவாதிகளின் வசமிருந்த இராணுவ விமானத் தளத்தை மீளக் கைப்பற்றியது அமெரிக்க ஆதரவு பெற்ற சிரிய கூட்டணிப் படை.

அந்த விமானத்தளம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைப்பற்றப்பட்டதோடு அது தொடர்பான புகைப்படம் சர்வதேச ஊடகம் ஒன்றால் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

அந்த இராணுவ விமானத் தளம், சிரியாவின் டக்பா அணைக்கட்டின் தெற்கே உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், டக்பா நகர் ஐ.எஸ் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிரியாவின் ரக்கா நகரிலிருந்து சுமார் 40 கிலோமீற்றர்கள் தொலைவிலேயே மேற்குறித்த டக்பா நகர் அமைந்துள்ளது. அந்த நகரையே ஐ.எஸ் தீவிரவாதிகள் அவர்களது தாக்குதல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திட்டமிடல் மற்றும் வெளிநாடுகள் மீதான நேரடித் தாக்குதல்கள் தொடர்பில் டக்பா நகரிலிருந்து முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று குறிப்பிடப்படுகின்றமை சுட்டிக் காட்டத்தக்கது. (எ)

## இந்தோனேஷியாவில் தீவிரவாதிகள் 6 பேர் சுட்டுக்கொலை

இந்தோனேஷியாவின் கிழக்கு ஜாவாப் பகுதியில், ஐ.எஸ். தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த 6 தீவிரவாதிகள் நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்கு முன்னரே தீவிரவாதிகள் சென்ற வாகனம் பொலிஸாரால் உளவு பார்க்கப்பட்டது. அதைத் தொடர்ந்து வாகனத்தில் இருந்த 3 பேர் தாக்குதலுக்கு ஆயத்தமானதையடுத்து பொலிஸாரும் பதில் தாக்குதல் நடத்தினர். டர்பன் பகுதியில் சுற்றிவளைக்கப்பட்ட அந்த 6 பேரும், பொலிஸாரின் தாக்குதலால் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கனடா அருங்காட்சியகத்தில் உலகின் மிகப்பெரிய இருதயம்



உலகின் மிகப்பெரிய இருதயமான நீர் வாழ் உயிரினமான நீலத் திமிங்கிலத்தின் இருதயம், கனடாவின் அருங்காட்சியகத்தில் வைக்கப்படவுள்ளது.

76.5 அடி கொண்ட ஒரு இறந்த நீலத்திமிங்கலத்தைக் கொண்டு ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சி செய்துள்ளனர். அதன் உடலை அறுத்து இருதயத்தைப் பார்த்த போது 180 கிலோவில் ஒரு காரின் அளவுக்கு இருதயம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் கனடாவின் ஆராய்ச்சியாளர் ஒருவர் கூறுகையில், உலகிலேயே முதல் முறையாக தற்போது தான் இறந்த நீலத் திமிங்கிலம் பாதுகாக்கப்பட்டு ஆராய்ச்சிக்காக உபயோகப்படுத்தப்படுகிறது. இந்தத் திமிங்கிலத்தின் இருதயமும், எலும்புகளும் அருங்காட்சியகத்தில் வைக்கப்படும்' என்று கூறினார். (எ)

## வெனிசுலா ஜனாதிபதிக்கு எதிராக ஒரு லட்சம் பேர் திரண்டு போராட்டம்



தென் அமெரிக்க நாடான வெனிசுலாவில் எதிர்க்கட்சித் தலைவருக்கு பதவி வகிக்கத் தடை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஒரு லட்சம் பேர் திரண்டு அங்கு போராட்டத்தில் ஈடுபட்டனர். நிகோலஸ் மதுரோ ஜனாதிபதியாகப் பதவி வகித்து வருகிறார். அவரது நடவடிக்கைக்கு பொது மக்கள் மத்தியில் எதிர்ப்பு ஏற்பட்டது. எனவே எதிர்க்கட்சித் தலைவர் ஹென்ரிக் கேப்ரில்ஸ் தலைமையில் பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இதற்கிடையே அடுத்த ஆண்டு வெனிசுலாவில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற உள்ளது. அதில் ஜனாதிபதி மதுரோவை எதிர்த்து கேப்ரில்ஸ் போட்டியிட உள்ளார். இந்நிலையில் அவர் அரசியலில் பதவி வகிக்க 15 ஆண்டு காலம் தடை விதிக்கப்பட்டது. அதன்மூலம் அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. அது பொது மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் வெனிசுலா தலைநகர் கராகஸ் உள்ளிட்ட பல நகரங்களில் நேற்று முன்தினம் போராட்டம் வெடித்தது. ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் பேரணியில் கலந்து கொண்டனர்.

# சோமாலியாவில் கார்க் குண்டுத் தாக்குதல்! தப்பினார் இராணுவத்தளபதி; 13 பேர் சாவு!!



மொகாடிஸ், ஏப்.11

சோமாலியாவில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட கார் குண்டு தாக்குதலில் புதிய இராணுவத்தளபதி, அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். 13 பேர் கொல்லப்பட்டனர்.

சோமாலியாவில் அரச படைகளுக்கு எதிராக அல் சகாப் தீவிரவாதிகள் கடுமையாகப் போரிட்டு வருகின்றனர். இராணுவத்தை குறிவைத்து தற்கொலைப் படைத் தாக்குதல்கள், வெடி குண்டு தாக்குதல்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. இதனால் அங்கு பாதுகாப்பு நிலைமை மோசமடைந்துள்ளது.

இதனையடுத்து சோமாலியாவை போர்ப்பகுதியாக பிரகடனம் செய்த ஜனாதிபதி முகமது அப்துல்லாகி முகமது, இராணுவம் மற்றும் புலனாய்வுப்பிரிவு தலைவர்களை மாற்றினார். இராணுவத்தின் புதிய தளபதியாக ஜெனரல் முகமது அகமது ஜிமாலி நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில், புதிய இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்றுள்ள முகமது அகமது ஜிமாலி, நேற்றுமுன்தினம் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுடன் பாதுகாப்பு அமைச்சகத்தில் இருந்து வெளியே சென்றார். அவருடன் பாதுகாப்புப் படை வாகனங்கள் அணி வகுத்துச் சென்றன. அப்போது பாதுகாப்பு அமைச்சக வளாகத்துக்கு அருகே காரில் குண்டு ஒன்று திடீரென வெடித்துச் சிதறியது.

இதனால், அவ்வழியே சென்ற வாகனங்கள் தூக்கி வீசப்பட்டன. இதில், மினி பஸ்ஸில் சென்று கொண்டிருந்த 5 வீரர்கள், 8 பொதுமக்கள் என மொத்தம் 13 பேர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலுக்கு அல்சகாப் தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

அல் சகாப் தீவிரவாதிகளை சரண் அடைந்து அரச படையில் இணைவதற்காக ஜனாதிபதி 60 நாள்கள் பொதுமன்னிப்புக் காலம் வழங்கியுள்ள நிலையில் இந்தத் தாக்குதல் நடதியிருப்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## எகிப்தில் 3 மாதங்கள் அவசர நிலைமை தாக்குதலைப் பொறுப்பேற்றது ஐ.எஸ்.

கெய்ரோ, ஏப்.11

எகிப்தில் புகழ்பெற்ற கிறிஸ்தவ தேவாலயத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 44 ஆக அதிகரித்துள்ளது. அதையடுத்து தொடர்ந்தும் தற்போது மூன்று மாதங்கள் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.


ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்த தற்கொலைப் படையினர் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டனர் என்று அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளதுடன், மேலும் தொடர்ந்து இதுபோன்ற தாக்குதல்கள் நடத்தப் படும் என்று எச்சரித்துள்ளது.

தேவாலயங்களை குறிவைத்து நடத்தப்பட்ட இந்த தாக்குதல்களைத் தொடர்ந்து, எகிப்தின் தேசிய பாதுகாப்புச் சபையுடன் அந்நாட்டு ஜனாதிபதி அப்துல் பட்டாஹ் அல் சிசி அவசர கூட்டம் ஒன்றை நடத்தியுள்ளார்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்-

'ஜிகாதிகளுக்கு எதிரான தாக்குதல் மிகக் கடுமையாகவும் மோசமான தாகவும் இருக்கும்' என்றார்.

இம்மாத இறுதிப் பகுதியில் பாப்பரசர் பிரான்ஸிஸ் எகிப்துக்கு விஜயம் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில் ஐ.எஸ். தீவிரவாதிகளால் இந்தத் தாக்குதல் நடத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)



# தந்தை இறந்த சோகத்தை மறைத்து ரசிகர்களைச் சந்தோசப்படுத்தினார்

# ரிஷாப் பான்ட்

பெங்களூர், ஏப்.11

ரிஷாப் பான்ட் தந்தை இறந்த சோகத்தை மறைத்து மனதைத் தேற்றிக்கொண்டு களம் இறங்கினார். அவர் அதிரடியாக அரைசதமும் விளாசி ரசிகர்களைப் பரவசப்படுத்தியுள்ளார்.

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் கடந்த சனிக்கிழமை இரவு பெங்களூர் சின்னசாமி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் பெங்களூர் அணி 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டில்லி டேர்டெவில்ஸை வென்றது.

இதில் கேதர் ஜாதவின் அரை சதத்தின் (5 பவுண்டரி, 5 சிக்ஸருடன் 69 ரன்) உதவியுடன் பெங்களூர் அணி நிர்ணயித்த 158 ஓட்டங்கள் இலக்கை நோக்கி ஆடிய டில்லி அணியால் 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்கு 142 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது.

விக்கெட் காப்பாளர் ரிஷப் பான்ட் (57 ஓட்டங்கள், 36 பந்துகள், 3 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள்) கடைசி வரை போராடியும் பலன் இல்லை.

ஒட்டுமொத்த ஐ.பி.எல். கிரிக்கெட்டில் டில்லி அணியின் 76 ஆவது தோல்வி இதுவாகும். ஐ.பி.எல். இல் அதிக தோல்விகளைத் தழுவிய அணி டில்லி தான்.

இது தொடர்பில் அந்த அணியின் தலைவர் ஷாகீர்கான் கூறுகையில், '10 ஆட்டங்களில் 8 இல் இத்தகைய இலக்கை நாங்கள் வெற்றிகரமாகக் கடந்திருக்கிறோம். இந்த ஆட்டத்தில் எங்களுக்குச் சரியான இணைப் பாட்டம் அமையாதமையே தோல்விக்குக் காரணம்' என்று தெரிவித்துள்ளார்.


இதேவேளை, 19 வயதான டில்லி வீரர் ரிஷாப் பான்டின் தந்தை ராஜேந்திர பான்ட் (வயது 53) கடந்த புதன் கிழமை இரவு மரணம் அடைந்தார்.

இதையடுத்து ஹரித்வார் சென்ற ரிஷாப் பான்ட், தந்தைக்கு இறுதிச் சடங்குகளைச் செய்து விட்டு, கடந்த வெள்ளிக்கிழமை இரவு அணியுடன் இணைந் தார். மறுநாளே (அதாவது கடந்த சனிக்கிழமை) டில்லியின் முதல் ஆட்டம் என்பதால் அவர் விளையாடுவாரா? என்ற கேள்வி எழுந்தது.

ஆனால், அவரோ மனதைத் தேற்றிக்கொண்டு களம் இறங்கியமையுடன் அதிரடியாக அரைச்சதமும் விளாசி ரசிகர்களைப் பரவசப்படுத்தினார். டில்லி அணி தோற்றாலும், சோகத்தை மறைத்து களத்தில் அவர் செயற்பட்ட விதத்தை சச்சின் டெண்டுல்கர், ஷேவாக், யுவராஜ்சிங் உள்ளிட்டோர் வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

இது தெத்ர்பில் டில்லி அணியின் பயிற்சியாளர் பட்டி அப்டன் கூறுகையில் -

'அடுத்த சில நாள்கள் மட்டுமல்ல, ஐ.பி.எல். போட்டி முழுவதும் ஒட்டுமொத்த அணியும் ரிஷாப் பான்ட்டை அரவணைத்து அவருக்கு எல்லா



வகையிலும் ஆதரவாக இருப்போம்' என்றார்.

சக வீரர் கிறிஸ் மோரிஸ் (தென் ஆபிரிக்க நாட்டவர்) கூறும் போது, 'எனது தந்தை இறந்திருந்தால் இந்த நேரம் முதல் விமானத்தை பிடித்து தாயகம் திரும்பியிருப்பேன் என்று சக வீரர்களிடம் கூறினேன்.

எனக்காக எனது தந்தை எவ்வளவோ செய்திருக்கிறார். தந்தை மறைந்த ஓரிரு நாளில் ரிஷாப் பான்ட் விளையாடி இருக்கிறார். இது பற்றி அவரிடம் கேட்ட போது, 'இந்த மாதிரி கஷ்டமான சூழ்நிலையில் நான் விளையாடுவதையே எனது தந்தை விரும்பியிருப்பார்' என்று பதில் அளித்தார். இது அவரது மன உறுதியைக் காட்டுகிறது. வருங்காலத்தில் இந்திய அணியில் மிகப்பெரிய வீரராக ரிஷாப் பான்ட் உருவெடுக்கப் போகிறார்' என்று தெரிவித்துள்ளார்.

# இந்த வருட ஐ.பி.எல். தொடர் நாயகன் விருது டேவிட் வோர்னருக்கு!

## *ரிக்கி பொண்டிங் கூறுகிறார்*

*இந்தியாவில் தற்போது இடம்பெற்று வரும் பத்தாவது ஐ.பி.எல். தொடரின் தொடர்நாயகன் விருதை ஆஸ்திரேலியாவின் டேவிட் வோர்னர் தான்வாங்குவார் என்று ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார். இந்தியாவில் கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் ஐ.பி.எ.ல் தொடர் நடை பெற்று வருகிறது.*

*இந்நிலையில், இத் தொடரில் ஆண்டு தோறும் சிறப்பாகச் செயற்படும் வீரர்களுக்கு தொடர் நாயகன் விருது வழங்கப் படும். அந்தவகையில் இந்த ஆண்டுக்கான தொடர் நாயகன் விருதை ஐதராபாத் அணியில் இருக்கும் டேவிட் வோர்ன்தான் பெறுவார் என்று ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.*



*இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-*

*இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையே நடைபெற்ற பார்டர் கவாஸ்கர் ட்ராபியில் வோர்னர், 4 டெஸ்ட்களில் விளையாடி 193 ஓட் டங்கள் தான் எடுத்தார்.*

*கொஞ்சம் ஏமாற்றமளிக் கும் டெஸ்ட் தொடருக்குப் பின்னர் வோர்னர் ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடுகிறார். அதுவும் நடப்பு சம்பியனாக இருக்கும் ஓர் அணியின் தலைவராக களம் இறங்குகிறார். அவர் ஒரு தொடக்க ஆட்டக்காரராக உள்ளார். இந்த ஐ.பி.எல். தொடரை பொறுத்தவரை ஒரு தொடக்க துடுப்பாட்ட வீரரோ அல்லது ஒரு சுழற்பந்து வீச்சாளரோ தான் தொடர் நாயகனாக வருவார் என்று எதிர்பார்க்கிறேன். இதனால், வோர்னருக்கு தொடர் நாயகன் விருதைத் தட்டிச் செல்ல வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன என நினைக்கிறேன் என்றும் கூறியுள்ளார்.*

# சிவப்பு அட்டையை எதிர்கொண்டார் நெய்மர்; பார்சிலோனாவை வீழ்த்தியது மலகா அணி!

மலகா அணிக்கு எதிரான லாலிகா உதைபந்து லீக் போட்டியில் பார்சிலோனா அணி தோல்வி அடைந்துள்ளது. ஸ்பெயினில், உள்ளூர் கிளப் அணிகள் பங்கேற்கும் லா லிகா உதைபந்து தொடர் இடம்பெற்று வருகிறது.

இந்தத் தொடரில், மலகா நகரில் இடம்பெற்ற லீக் போட்டியில் பார்சிலோனா, மலகா அணிகள் மோதின. பார்சிலோனா வீரர் நெய்மர், 27 ஆவது நிமிடத்தில் மஞ்சள் அட்டையை எதிர்கொண்டார். 32 ஆவது நிமிடத்தில் மலகா அணியின் சான் டிரோ ராமிரஸ் காஸ்டிலோ முதல் கோல் அடித்தார். முதல் பாதி முடிவில் பார்சிலோனா அணி 0:1 என பின்தங்கி இருந்தது.


இரண்டாவது பாதியின், 65 ஆவது நிமிடத்தில் மீண்டும் மஞ்சள் அட்டையை எதிர்கொண்ட நெய்மர், சிவப்பு அட்டையை எதிர்கொண்டு வெளியேறினார். இதனால் பார்சிலோனா அணி 10 வீரர்களுடன் விளையாடியது. இதனைப் பயன்படுத்திக் கொண்ட மலகா அணிக்கு 90 ஆவது நிமிடத்தில் ஜானி ஒரு கோல் அடித்தார். ஆட்டநேர முடிவில் பார்சிலோனா அணி 0:2 என்ற கணக்கில் தோல்வி அடைந்தது.

**மாட்ரிட் முன்னிலை:**

மாட்ரிட் நகரில் நடந்த மற்றொரு




லீக் போட்டியில் ரியல் மாட்ரிட், அத்லெடிகோ மாட்ரிட் அணிகள் மோதின. விறுவிறுப்பான இந்தப் போட்டி ஆட்டநேர முடிவில் 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலை ஆனது. இதுவரை விளையாடிய 31 போட்டிகளில் 21 வெற்றிகள், 6 சமநிலைகள், 4 தோல்விகள் என 69 புள்ளிகளுடன் பார்சிலோனா அணி 2 ஆவது இடத்தில் உள்ளது. முதலிடத்தில் ரியல் மாட்ரிட் அணி (72 புள்ளிகள், 30 போட்டிகள், 22 வெற்றிகள், 6 சமநிலைகள் 2 தோல்விகள்) நீடிக்கிறது.



# கொல்கத்தா நைட் ரைடர்ஸை வீழ்த்தியது மும்பை இந்தியன்ஸ்!

மும்பை, ஏப். 11

ஐ.பி.எல். தொடரில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ், மும்பை இந்தி யன்ஸ் அணி கள் மோதிய போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி 4 விக்கெட் வித்தியா சத்தில் வெற்றி பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில், மும்பை அணி நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று களத் தடுப்பைத் தேர்வுசெய்தது.

கொல்கத்தா அணியின் கம்பீர், கிறிஸ் லின் ஆகியோர் தொடக்க வீரர்களாகக் களம் இறங்கினார்கள். இருவரும் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள்.

கொல்கத்தா அணியின் ஓட்ட எண்ணிக்கை 4.2 ஓவர்களில் 44 ஓட்டங்களாக இருக்கும் போது கம்பீர் 13 பந்து களில் 19 ஓட்டங்களை எடுத்து ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த உத்தப்பா 4 ஓட்டங்களில் வெளியேற, மற்றொரு தொடக்க வீரர் லின் 32 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். அதன் பின் வந்த மணீஷ் பாண்டே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த, யூசுப் பதான் (6 ஓட்டங்கள்), சூர்ய குமார் யாதவ் (17 ஓட்டங்கள்) சொற்ப ஓட்டங்களில் வெளியே றினர்.

பாண்டே இறுதிவரை ஆட்டம் இழக்காமல் 47 பந்துகளில் 81 ஓட்டங்கள் எடுக்க, கொல்கத்தா அணி 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 178ஓட்டங்கள் சேர்த்தது.

பின்னர் 179 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்றஇலக்குடன்மும்பைஅணிதுடுப்பெடுத்தாடியது. ஆரம்பம் முதல் சீராக ஓட்டங்கள் குவித்து வந்த மும்பை அணியின் ஆரம்ப ஆட்டக்காரர் களான படேல் 30 ஓட்டங்களையும், பட்லர் 28 ஓட்டங்களையும் குவித்து ஆட்டமிழந்தனர். பின் களமிறங்கிய ரணா அதிரடியாக விளையாடி 29 பந்துகளில் அரை சதம் கடந்து ஆட்டம் இழந்தார்.

இவரைத் தொடர்ந்து களமிறங்கிய ஆர்.ஜி ஷர்மா, கே. பாண்டியா மற்றும் பொல்லார்ட் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தாலும் எச்.எச். பாண்டியா 29 ஓட்டங்களைக் குவித்து மும்பை அணியின் வெற்றிக்கு வித்திட்டார். இவருடன் ஹர்பஜன் சிங் ஆட்டமிழக்காமல் ஓர் ஓட்டத்துடனே களத்தில் இருந்தார். இறுதியில் மும்பை அணி 19.5 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 180 ஓட்டங்களைச் சேர்த்து கொல்கத்தா அணியை 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

# குஜராத்தை 9 விக்கெட்டுகளால் வீழ்த்தி 2ஆவது வெற்றியை பெற்றது ஐதராபாத்


ஐதராபாத்தில் நடைபெற்ற போட்டியில் குஜராத்தை 9 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி ஐதரா பாத் அணி 2 ஆவது வெற்றியை ருசித்துள்ளது.

ஐ.பி.எல். தொடரின் நேற்று முன்தினம் இடம்பெற்ற முதல் ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஐதராபாத் - குஜராத் லயன்ஸ் அணிகள் மோதின. ஐதராபாத்தில் நடைபெற்ற இந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற ஐதராபாத் அணியின் தலைவர் வோர்னர் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் களமிறங்கிய குஜாராத் அணி, ஐதராபாத் அணியின் இளம் சுழற்பந்து வீச்சாளரான ரஷித் கானின் சுழலில் முக்கிய விக்கெட் டுக்களை இழந்தது. மெக்கல்லம் (5 ஓட்டங்கள்), ரெய்னா (5 ஓட்டங்கள்), பிஞ்ச் (3 ஓட்டங்கள்) ஆகியோர் அடுத்தடுத்து ஆட்டம் இழந்தனர்.

முக்கிய மூன்று வீரர்கள் வெளியேறியமையால் குஜராத் அணியால் அதிக அளவு ஓட்டங்களைக் குவிக்க முடியவில்லை. ராய் (31 ஓட்டங்கள்), கார்த்திக் (30 ஓட்டங்கள்), வெயின் ஸ்மித் (37 ஓட்டங்கள்) ஆகியோர் ஓரளவு ஓட்டங்களைச் சேர்த்தமையால் குஜராத் அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 135 ஓட்டங்களை எடுத்தது. ரஷித்கான் 4 ஓவரில் 19 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

136 ஓட்டங்கள் எடுத் தால் வெற்றி என்ற இலக்குடன் சன்ரைசர்ஸ் அணி களம் இறங்கியது. தொடக்க வீரர்களாக வோர்னரும், தவானும் களம் இறங்கினார்கள். தவான் 9 ஓட்டங்கள்கள் எடுத்த நிலையில் பிரவீண் குமார் பந்தில் ஆட்டம் இழந்தார்.



அடுத்து வோர்னர் உடன் ஹென்றிக்ஸ் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி சிறப்பாக விளையாடி அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றது. வோர்னர், ஹென்றிக்ஸின் அரைச் சதத்தால் சன்ரைசர்ஸ் அணி 15.3 ஓவரில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 140 ஓட்டங்கள் எடுத்து 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

வோர்னர் 45 பந்துகளில் 6 பவுண்டரிகள், 4 சிக்ஸர்களுடன் 76 ஓட்டங்களுடனும், ஹென்றிக்ஸ் 39 பந்துகளில் 52 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காமல் இருந்தனர். இந்த வெற்றி யின் மூலம் ஐதராபாத் அணி இரண்டு வெற்றிகளை பெற்றுள்ளது. குஜராத் அணி இரண்டு போட்டிகளிலும் தோல்வியடைந்துள்ளது.

# சம்பியன்ஸ் கிண்ணத்துக்கான வீரர்கள் தெரிவின்போது களத்தடுப்பும் உடற்தகுதியும் கவனிக்கப்பட உள்ளன!

## இலங்கை அணியின் முகாமையாளர் தெரிவிப்பு

சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கை சாதிக்க வேண்டுமானால் வீரர்களின்களத்தடுப்பும் உடற்தகுதியும் உயரிய நிலையில் இருக்க வேண்டும் என இலங்கை கிரிக்கெட் அணியின் முகாமையாளர் அசன்க குருசின்ஹ தெரிவித்துள்ளார் .

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை கிரிக்கெட் அணியின் முகாமையாளராக எனது ஆரம்பப் பயணம் திருப்திகரமாக அமையவில்லை. ஏனெனில், பங்களாதேஷை டெஸ்ட் தொடரில் வெற்றி கொண்டிருக்கவேண்டிய எதிர்பார்ப்பு தாராளமாக இருந்தது.

ஏனெனில் கடந்த காலங்களில் இலங்கையிடம் பங்களாதேஷ் வாங்கிக் கட்டிய அணியாகவே இருந்தது.

இதற்கு முன்னர் ஏழு டெஸ்ட் தொடர்களில் பங்களாதேஷை இலங்கை தொடர்ச்சியாக வெற்றி கொண்டிருந்தது. எனினும், டெஸ்ட் தொடரில் மட்டுமல்லாமல் சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் தொடர், சர்வதேச இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடர் ஆகிய மூன்றும் 1:1 என்ற சமநிலையிலேயே முடிவடைந்தது.

இதன்மூலம் பங்களாதேஷ் முதல் தடவையாக எந்தத் தொடரிலும் இலங்கையிடம் தோல்வி அடையாமல் நாடு திரும்பியுள்ளது. இந்த முடிவுகள் எமக்கு பொருத்தமானவை அல்ல.


இந்த மூன்று தொடர்களிலும் நாங்கள் வெற்றி பெற்றிருக்க வேண்டும். சொந்த மண்ணில் விளையாடியதால் மூன்று தொடர்களையும் சமப்படுத்தினோம் என்று கூறுகின்றமை சரியல்ல.

கடைசி சர்வதேச இருபதுக்கு 20 போட்டியில் 177 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி துடுப்பாட்டத்தில் சோபிக்கத் தவறியதால் தோல்வியைத் தழுவியதுடன் மஷ்ராபே மோட்டாஸா வெற்றியுடன் இருபதுக்கு 20 போட்டியிலிருந்து விடைபெற்றார்.

கடைசிப் போட்டியைப் பொறுத்தமட்டில் துடுப்பாட்டம் ஏமாற்றம் அளிக்கின்றது. ஆடுகளத்திற்கு எவ்விதத் தொடர்புமில்லை. ஆனால், ஏதோ ஒன்று எங்கோ பிழைத்து விட்டது. இவற்றுக்குப் பதில் கூறுவது இலகுவல்ல. இதுதான் நாட்டிலுள்ள அதி சிறந்த ஆடுகளம். முதல் ஐந்து துடுப்பாட்டக்காரர்கள் பிரகாசித்திருக்க வேண்டும். இங்கு ஓட்டங்களைப் பெறமுடியாதென்றால் அது பிரச்சினையாகத் தான் இருக்கப்போகின்றது.

களத்தடுப்பில் அதீத ஆற்றல்களை வெளிப்படுத்துபவர்களே சம்பியன் கிண்ணத்திற்கான தேர்வுக்கு தகுதி உடையவர்கள் என்பதில் நானும் தெரிவுக்குழுத் தலைவரும் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளோம்.

களத்தடுப்பு தொடர்பில் வீரர்களுக்கென சில திட்டங்களை வைத்துள்ளோம். வீரர்கள் திடகாத்திரத்துடன் இருந்தால் அவர்கள் களத்தடுப்பு, துடுப்பாட்டம், பந்துவீச்சு ஆகிய



சகலவற்றிலும் சிறப்பாக செயல்படுவர். உள்ளூர் போட்டிகளில் அதிக ஓட்டங்களைக் குவித்தார்கள் என்ற காரணத்திற்காக யாரையும் தெரிவு செய்வதில்லை என்ற தெளிவான தகவலைத் தெரிவுக்குழுத் தலைவரும் நானும் வெளியிட்டுள்ளோம்.

களத்தடுப்பில் வீரர்கள் குறிப்பிட்ட தராதரத்தை அடைவதுடன் உடற் தகுதியும் உயரிய் நிலையில் இருப்பது அவசியம்'.- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பொறுப்புக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) குட்பட்ட சின்ன அடம்பன் இராசபுரத்தில் கட்டப்பட்ட 150 வீடுகளைப் பயனாளிகளிடத்தில் கையளிக் கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் –

எமது நாட்டின் முன்னாள் பிரதமர் டேவிட் கமரூன் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து உங்களுடைய முதலமைச்சருடன் பேசியிருந்தார். இங்குள்ள அவலங்கள் குறித்து அறிந்து கொண்டார். இது தொடர்பில் அவர் கவனம் செலுத்தி ஐக்கிய நாடுகள் சபையில் தெரிவித்திருந்தார்.

இங்கு நடந்த மனிதவுரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் தொடர்பில் அவர் வலியுறுத்தியிருந்தார். இலங்கைக்கு சில நிபந்தனைகளை விதிக்க வேண்டும் என அவர் தெரிவித்திருந்தார். 2015 ஆம் ஆண்டு ஜெனீவா கூட்டத்தொடரிலும், ஏன் கடந்த மாதம் நடைபெற்ற கூட்டத் தொடரிலும் உங்கள் தொடர்பில் நானும் குரல் கொடுத்தேன். சில விடயங்களையும் குறிப்பிட்டிருந்தேன். அவரும் நாங்களும் சேர்ந்து உங்கள் பிரச்சினைகள் தொடர்பில் தொடர்ந்தும் கரிசனை செலுத்தி வருகின்றோம்.

ஜெனீவாக் கூட்டத் தொடரில் உங்கள் பிரச்சினை தொடர்பில் நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். சில விடயங்களை குறிப்பிட்டு வருகின்றோம். எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டது போல தற்போதைய அரசாங்கம் முன்னைய அரசாங்கத்தை விட மாறுபட்ட அரசாங்கமாக இருக்கிறது.

தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தி வருவதனை நாங்கள் அறிகின்றோம். நாம் இந்த அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்ப்பது ஓரளவு நடவடிக்கைகளை அல்ல. அரசு மேலும் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

உங்களுடைய சாதாரண வாழ்க்கை வழமைக்குத் திரும்பவும் இந்த அரசாங்கம் நடவடிக்கைளை முன்னெடுக்க வேண்டும். இங்குள்ள உயர்பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட வேண்டும். பாதுகாப்பு வலயங்களில் உள்ள முகாம்கள் அகற்றப்பட வேண்டும் என்பது குறித்தும் நாங்கள் கூடிய கவனம் செலுத்துகின்றோம்.

உங்களுடைய இடங்கள் குறித்து அரசாங்கம் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என இந்த இடத்தில் கேட்டுக் கொள்கின்றோம். அதனை முறையாக செயற்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம். உங்களுடைய வாழ்வாதாரம் மற்றும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

அந்த வகையில் உங்கள் சொந்தக் காணிகளில் நீங்கள் குடியேற அனுமதி வழங்கவேண்டும் என எதிர்பார்க்கின்றோம். அனைத்து மக்களும் உடனடியாக மீள்குடியேற்றப்பட வேண்டும். இதுதான் கடைசி மீள்குடியேற்றம் எனக் கூறும் அளவுக்கு நிலமை மாறவேண்டும்.

உள்நாட்டுப் போரில் இறந்தவர்கள் தொடர்பில் பொறுப்புக் கூறல் என்ற அடிப்படையில் ஒரு நீதியான விசாரணை நடைபெற வேண்டும் என எதிர்பார்க்கின்றோம். ஐ.நா. மனிதவுரிமை கவுன்ஸிலில் இலங்கை அரசாங்கமும் இணை அனுசரணை வழங்கிக் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தில் இவை எல்லாம் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனை அரசாங்கம் நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும்.

இங்கு இருக்கின்ற உங்களுடைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் போன்று நாங்கள் இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும், ஐ.நாவிலும் உங்களுக்காகத் தொடர்ந்தும் குரல் கொடுப்போம். இப்படி இப்படி செய்யுங்கள் என நாங்கள் இந்த அரசாங்கத்தைத் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம்.

தனிநபர்களாக இவ்வாறான பெரிய பணிகளைச் செய்வது கடினமானதாக இருக்கலாம். ஆனால் லைக்கா சுபாஸ்கரன் அவர்கள் ஒரு தனிநபராக இருந்து இவ்வாறு ஒரு வேலையைச் செய்திருப்பது இங்கு சிறப்புக்குரியது. நீண்ட காலமாக இடம்பெயர்ந்து இருந்த மக்களுக்கு இவ்வாறான வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டமையையிட்டு நான் மகிழ்வடைகின்றேன்.

இனி நீங்கள் யுத்த சூழலில் வளரப்போவதில்லை. இங்கு சிறுவர் பூங்கா இருக்கிறது. அமைதியான சூழல் இருக்கிறது. இந்தச் சூழலில் தான் உங்களுடைய பிள்ளைகள் வளரப்போகிறார்கள். அதேபோன்று இந்த நாடு வெறுமனே அமைதியாய் மட்டும் தோன்றாமல் மத நல்லிணக்கம் மற்றும் ஏனைய நல்லிணக்கங்களுடன் இருக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

புலம்பெயர் தமிழர்களுக்கும் அல்லிராஜா சுபாஸ்கரன் ஓர் எடுத்துக்காட்டாக இருக்கிறார். இங்குள்ள பொதுப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அவர்கள் முன்வர வேண்டும். – என்றார். (உ-100)

## உலகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நிலவுகின்றது என சபாநாயகர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவின் 25 ஆண்டு கால அரசியல் வாழ்க்கையை எடுத்துக்கூறும் 'கிழக்கின் வாசல்' நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று காத்தான்குடியில் இடம்பெற்றபோது அங்கு உரையாற்றுகையிலேயே சபாநாயகர் இவ்வாறு கூறினார்.

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என அனைவரும் இணைந்து 1948 ஆம் ஆண்டு சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டனர். நாமும் சிங்கப்பூர், துபாய் நாடுகளைப் போன்று முன்னோக்கிச் செல்ல வேண்டும். இதற்காக சகல மக்களும் ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டும்.

தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் என எவராக இருந்தாலும் எவரையும் பிரித்து அளவிட முடியாது. தற்போது நாட்டில் புதிய அரசியல் ஏற்பட்டுள்ளது.

சுயாதீன ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. தேர்தல்களில் மக்கள் தமது மனச்சாட்சிக்கு ஏற்றப்படி வாக்களிக்கக்கூடிய நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது. – எனவும் சபாநாயகர் கூறினார். (ம)

## மக்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நிற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது என அக்கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

ஒரு கட்சி ஒரு கொள்கையை நோக்கி மக்களை வழிநடத்திச் செல்ல வேண்டுமே தவிர, மக்களுக்கு பின்னால் ஒளித்து நிற்கக் கூடாது என்றும் அவர் கூறினார்.

வவுனியா மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினர்.

வடக்கு – கிழக்கில் கடந்த ஒரு மாத காலத்திற்கு மேலாக உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை மேற்கொள்ளும் காணாமல் போனவர்களின் உறவினர்களுக்கு கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இதுவரை ஆதரவு வழங்கவில்லை என்றார் அவர்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 12 ஆயிரம் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களை விடுதலை செய்த நிலையில், தற்பொழுது சிறைகளில் உள்ள 120 அரசியல் கைதிகளை நல்லாட்சி அரசாங்கத்தினால் ஏன் விடுவிக்க முடியாது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கேள்வியெழுப்பினார்.

தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தலைமைகள் மிக மோசமாக, பிற்போக்குத்தனமாக, அரசாங்கத்திற்குப் பின்னால் நிற்கின்றன எனவும் அவர் வேதனையுடன் சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

## நிறைவேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஆட்சி முறை நல்லது என்ற கருத்து சரியானது அல்ல.

தேர்தல்களின் போது சிறுபான்மையினரின் ஆதரவு தேவைப்பட்டாலும் கூட ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படும் ஒவ்வொருவரும் பெரும்பான்மையினருக் காகவே பணியாற்றுகின் றனர்.

எனவே, இந்த முறையின் ஊடாக சிறுபான்மையினர் நீதியைப் பெற முடியும் என்பது தவறானது.

தமிழ் மக்களின் ஒப்புதலுடன் ஒரு புதிய அரசமைப்பை உருவாக்காமல், தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமாயின், புதிய அரசமைப்பு அவசியமானது. தற்போதைய அரசமைப்போ, இதற்கு முந்திய அரசமைப்புகளோ தமிழ் மக்களின் பங்களிப்பின்றியே உருவாக்கப்பட்டவை. எனவே நாம் புதியதொரு யுகத்துக்குள் நுழைவதானால், நாம் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டிய தேவை உள்ளது.

பெரும்பான்மையான மக்கள் அரசமைப்பை மாற்றுவதில் ஆர்வம் கொண்டிருக்கவில்லை. ஏனென்றால் தலைவர்கள் இந்த விடயத்தை மக்களிடம் கொண்டு செல்லவில்லை. இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து உருவாக்கியுள்ள கூட்டு அரசு, புதிய அரசமைப்பை உருவாக்குவதற் கான இந்தப் பெறுமதி மிக்க வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அரசின் தற்போதைய போக்கு நாட்டுக்கு சிக்கலை ஏற்படுத்தும்

### எச்சரிக்கிறார் சிறிவிமல தேரர்

அரசாங்கம் தானாகவே பல பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டு அவற்றுக்கு மத்தியில் தனது பயணத்தை மேற்கொள்ளத் தயாராகி வருகின்றது என கெட்டம்பே ராஜோபவனாராம விகாரையின் விகாராதிபதி வண. கெப்பெடியாகொட சிறிவிமல தேரர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் இவ்வாறு பயணித்தால், நாடு பாரிய சிக்கலில் விழுந்துவிடும். எதிர்க்கட்சி இதற்கு பொறுப்புக் கூற வேண்டும். எந்த எதிர்க் கட்சியும் நாடாளுமன்றத்தில் இதற்குக் எதிராகக் குரல் எழுப்ப வேண்டும் எனவும் தேரர் மேலும் கூறியுள்ளார்.

மஹிந்த சார்புக் குழு நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல். பீரிஸ் நேற்று தேரரைச் சந்திக்கச் சென்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ம)

## மருத்துவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வெளியிடும் போதே இவ்வாறு கூறினார்.

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் அங்கிருந்து வெளியேறியதும், அவர்களை மாகாணப் பதிவின் கீழ் கொண்டுவர ஆலோசிக்கப்படுகின்றது. இந்த நிலையில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் வெறுமனே தொழிற்சங்க நோக்கத்தை மையமாகக்கொண்டு இந்த விடயத்தில் தலையிடுகின்றனர் என அமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளார். (ம)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அல்லிராஜா சுபாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்திற்கு இலங்கை அரசாங்கம் அனுமதியினையும் ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ள அவர், இதற்கான பொறுப்பை லைக்காவின் சுகாதாரப் பிரிவின் தலைவி பிரேமா சுபாஸ்கரனிடம் ஒப்படைக்கிறார் என, அதற்கு திருமதி. பிரேமா சுபாஸ்காரன் விருப்பம் தெரிவித்துள்ளார் எனவும் கூறினார்.

ஈழத் தமிழர்களின் நல்வாழ்விற்காகப் பல நற்செயற்றிட்டங்களை மேற்கொண்டு வரும் லைக்காவின் ஞானம் அறக் கட்டளையின் மக்கள் சேவைக்கான மற்றுமொரு முயற்சியான இந்த சுகாதாரத் திட்டத்திற்கு, இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

வவுனியா பூந்தோட்டம் நலன்புரி முகாமில் கடந்த 25 ஆண்டு காலமாக அடிப்படை வசதிகளற்ற நிலையில் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வந்த மக்களின் வீட்டுத் தேவையை லைக்காவின் ஞானம் அறக்கட்டளையின் ஊடாக பூர்த்தி செய்து வைத்த சந்தர்ப்பத்தில், தமது புதிய விருப்பத்தை அவர் இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்.

அத்துடன், 150 என்று அல்லாமல் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 600 வீடுகளை அமைக்கும் தமது திட்டம் வெற்றியளிக்கும் என்றும் அவர் அங்கு நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சுமார் 23 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள, 150 வீடுகளைக் கொண்ட – லைக்கா கிராமத்தை – பயனாளிகளுக்கு கைளிக்கும் நிகழ்வு, நேற்று வவுனியா சின்னடம்பன் பகுதியில் நேற்று நடைபெற்றது.

லைக்கா ஞானம் அறக் கட்டளையின் தலைவர் திருமதி. ஞானாம்பிகை அல்லிராஜா, நிறுவுநர் திரு. சுபாஸ்கரன் அல்லிராஜா ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளிடம் வீடுகளைக் கையளித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா எம்.பி., நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவரும், ரெலோ தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. உட்படப் பல பிரமுகர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

லைக்கா குழுமத்தின் தலைவர் சுபாஸ்கரனும் குழுவினரும் கொழும்பிலிருந்து விசேட ஹெலிக்கொப்டரில் வவுனியா வந்தனர். அவர்களுடன் கூடவே ஹெலிக்கொப்டரில் சுமந்திரன் எம்.பியும் வருகை தந்தார்.

இந்த நிகழ்வுக்காகத் திருகோணமலையிலிருந்து வாகனத்தில் வவுனியாவுக்கு வருகை தந்த எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், நிகழ்வு முடிந்து சுமந்திரன் சகிதம் ஹெலிக்கொப்டரில் கொழும்பு திரும்பினர். (உ)

## கேப்பாபிலவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நாம் ஒருபக்கம் போராடிக் கொண்டிருக்க, அரசும் அரசியல்வாதிகளும் மௌனமாக இருக்கும் இந்த நிலை தொடர முடியாது. இதற்கு ஒரு தீர்வு காணப்பட்டே ஆகவேண்டும். இதற்காக இன்று தமிழ் அரசியல்வாதிகளைச் சந்தித்துக் கலந்துரையாட இருக்கின்றோம் என மக்கள் கூறினர்.

வடக்கில் உள்ள தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் அனைத்து நாடாளுமன்ற உறுப் பினர்கள் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்களையும் இந்தச் சந்திப்புக்கு வருகை தருமாறு தாங்கள் அழைத்துள்ள னர் என மக்கள் தெரிவித்துள்ளனர்.

அனைவருக்கும் தனித்தனியே தொலைபேசி வாயிலாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கேப்பாபிலவில் மக்களின் போராட்டக் களத்தில் இந்தச் சந்திப்பு நடைபெறும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

எங்கள் போராட்டத்தை நிறுத்துவதற்காகவும் காலத்தைக் கடத்துவதற்காகவும் நிலம் விடுவிப்பு தொடர்பாக பல்வேறு கதைகள் கூறப்படுகின்றன. ஆனால், அவை அர்த்தமற்ற கதைகள் என்று எமக்குத் தெரியும். இந்த நிலையில், எமது பிரதிநிதிகள் இந்தப் போராட்டம் மற்றும் நிலம் விடுவிப்பு தொடர்பாக என்ன நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை இன்று அறிய முடியும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (ம)

# எமது சூழலைப் பாதுகாப்பதற்கு ஒவ்வொருவரும் முயல வேண்டும்

## வடக்கு மாகாண அமைச்சர் டெனிஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.11

தொற்று நோய்கள் அற்ற சூழலாக எமது சூழலைப் பாதுகாப்பதற்கு நாம் ஒவ்வொருவரும் முயல வேண்டும்.

-இவ்வாறு வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச சபையால் நடத்தப்பட்ட சூழலை சுத்தமாக வைத்திருக்கும் செயற்றிட்ட ஒன்று கூடல் கடந்த சனிக்கிழமை கொக்குவில் ஸ்ரீ இராம கிருஷ்ண வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

நமது வீடு மற்றும் சுற்றுப் புறத்தை நாம் சுத்தமாக வைப்போமானால் நிச்சயமாக ஆரோக்கியமான ஓர் வாழ்வை நாம் வாழமுடியும். நமது



மக்கள் இந்த விடயத்தில் மனதளவில் மாற்றப்பட வேண்டும்.

ஒரு சிலர் தமது வீட்டுக் கழிவுகளை உக்க முடியாத பெரிய பொலித்தீன் பைகளில் போட்டு வீதிவழியாக வந்து ஆள் நடமாட்டம் இல்லாத வீதிகளில் அல்லது ஆள்கள் இல்லாத வீடுகளின் அருகில் வீசிச் செல்கின்றனர். அவ்வாறு செய்வது சரி என்று அவர்கள் எண்ணுகின்றனர்.

நாம் நமது கிராமம், நமது மாவட்டம், நமது நாடு சுத்தமாக இருக்க வேண்டும், ஆரோக்கியமாய் வாழவேண்டும் என்று எப்போது சிந்திக்கின்றோமோ அப்போது தான் இந்த நிலை மாற்றமடையும். அதேபோல தற்போது பெருகிவரும் டெங்கு மற்றும் ஏனைய சூழல் சுத்தமின்மையால் பரவும் நோய்களில் இருந்து நாம் நம்மையும் நமது பிள்ளைகளையும் காத்துக்கொள்ள நிச்சயமாக நாம் இந்த விடயத்தை சிந்தித்தாக வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் சமூகத்தின் மீது அக்கறையுள்ளவர்களாக இருப்போமானால் நிச்சயமாக எதிர்காலத்தில் சுத்தமானஓர்இலங்கையை நோயற்ற மக்களது வாழ்வையும் காணமுடியும்.- என்றார்.

நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.தவராஜா, வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களான பா.கஜதீபன், ச.சுகிர்தன், இ.ஆனோல்ட் , வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் டி.சிவராஜலிங்கம், யாழ். மாவட்ட வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் எஸ்.ஜெகநாதன் மற்றும் நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

# தென்கிழக்குப் பல்கலையில் பகிடிவதை; 30 நாள்களுக்கு வகுப்புத் தடை!


பகிடிவதை சம்பவத்துடன் தொடர்புடைய தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் அறிவியல் பீடத்தின் 18 மாணவிகள் உள்ளிட்ட 28 மாணவர்களுக்கும் 30 நாள்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வகுப்புத்தடை ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

புதிய மாணவர்களைக் கடந்த 6 ஆம் திகதி பகிடிவதைக்கு உள்ளாக்கிய குற்றச்சாட்டில், 18 மாணவிகள் மற்றும் 10 மாணவர்கள், பகிடி வதைக்கு பயன்படுத்தப்பட்ட சில உபகரணங்களுடன், பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

புதிய மாணவர்களின் தமிழ் மாணவிகள் தலைமுடியை இருபுறமும் பின்ன வேண்டும் மற்றும் சிங்கள மாணவிகள் தலைமுடியை தனியான பின்னலாக போட்டு வரவேண்டும் என்று இரண்டாம் வருட மாணவர்கள் கட்டாயப்படுத்தியுள்ளனர். அத்துடன், புதிய மாணவ, மாணவிகள் பகிடிவதைக்கு உட்படுத்தப்படும் கால எல்லைக்குள் உள்ளாடைகள் அணியவும் இந்த மாணவர்கள் தடைவிதித்துள்ளனர். மேலும், வயிற்றுவலி காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு வேப்பிலை பானம் மற்றும் மிளகாய் என்பவற்றை உண்ணுமாறு கட்டாயப்படுத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# முதியோர் இல்லத்துக்கு புலம்பெயர் நிதியுதவி



புலம்பெயர்ந்த தாயக உறவுகளால் உதவி வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ் மன்னார் பட்டித்தோட்டம் பிரதேசத்தில் அமைந்துள்ள சந்தோம் முதியோர் இல்லத்துக்கு அவர்களின் ஒரு நாள் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் 18 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் சுவிஸ் கிளை உறுப்பினர் விஜயநாதன் ரட்ணகுமார் தனது தந்தையாரான வைத்திலிங்கம் விஜய நாதனின் ஓராண்டு நினைவு தினத்தை முன்னிட்டு முதியோர்க்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை பெற்றுக்கொடுப்பதற்காக இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதி சந்தோம் முதியோர் இல்ல நிர்வாகியிடம் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்) மன்னார் மாவட்ட செயற்குழு உறுப்பினர் இரா.அந்தோனிப்பிள்ளை கையளித்தார்.(ஐ)

# கைத்தொழில் உற்பத்தியில் இந்த வருடம் வளர்ச்சி நிலை

கடந்த 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில், இலங்கையின் கைத்தொழில் உற்பத்தி கடந்த பெப்ரவரி மாதம் 1.1 சத வீதம் வளர்ச்சியடைந்துள்ளது.

குடிசன மற்றும் புள்ளி விவரவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள கைத்தொழில் உற்பத்திகள் தொடர்பான மாதாந்த சுட்டியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் கைத்தொழில் உற்பத்தி 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 102.0 ஆகக் காணப்பட்டுள்ளது.

இந்த நிலையில், 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 103.1 ஆக இலங்கையின் கைத்தொழில் உற்பத்தி அதிகரித்துள்ளது.

இதற்கமைய, உலோகம் அல்லாத கனிமப் பொருள்களின் உற்பத்தி 23.1 வீதமாகவும், அடிப்படை உலோகப் பொருள்கள் 12.8 வீதமாகவும் அதிகரித்துள்ளன. மின்சார உற்பத்திப் பொருள்கள் 9.6 வீதமாகவும் மற்றும் உணவு உற்பத்தி 1.5 வீதமாகவும் அதிகரித்துள்ளன என்று குடிசன மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களத்தின் தரவுகள் தெரிவித்துள்ளன.(ஐ)




# மன்னிப்பு ஓர் அருமருந்து

இறைவன் நம் மீது காட்டும் மன்னிப்பும், இரக்கமும் நாம் அதை பிறருக்கு வெளிப்படுத்த வேண்டும் என்பதற்கே.

மன்னிப்பு என்ற மதிப்பீட்டுக்கு உயிர் கொடுத்தவர் இயேசு. இறைவன் நமக்குத்தரும் மன்னிப்பு அனுபவம் என்பது சுழற்சியானது. அவர் நமக்கு கொடுத்ததை, நாமும் பிறருக்கு கொடுக்க வேண்டும். இந்த சுழற்சி நின்று விடும் போது மனிதநேயமும், பிறரன்பும் இல்லாமல் போய்விடும். நம்மில் பலர் உடலில், உள்ளத்தில், உறவுகளில் நோயாளிகளாக இருக்கின்றோம்.

இந்த நோய்களுக்கு காரணிகளாக இருப்பது அறியாமை, பிடிவாதம், மனக்கசப்பு, பகை, வெறுப்பு, கோபம் ஆகியவையே. இதற்கு காரணமானவர்களை நாம் மன்னிக்கும் போது மன்னித்த வர்களை ஏற்று, அன்பு செய்து, அவர்களுக்கு உத வும்போது வானக தந்தையின் மக்களாக நாம் சான்று பகரமுடியும்.

நண்பர்களையும், பகைவர்களையும் ஒரே விதமாக பார்க்கும் மனப்பக்குவம் மன்னிப்பின் முழுமையை காட்டுகிறது. மன்னிக்கும் போது மனதில் ஆற்றல் பெருகும். மகிழ்ச்சி அதிகரிக்கும். எனவே மன்னிப்பு ஓர் அருமருந்து. நாம் ஒருவரை ஒருவர் மன்னிக்காத போது நம்மை இறைவன் மன்னிக்க வேண்டும் என எதிர்பார்ப்பது எந்த வகையில் நியாயம்? பிதாவே, இவர்கள் செய்கிறது இன்னதென்று அறியாமல் செய்கிறார்கள். இவர்களை மன்னியும் என்றார் இயேசு.

எனவே, பிறர் நமக்கு எதிராக எந்த வகையிலும் செய்கிற துரோகங்கள், குற்றங்களை மனதார மன்னிப்போம். நாம் மாறினால் இந்த உலகமே மாறும். அப்போது தான் அன்பு, அமைதி, மகிழ்ச்சி, உண்மை, சமத்துவம், சகோதரத்துவம் போன்ற மதிப்பீடுகள் ஓங்கி உயர்ந்து நிற்கும்.

-டி.ஜெபஸ்டின்.

# மணவாளக் கோலம்

யாழ்ப்பாணம்,ஏப்.11

யாழ். வண்ணை வடகிழக்குக் கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய மணவாளக் கோல உற்சவம் இன்று செவ்வாய்க் கிழமை காலை 6 மணிக்கு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி, மூலமூர்த்தி பூஜை ,வசந்த மண்டபப் பூஜை என்பன இடம்பெற்று விநாயகப் பெருமான் வீதி உலா வருவார். (ச)

# பொலிஸாரின் பிள்ளைகளுக்கு வவுனியாவில் கற்றல் உபகரணம்





வவுனியா, ஏப்.11

வன்னி பிராந்தியத்தில் பணியாற்றும் பொலிஸாரின் பிள்ளைகளில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 25 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. அத்துடன் அவர்கள் சுற்றுலாவுக்கும் அழைத்துச் செல்லப்பட்டனர்.

வன்னி பிராந்திய பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமையில் நேற்றுமுன்தினம் வவுனியா பிரதான பொலிஸ் நிலைய வளாகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

சமாதான விகாரையில் இடம்பெற்ற சிறப்புப் பூஜை வழிபாடுகளின் பின்னர் மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வவுனியா உதவிப்



பொலிஸ் அத்தியட்சகர் சிசிரகுமார, வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சோமரத்ன விஜயமுனி, மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பொலிஸ் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-100)





மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயத்தில் பங்குனித் திருநாள் பொங்கல் நேற்று பக்தி பூர்வமாக நடைபெற்றது. பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் ஆலயத்தில் ஒன்றுகூடி அம்மனுக்குப் பொங்கல் இட்டு அருட்கடாட்சம் பெற்றனர்.

## திருமலை விபத்தில் இளம்பெண் சாவு

திருகோணமலை – அலஸ் தோட்டம் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் இளம் பெண் ஒருவர் உயிரிழந்தார். மோட்டார் சைக்கிளுடன் வான் மோதி விபத்துக்குள்ளானதில் திருகோணமலை, முருகாபுரி இலக்கம் 2 இல் வசித்து வந்த கே.பிரியதர்சினி (வயது 29) என்பவரே உயிரிழந்தார்.

திருகோணமலையிலிருந்து நிலாவெளி சென்ற வான் அதே பக்கமாகச் சென்ற மோட்டார் சைக்கிளை முந்திச்செல்ல முற்பட்டபோது அலஸ்தோட்டம் கடற்கரைப் பகுதியிலிருந்து திருமலை நகருக்கு செல்வதற்காகச் சென்று கொண்டிருந்த பெண்ணுடன் மோதியது.

இதனால் மேற்படி பெண் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். விபத்துடன் தொடர்புடைய சாரதியை உப்புவெளிப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (மு)




## பொத்துஹர விபத்தில் மூவர் பலி!

பொத்துஹர பகுதியில் ஓட்டோ ஒன்றுடிப்பருடன் நேற்று மாலை மோதி விபத்துக்குள்ளானதில் தந்தை, மகள் மற்றும் இன்னொரு பெண்ணை மூவர் உயிரிழந்தனர் என பொத்துஹர பொலிஸார் தெரிவித்தனர். (உ)





அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகனுமான நாமல் ராஜபக்ஷ எம்.பி. நேற்று தங்காலையில் உள்ள தங்களது குடும்ப இல்லமான கால்டன் இல்லத்தில் தமது குடும்பத்தவருடன் 31 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார். அப்போது எடுக்கப்பட்ட படங்கள்.

### பிலக்குடியிருப்பு, புதுக்குடியிருப்பு, கேப்பாபிலவில்

## படை வெளியேற்றத்தை வலியுறுத்தி சிவமோகன் எம்.பியும் உண்ணாவிரதம்



முல்லைத்தீவு மாவட்டத்தில் பிலக்குடியிருப்பு, புதுக்குடியிருப்பு, கேப்பாபிலவு ஆகிய இடங்களில் உள்ள மக்களின் காணிகளில் இருந்து இராணுவமும் விமானப் படையும் உடனடியாக வெளியேற வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்திற்கு முன்பாக ஏற்கனவே மக்கள் அடையாள உண்ணாவிரதம் இருந்து வரும் நிலையில், சிவமோகன் எம்.பியும் மக்களுடன் உண்ணாவிரதத்தில் குதித்துள்ளார். அவரது செயலாளர் அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளச்செழியன், லவகுசன் மற்றும் காணி உரிமையாளர்கள் மேலும் பலரும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்தனர்.


உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட சிவமோகன் எம்.பி. கருத்துத் தெரிவிக்கையில் –

மக்களின் காணிகளை சட்டத்துக்கு முரணாக அபகரித்த இராணுவத்தின் நடவடிக்கைகளை மாவட்டச் செயலாளரும் பிரதேச செயலாளரும் அரசுக்குத் தெரிவிக்கப் பின்நிற்பது கவலைக்குரியது.

ஆண்டாண்டு காலமாக நாம் ஆண்டு வந்த காணியை அற்ப சொற்ப காரணம் காட்டி அரசுக்குத் தாரை வார்க்க முற்படுகின்றனர். அது தமது பதவிகளைத் தக்க வைப்பதற்காகவே ஆகும்.

அரச அதிகாரிகளின் தவறான நடவடிக்கைகள் காரணமாகவே மக்கள் தொடர் போராட்டத்திலும் உணவு, நீர் ஒறுப்புப் போராட்டத்திலும் குதித்து அரசியல் ரீதியான தீர்வைக் கோரி நிற்கின்றார்கள். – என்றார். (மு)

## 50 ஆவது நாளைக் கடந்தது கிளிநொச்சியில் போராட்டம்



காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கிளிநொச்சியில் மேற்கொண்டு வரும் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று ஐம்பதாவது நாளை எட்டியது.

யுத்தம் முடிவடைந்து எட்டு வருடங்கள் ஆகின்ற நிலையில், படையினரிடம் கையளிக்கப்பட்டுக் காணாமற்போன தங்களுடைய உறவுகள் தொடர்பில் அரசாங்கம் உரிய பதிலை வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்து, பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்த போதும், எந்தவித பதில்களும் கிடைக்காத நிலையில், உறவினர்கள் கிளிநொச்சியில் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை, வவுனியாவில் 46 ஆவது நாளாகவும், முல்லைத்தீவில் 34 ஆவது நாளாகவும், மருதங்கேணியில் 27ஆவது நாளாகவும், திருகோணமலையில் 37ஆவது நாளாகவும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்டம் நேற்றுத் தொடர்ந்தது.

மேற்படி போராட்டங்களுக்குப் பல்வேறு தரப்பினரும் ஆதரவு தெரிவித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (மு)

STUDY IN ABROAD
O/L தகைமையுடன் நீங்கள் விரும்பும் நாட்டில் உங்கள் உயர் கல்வியைத் தொடர
Winstar Visa Consultants

| | | |
|---|---|---|
| UK | CANADA | AUSTRALIA |
| USA | SWISS | NEWZEALAND |

★ நீங்கள் செலுத்தும் பணத்திற்கு 100% உத்தரவாதம்
★ வங்கி நிலுவை ஏற்பாடுகள்
★ 100% விசா பெற்றுக்கொள்ள சிறந்த ஆலோசனைகள்
2018 Jan இல் செல்வதற்கான பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன
மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் மட்டுமே வழங்கப்படும்
18-04-2017 இற்கு முன்னர்
பதிவு செய்பவர்களுக்கு ielts வகுப்புக்கள் மற்றும் ielts பரீட்சைக் கட்டணம் இலவசம்
4 வருடங்களாக மக்கள் மனதை வென்று இயங்கும் ஒரு நிறுவனம்
WINSTAR VISA CONSULTANTS
106, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி.
021 300 4641
(C327)